# விருதுநகர் மாவட்ட வரலாறு


ஆசிரியர்கள்

முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்
தொல்லியல் அலுவலர்

தொ. சந்திரவாணன்
காப்பாட்சியர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
தரமணி, சென்னை - 600 113
2001

# விருதுநகர்
# மாவட்ட வரலாறு

# விருதுநகர் மாவட்ட வரலாறு


ஆசிரியர்கள்

**முனைவர் மா. செந்தில் செல்வக்குமரன்**

தொல்லியல் அலுவலர்

**செ.ா. சந்திரவாணன்**

காப்பாட்சியர்



வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தரமணி, சென்னை - 600 113

2001

முதற் பதிப்பு 2001 — 500 பிரதிகள்

வெளியீடு எண் : 148

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

விருதுநகர் மாவட்ட வரலாறு

ஆசிரியர்கள்

முனைவர் மா, செந்தில் செல்வக்குமரன்

செ. சந்திரவாணன்

விலை ரூ.

அச்சிட்டோர்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

தரமணி, சென்னை - 600 113

# பொருளடக்கம்


| வ. எண் | ஊர்ப்பெயர்கள் (அகரவரிசை) | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | முன்னுரை | |
| 1. | அருச்சுனாபுரம் | 1 |
| 2. | அருப்புக் கோட்டை | 2 |
| 3. | ஆவியூர் | 5 |
| 4. | இராசகுலராமன் | 6 |
| 5. | இராச பாளையம் | 7 |
| 6. | இருக்கண்குடி | 11 |
| 7. | இருஞ்சிறை | 14 |
| 8. | இலந்தைக்குளம் | 14 |
| 9. | ஈஞ்சார் | 15 |
| 10. | எதிர்க்கோட்டை | 18 |
| 11. | ஏழாயிரம்பண்ணை | 20 |
| 12. | கம்பிக்குடி | 21 |
| 13. | கல்குறிச்சி | 21 |
| 14. | கல்லுமடை | 22 |
| 15. | கல்லூரணி | 24 |
| 16. | குகன்பாறை | 24 |
| 17. | குண்டலக்குத்தூர் | 25 |
| 18. | குறண்டி | 25 |
| 19. | குலசேகர நல்லூர் | 27 |
| 20. | கொல்லங் கொண்டான் | 28 |
| 21. | கூமாப்பட்டி | 29 |

22. கொல்லம்பட்டி 31

23. கோட்டையூர் 34

24. கோலவார்பட்டி 34

25. கோவிந்தநல்லூர் 36

26. கோவிலான் குளம் 36

27. சாத்தூர் 38

28. சிவகாசி 41

29. சிறுகுளம் 43

30. செங்குன்றாபுரம் 44

31. செட்டிக்குறிச்சி 46

32. செண்பகத் தோப்பு 47

33. செவ்வல்பட்டி 49

34. சேத்தூர் 51

35. சோழபுரம் 54

36. திருச்சுழி 59

37. திருத்தங்கல் 62

38. திருவண்ணாமலை 67

39. திருவில்லிபுத்தூர் 68

40. தேவதானம் 73

41. தொப்பலாக் கரை 77

42. நக்கனேரி 78

43. நதிக்குடி 79

44. நத்தத்துப்பட்டி 80

45. நத்தம்பட்டி 81

46. நரிக்குடி 82

47. நாங்கூர் 84

| | | |
|---|---|---|
| 48. | நாலூர் | 85 |
| 49. | நெடுங்கரைப்பட்டி | 86 |
| 50. | நென்மேனி | 87 |
| 51. | பந்தல்குடி | 88 |
| 52. | பள்ளிமடம் | 90 |
| 53. | பனையடிப்பட்டி | 91 |
| 54. | பாலவநத்தம் | 92 |
| 55. | பாவாலி | 93 |
| 56. | பாளையம்பட்டி | 94 |
| 57. | பாறைக்குளம் | 96 |
| 58. | புதுக்கோட்டை | 96 |
| 59. | புதுப்பட்டி (எம்) | 97 |
| 60. | புதுப்பாளையம் | 98 |
| 61. | புலியூரான் | 99 |
| 62. | மங்கலம் | 99 |
| 63. | மகாராசபுரம் | 100 |
| 64. | மடவார் வளாகம் | 102 |
| 65. | மல்லி | 104 |
| 66. | மன்னார் கோட்டை | 104 |
| 67. | மாறனேரி | 105 |
| 68. | மானகச்சேரி (த) | 106 |
| 69. | மானூர் | 107 |
| 70. | முடுக்கண்குளம் | 108 |
| 71. | முதுகுடி | 108 |
| 72. | மூவரை வென்றான் | 109 |
| 73. | மேட்டுப்பட்டி (ப) | 111 |

74. மேட்டுப்பட்டி (இரு) 112

75. ரெட்டியார்பட்டி (எம்) 112

76. வத்திராயிருப்பு 113

77. வரலொட்டி 114

78. வாகைக்குளம் (ப) 115

79. விருதுநகர் 116

80. விழுப்பனூர் 118

81. வீரசோழம் 119

82. வெங்கா நல்லூர் 120

83. வெம்பக் கோட்டை 121

84. வெள்ளூர் 122

85. வேப்பிலைப்பட்டி 123

86. பிற்சேர்க்கை 124

87. பானர்மேன் செப்பேடு 128

88. வெண்பக்கோட்டை செப்பேடு 132

# அணிந்துரை

முனைவர். ரா. கண்ணன், இ.ஆ.ப.,
ஆணையர், தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத் துறை

சுதந்திரப் போராட்டத்தின்போது காந்தியடிகளின் வருகை கண்டும், காமராசர், குமாரசாமிராஜா முதலிய பெருந்தலைவர் களைத் தந்தும், சுதந்திரத்திற்குப்பின் சிறுதொழில் வணிகத்தில் சிறப்புற்றும் உழைப்பின் உயர்வை உலகிற்கு உணர்த்திய மாவட்டம் விருதுநகர் மாவட்டமாகும்.

இம்மாவட்டத்தின் தொன்மைச் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில், விருதுநகரில் தமிழ்நாடு அரசு தொல்லியல் மற்றும் அருங்காட்சியகத்துறை ஒரு அருங்காட்சியகத்தைப் புதிதாக அமைத்துத் தொல்லியல் சேவையில் ஈடுபட்டு வருகிறது. மேலும் இம்மாவட்டச் சிற்பச் செழிப்பு வெளிப்படும் வகையில் "விருதுநகர் மாவட்ட நாயக்கர் சிற்பங்கள்" என்ற நூலையும் அரசு அருங்காட்சியகம் கி.பி. 2001ல் வெளியிட்டுள்ளது. தற்பொழுது "விருதுநகர் மாவட்ட வரலாறு" என்ற இந்நூலை தொல்லியல் துறை வெளியிடுகிறது. மாவட்டந் தோறும் அருங் காட்சியகம், மாவட்டந் தோறும் வரலாற்று வழிகாட்டி நூல் என்ற தமிழக அரசின் கொள்கையின் அடிப்படையில் இந்நூல் வெளிவருவதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

அருச்சுனாபுரம் முதலாக வேப்பிலைப்பட்டி இறுதியாக திருவில்லிப்புத்தூர் முதலிய சிறப்புமிக்க 85 ஊர்களில் கிடைக்கும் தொல்லியல், வரலாறு, காசியல், கல்வெட்டியல், கலையியல் செய்திகளுடன் அண்மைக் காலச் செய்திகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. தமிழகத்தில் ஊர்தோறும் ஒரு தொல்லியல் சான்று கிடைக்கும் என்ற அளவிற்குச் சான்றுகள் மலிந்துள்ளன. மாணவர்களும், பொதுமக்களும் அவற்றைக் கண்டறிந்து பேணிக்காப்பது வருங்காலச் சமுதாயத்திற்குச் செய்யும் ஒரு நற்பணியாகும்.

பிற்சேர்க்கையாக "ஊர்ப் பெயர்கள் இன்றும் - அன்றும்" என்றொரு பட்டியல் சேர்க்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகளின் துணைகொண்டு அமைக்கப்பட்டுள்ள பட்டியல், ஊர்ப் பெயராய்வு செய்யும் ஆய்வாளர்களுக்கு நல்லதொரு வரவாகும். பாவாலி என்னும் ஊரில் உள்ள மேஜர் பானர்மேன் செப்பேடு, ஆங்கிலேயர் ஆட்சி எந்த வகையில் ஜமீன்களையும், பாளையக்காரர்களையும் அடக்கித் தன் வலிமையைப் பெருக்கிக் கொண்டது என்பதற்கு நல்லதொரு சான்றாகும். இருக்கண்குடி போன்ற கல்வெட்டுகளில் குறிக்கப்படும் இலுப்பைக்குடிக்கிழவன் என்ற பாண்டிய நாட்டு அமைச்சரின் நீர்ப்பாசனக் கொடைகள் அரசு மேற்கொண்ட சமுதாயப் பணிகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

தொல்பழங்காலம் தொடங்கிப் பாண்டியர், சோழர், சோழ பாண்டியர், பிற்காலப் பாண்டியர், டெல்லி சுல்தான், தென்காசிப் பாண்டியர், வாணாதிராயர், சேரமார்த்தாண்டர்கள், நாயக்கர், ஆங்கிலேயர் என அனைத்து வரலாற்றுக்காலச் செய்திகளையும் உள்ளடக்கிய இம்மாவட்ட வரலாற்றினை நன்கு தொகுத்துத் தந்துள்ள இந்நூல் ஆசிரியர்களான முனைவர் மா. செந்தில் செல்வகுமரன் மற்றும் திரு. சொ. சந்திரவாணன் ஆகியோரைப் பாராட்டி மகிழ்கின்றேன். இந்நூலினை அச்சிட்ட தொல்லியல் அச்சுப்பிரிவினரையும், தொல்லியல்துறை தொழில்நுட்பப் பணிகளுக்குப் பொறுப்பான திரு. மா. சந்திரமூர்த்தி அவர்களையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

பொதுமக்களும், ஆய்வாளர்களும், மாணவர்களும் இதுபோன்ற நூல்களை ஆதரித்துத் தமிழகத் தொல்லியல் சான்றுகளைப் போற்றவும், பாதுகாக்கவும் வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

முனைவர் ந. கண்ணன், இ.ஆ.ப.

# முன்னுரை

மனித இனம் இப்புவியில் தோன்றிப் பல இலட்சம் ஆண்டுகள் ஆகிவிட்டன. அம்மனித இனத்தின் வரலாற்றை அவர்கள் விட்டுச் சென்ற அழியாப் பொருட்கள் மூலம் அறியமுடிகின்றது. தொடக்க காலத்தில் தன் உணவுத் தேவைக்கான விலங்குகளை; அவ்விலங்கு களின் உத்திகளைக் கையாண்டு வேட்டையாடி உணவாக உட் கொண்டு வந்தான். பின்னர் இயற்கையாகக் கிடைக்கும் பொருட் களைத் தன் தேவைக்கு ஏற்ப வடிவமைத்துக் கொண்டு வேட்டை யாடிய காலம் தான் பழைய கற்காலமாகும். உருண்டையான கற்களைச் செதுக்கி எடுத்துக் கைப்பிடியுடன் கூடிய கல்லாயுத மாக மாற்றிக் கொண்டான். இவ்வகைக் கல்லாயுதங்கள் சென்னைக்கருகிலுள்ள 'அத்திரப்பாக்கம்' போன்ற பகுதிகளில் கிடைக்கின்றன.

தென் தமிழ்நாட்டில் பழைய கற்காலத்தைச் சார்ந்த கற் கருவிகள் கண்டெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'ராபர்ட்புரூஸ்புட்' என்ற மேனாட்டறிஞர் விருதுநகர் மாவட்டத் தில் ஆவியூர் என்ற இடத்தில் பழைய கற்காலத்திய 'சில்லு' ஒன்றைக் கண்டெடுத்ததாகக் குறிப்பிடுகின்றார். ஆனால் அவர் கூறும் ஆதாரத்தைத் தவிர வேறு ஏதும் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டத்தைப் பொருத்தவரையில் கற்கால மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் மத்திய கற்காலத்திலிருந்துதான் கிடைக்கின்றன. அவர்கள் மிகச்சிறிய அளவிலான கற்கருவிகளைக் கொண்டு தங்களின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர் என்பது வரலாற்று உண்மை. அக்கற்கருவிகள் 'நுண்கற்கருவிகள்' என்று வரலாற்றுத் தொல்லியல் அறிஞர் களால் அழைக்கப்படுகின்றன. இவ்வகை நுண்கற் கருவிகள், இம்மாவட்டத்தில் பாயக்கூடிய காட்டாறுகளான 'அர்ச்சுனா நதி, அனுமன் நதி, வைப்பாறு, தேவியாறு' போன்ற ஆறுகளை ஒட்டியே கிடைக்கின்றன. இதே போன்று தூத்துக்குடி

மாவட்டத்துச் சாயர்புரம், குதிரை மொழித் தேரிகளிலும்; நெல்லை மாவட்டத்துப் பழைய குற்றாலம் அழுதகண்ணி ஆற்றின் கரையிலும் இக்கற்கருவிகள் கிடைத்திருப்பது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

விருதுநகர் மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய நுண்கற் கருவிகள் ஒருமுனை அறுப்பான், இருமுனை அறுப்பான், அம்புத் தலை வடிவம், பிறைவடிவம், வட்டவடிவம் போன்ற பல்வேறு வடிவில் காணக்கிடைக்கின்றன. இவை; விலங்குகளை வேட்டையாடியும், உணவுப் பொருட்களைச் சேகரித்தும், மீன் பிடித்தும் வாழ்ந்த மத்திய கற்கால மனிதன் பயன்படுத்திய கல் ஆயுதங்களாகும் எனத் தொல்லியல் வல்லுநர்கள் கூறியுள்ளனர். இச்சான்றுகள்; பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித இனம் இங்கு வாழத் தொடங்கிவிட்டது என்று கூறுவதற்கான சாத்தியக் கூறுகளை நமக்கு அளிக்கின்றன.

இக்கற்கருவிகள் இம்மாவட்டத்தில் ஈஞ்சாறு, திருத்தங்கல், பூவாணி, நரிக்குடி, சோழபுரம், பெருமாள்பட்டி, கிருஷ்ணாபுரம், சுக்கிரவாரப்பட்டி, செங்குளம், கடுவெயில்பட்டி, செங்குன்றாபுரம், புத்தூர், சஞ்சீவிமலை, கூனங்குளம், தேவதானம், புதுப்பாளையம், பள்ளிமடம் போன்ற பகுதிகளில் கிடைக்கின்றன. இக்கற்கருவிகள் பெரும்பாலும் 'குவார்ட்ஸ்', 'செர்ட்' எனப்படும் கல்லில் வெட்டியெடுக்கப்பட்டவையாகும்.

இக்காலகட்டத்தை அடுத்து பெருங்கற்காலப் பண்பாடு இம்மாவட்டத்துப் பல ஊர்களில் நிலவியிருந்துள்ளது என்பதைத் தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையிலிருந்தும், நுண்கற்கால மனிதனின் வாழ்க்கை முறையிலிருந்தும் மாறுபட்டுப் புதியதோர் வாழ்க்கை முறையைத் தமக்கென அமைத்துக் கொண்டவர்கள்தான் பெருங் கற்கால மனிதர்கள். இவர்கள் வேட்டையாடியும், உணவு சேகரித்தும் அடிக்கடி உறைவிடங்களை மாற்றிக் கொண்டிருந்தனர். அவர்களிடமிருந்து மாறுபட்டு உழவுத்தொழில் மற்றும் மேய்ச்சல் தொழில் செய்தும் ஒரே இடத்தில் தங்கிவாழும் பழக்கத்தை மேற்கொண்டனர்.

பெருங்கற்கால மனிதர்கள்; இறந்தவர்களைப் புதைப்பதற் காகப் பெரும்பலகைக் கற்களைப் பயன்படுத்தியதால் இவர்களை அடையாளம் காட்டுவதற்காகப் 'பெருங்கற்கால மனிதர்கள்' என்று தொல்லியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இப்புதை குழிகளில் கிடைக்கின்ற இரும்பு செம்பு -ஆயுதங் களும், கருப்பு சிவப்பு வண்ணக் கலையங்கள், தங்கத்தாலாகிய அழகிய வேலைப் பாடமைந்த சிறுசிறு உருவங்களும், மணிகளும், உணவு தானியப் பொருட்களும் இவர்களுடைய பண்பாட்டுச் சிறப்பையும், அறிவு வளர்ச்சியையும், கலை நுட்பத்தின் தேர்ச்சி யையும், ஆர்வத்தையும் எடுத்துக் காட்டும் சான்றுகளாகின்றன.

முதுமக்கட்டாழிகளும், கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும் இப்பண்பாட்டை விளக்கும் சிறந்த சான்றுகளாகும். இச்சான்றுகள் இம்மாவட்டத்து இராசபாளையம் அருகிலுள்ள சஞ்சீவிமலை அடிவாரத்தில் பெருமளவில் காணப்படுகின்றன. இதேபோன்று ஆவியூர், மகாராஜபுரம், தேவதானம், சோழபுரம், ஈஞ்சார், இருக்கண்குடி, நென்மேனி, திருத்தங்கல் போன்ற ஊர்களிலும் கிடைக்கின்றன.

இக்காலத்தைச் சங்ககாலம் என்று சொல்லக் கூடிய தமிழ் இலக்கியத்தின் பொற்காலத்தோடு ஒப்பிட்டுக் கூறுகின்றனர். ஆனால் கரிச்சோதனை - 14 (c14) என்ற அறிவியல் ஆய்வின்படித் தமிழகத்தில் முதுமக்கள் தாழிகளின் காலம் கி.மு. 800 என்று அறுதியிட்டுள்ளனர். மேற்படி ஊர்களிலெல்லாம் கி.மு. 800க்கு முன்பே பண்பாட்டோடு வாழ்ந்த மக்கள் இருந்துள்ளனர் எனத் தெரிகின்றது.

பெருங்கற்காலத்திலேயே தமிழகத்திற்கும் வெளிநாட்டிற்கும் வணிகத் தொடர்பிருந்தது என்பதைப் பல்வேறு தொல்லியல் சான்றுகள் உறுதி செய்கின்றன. அவற்றுள் வெளிநாட்டு நாணயங்களும், வெளிநாட்டுப் பானை ஓடுகளும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன.

விருதுநகர் மாவட்டத்தில், திருவில்லிபுத்தூர் மதுரை நெடுஞ் சாலையிலமைந்துள்ள 'நத்தம்பட்டி' என்ற சிற்றூர் வெளி நாட்டாரோடு தொடர்பு கொண்ட பெருமைக்குரியது. இவ்வூரில்

ஒன்பது ரோமானிய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஐந்து நாணயங்கள் 'இரண்டாம் தியோடோசியஸ்' காலத்தவையாகும். மூன்று நாணயங்கள் 'முதலாம் லியோ' காலத்தியவை. ஒரு நாணயம் 'ஜெனோ' காலத்தைச் சார்ந்ததாகக் கண்டறிந்துள்ளனர். இவை கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சேர்ந்தவை.

இவற்றைத் தவிர சங்ககாலத்தில் இம்மாவட்டத்தில் பாண்டியர் ஆட்சி நிலவியதற்கு எடுத்துக்காட்டாகத் திருத்தங்கலில் சதுர வடிவிலான பாண்டியர் நாணயங்கள் கண்டெடுக்கப் பட்டதைக் குறிப்பிடலாம். இச்சான்றால் சங்ககாலப் பாண்டியர்களே வெளிநாட்டவர்களோடு தொடர்பு கொண்டிருந்தார்கள் என அறியமுடிகின்றது.

தொல்லியல் சான்றுகளைத் தவிர எழுத்துச் சான்றுகளும் தொடர்ச்சியாக இம்மாவட்டத்தில் பாண்டியர் ஆட்சி நிலவியதை உறுதி செய்கின்றன. பிறகு சேரர், சோழர், பிற்காலப் பாண்டியர்கள், தென்காசிப் பாண்டியர்கள், விஜயநகர மன்னர்கள், நாயக்க மன்னர்கள், பாளையக்காரர்கள் பின்னர் ஆங்கிலேயர்கள் ஆட்சி செய்து வந்தனர் என்பதைக் கல்வெட்டுகள், செப்பேடுகள், காகிதச்சுவடிகள், வெளிநாட்டார் குறிப்புகள் ஆகியவை உறுதி செய்கின்றன.

## பராந்தக நெடுஞ்சடையன் கி.பி. 768-815

மாறவர்மன் இராசசிம்மனுக்கும் கங்கநாட்டு இளவரசி பூசுந்தரிக்கும் மகனாகப் பிறந்தவன். சின்னமனூர் பெரிய செப் பேட்டில் இம்மன்னன் வரகுணன் என்று குறிப்பிடப்படுகின்றான். அதனால் வரலாற்றாசிரியர்கள் இவனை முதலாம் வரகுணன் என்று குறிப்பிடுகின்றனர். இம்மன்னன் தனது மூன்றாம் ஆட்சி யாண்டில் 'வேள்விக்குடிச் சாசனத்தையும், 17ஆம் ஆட்சியாண்டில் ஸ்ரீவரமங்கலச் செப்பேட்டையும்' வெளியிட்டான். இவ்விரு செப்பேடுகளுமே பாண்டிய மன்னர்களைப் பற்றிய தெளிவான வரலாற்றைத் தமிழகத்திற்குத் தந்துள்ளன. இம்மன்னனைப் பற்றியும், இவனின் முன்னோர்கள் பற்றியும் செய்திகளைத் தந்துள்ளன.

இம்மன்னனைப் பற்றிய கல்வெட்டுகள் விருதுநகர் மாவட்டத்தில் பள்ளிமடம், திருத்தங்கல் ஆகிய பகுதிகளில் காணப்படுகின்றன. (S.I.I. Vol. XIV, INS 52, 34, 35, 39) இக்கல்வெட்டுகள் சமணப்பள்ளி இருந்ததையும் அதற்காகக் கொடுக்கப்பட்ட தானங்களைப் பற்றியும் குறிக்கின்றன. அவனது ஆட்சிக் காலத்தில் சமணமதமும் மேலோங்கியிருந்தது என்பதை இது வெளிப்படுத்துகிறது.

## ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் : கி.பி. 815 - 862

இவன் பராந்தக நெடுஞ்சடையனின் மகன் தளவாய்புரம் சாசனத்தில், 'கூடலர்கோன் ஸ்ரீபராந்தகன் குரைகழற் கோச்சடையர்க்குச் சேயாய் வெளிப்பட்ட செங்கண்மால் ஸ்ரீ வல்லபன் என்று குறிப்பிடப்படுவதின் மூலம் இதனை உறுதி செய்ய முடிகின்றது. இம்மன்னன் பல வெற்றிகளைக் கண்டபேரரசன். ஆதலால் இவனுக்கு 'ஏகவீரன்' 'பரச்சக்கர கோலாகலன்' என்ற சிறப்புப் பெயர்களும் உண்டு. விரிந்த பரப்பளவுடைய பல நாடுகளை ஆண்டமையால் 'அவனிப சேகரன்' என்ற பெயரும் இவனுக்குண்டு.

பள்ளிமடம் கல்வெட்டில் காணப்படும் குன்னூர் என்ற பகுதியில் இம்மன்னன் பெரும்போர் ஒன்றில் கலந்து கொண்டுள்ளான். குன்னூரானது 'கருநிலக்குடிநாடு' என்ற பகுதியில் அமைந்துள்ளது. இந்நாட்டைப் பற்றியும், இவ்வூர் பற்றியும் பிற்காலக் கல்வெட்டுகள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இம்மன்னனின் கல்வெட்டுகள் சாத்தூர் இருக்கண்குடி, நென்மேனி போன்ற ஊர்களில் காணப்படுகின்றன. அவை இம்மன்னனின் அதிகாரி ஆன 'இருப்பைக்குடிக் கிழவன்' என்பவன் பல சமுதாயப் பணிகளைச் செய்ததைக் கூறுகின்றன. அவை பெரும்பாலும் மதகுக் கல்வெட்டுகளாகக் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகளின் வழியாக அரசு அதிகாரிகள் போர்களில் மட்டுமின்றி உணவு உற்பத்தியைப் பெருக்கப் புதிய நீர் நிலைகளை ஏற்படுத்துவதிலும் பழைய நீர் நிலைகளைப் புதுப்பிப்பதிலும் ஈடுபாடு கொண்டிருந்ததை அறியமுடிகின்றது.

### பராந்தக வீர நாராயணன் : கி.பி. 860 - 905

இவன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மகன். தளவாய்புரம் செப்பேட்டை வெளியிட்டவன். இம்மன்னனின் ஏழாம் ஆட்சி யாண்டில் இச்சாசனம் வெளியிடப்பட்டது. இவனது வெற்றிகளை இச்சாசனம் முறைப்படுத்திக் கூறுகின்றது. உக்கிரன் கோட்டை என்ற ஊரில் அமர்ந்து கொண்டு இம்மன்னன் தளவாய்புரம் செப்பேட்டை வெளியிட்டான். இவனுக்கு வீர நாராயணன் என்ற சிறப்புப் பெயருமுண்டு. மதுராபுரி பரமேசுவரன், குருசரிதன், செந்தமிழ்க்கோன்' என்ற விருதுப் பெயருமுண்டு.

இம்மன்னனின் கல்வெட்டு இம்மாவட்டத்து நதிக்குடியில் காணப்படுகின்றது.

### இரண்டாம் இராசசிம்மன் : கி.பி. 900 - 920

பராந்தக வீரநாராயணனுக்கும் சேரநாட்டு வானவன் மாதேவிக்கும் மகனாகப் பிறந்தவன். இவனது 16ஆம் ஆட்சி யாண்டில் சின்னமனூர் செப்பேட்டை வெளியிட்டான். இவனுக்கு ,ராஜசிகாமணி', 'மாந்தர கவுரவமேரு' 'ஸ்ரீகாந்தன்' போன்ற பல கவுரவப் பெயர்கள் உள்ளன. இம்மன்னன் பல போர்கள் புரிந்துள்ளான். முதலாம் பராந்தகன் தமது மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டில்: 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்று கூறிக் கொள்கின்றான். இதன் வாயிலாக இரண்டாம் இராசசிம்மன் 910-இல் பாண்டியர் ஆட்சியை இழந்தான் எனத் தெரிகிறது. இடைப்பட்ட காலத்தில் சோழர் ஆட்சி இப்பகுதியில் நிலவி உள்ளது என்றறியமுடிகின்றது.

### முதலாம் பராந்தகன் : கி.பி. 907 - 955

இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டை இரண்டாம் இராசசிம்மன் என்பவன் ஆட்சி செய்து வந்தான். இராசசிம்மன் மீது படையெடுத்துத் தோற்கடித்த பராந்தகன் தனது மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில்; தன்னை 'மதுரை கொண்ட கோப்பரகேசரி' என்று கூறிக் கொள்கிறான். இலங்கை மன்னனின் படையுதவியுடன் இராசசிம்மன் பராந்தகன் மீது படையெடுத்தான். இப்போர் 'வெள்ளூரில்' நடைபெற்றது. அதில் பராந்தகனுக்கே மீண்டும் வெற்றிகிட்டுகிறது. இச்செய்தி

உதயேந்திரம் செப்பேட்டிலும், திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுள்ளது. 'மகாவம்சம்' என்ற நூலும் இச் செய்தியை உறுதிப்படுத்துகின்றது. (The Cōlas K.A. Neelakanta Sastri pp 122 - 123).

இம்மன்னனின் கல்வெட்டுகள் பாண்டிய நாட்டின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன. இம்மாவட்டத்தில் திருத்தங்கலில் உள்ள நின்ற நாராயணப் பெருமாள் கோயிலும் காணப்படுகின்றது.

இவனது ஆட்சியைத் தொடர்ந்து பாண்டிய நாட்டில் மீண்டும் பாண்டியர்கள் ஆட்சி ஏற்பட்டது. 'சோழபுரம்' என்ற ஊர் பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சி நிலவியிருந்ததற்குச் சான்றாக இன்றளவும் இருந்து வருகின்றது. சோழர்க்கும் பாண்டியர்க்கும் இடையிடையே போர் நடைபெற்றதையும், அப் போர்களின் திரைமறைவில் நடைபெற்ற வஞ்சகங்களை எடுத்துக் கூறும் வகையில் 'சோழபுரம்' தேவதானம் தல வரலாற்றுச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்போராட்டங்களில் வெற்றியானது மாறிமாறி அமைந்தது. இதற்கேற்ப ஆட்சியும் மாறி மாறி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் : கி.பி. 946 - 966

சோழர் ஆதிக்கத்திலிருந்து பாண்டிய நாட்டுப் பகுதியை விடுவிக்கப் பாண்டிய மன்னர்கள் பலரும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர். இலங்கை மன்னருடன் சேர்ந்து கொண்டு இம் முயற்சியை மேற்கொண்டனர். இம்முயற்சியில் வீரபாண்டியன் வெற்றி கொண்டான். இவனே பராந்தகன் மகன் உத்தம சீலியை போரில் கொன்று மீண்டும் பாண்டிய நாட்டில் பாண்டியர் ஆட்சியை நிலவச் செய்தான்.

இம்மன்னனின் கல்வெட்டுகள் இவனது வெற்றியினைக் கொண்டாடு முகமாகச் 'சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்' எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. மதுரைக்கருகிலுள்ள சோழாந்தகச் சதுர்வேதிமங்கலம் (சோழ வந்தான்) இவன் சோழர் மீது கொண்ட வெற்றியைக் குறிக்கத் தோற்றுவிக்கப்பட்ட ஊராகும். இவனது

கல்வெட்டுகள் இம்மாட்டத்தில் எதிர்க்கோட்டை பள்ளிமடம், திருவில்லிபுத்தூர், நக்கனேரி போன்ற ஊர்களில் காணப்படுகின்றன.

பள்ளிமடம் கல்வெட்டிலேயே நான்காம் ஆட்சியாண்டு முதல் இம்மன்னன் 'சோழன் தலை கொண்ட வீரபாண்டியன்' என்ற சிறப்புப் பெயரைக் கொண்டு விளங்குகின்றான் எனத் தெரிகின்றது. மேலும் பள்ளி மடத்தில் தன் மூத்த சகோதரனுக்காகப் பள்ளிப்படைக் கோயில் எழுப்பினான். வீரபாண்டியன் பதவி ஏற்குமுன்னேயே மூத்த சகோதரன் இறந்துவிட்டான். சிவகாசிச் செப்பேடு இவனது மூத்த சகோதரன் சுந்தரபாண்டியன் எனக் குறிப்பிடுகின்றது.

முதலாம் இராசராசன் : கி.பி. 985 - 1014

பாண்டிய நாட்டில் மீண்டும் சோழர் ஆட்சியைக் கொண்டு வந்தவன் இராசராசன் ஆவான். பாண்டிய நாடு முழுவதையும் தன் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வந்தவன் என்ற பெருமைக் குரியவன். பாண்டிய நாட்டை; 'இராசராசப் பாண்டி மண்டலம்' எனப் பெயரிட்டு ஆண்டு வந்தான். தன்னைப் 'பாண்டிய குலாசனி' என்று பெருமையாகக் கூறிக் கொள்கின்றான். இவனது அதிகாரிகளின் பெயர்கள், அளவு கருவிகளின் பெயர்கள் போன்ற வற்றைச் சோழர் ஆட்சிக்கேற்ப பெயர் மாற்றி வழங்கச் செய்தான்.

இம்மாவட்டத்தில் பந்தல்குடி, எதிர்க்கோட்டை, திருச்சுழி ஆகிய இடங்களில் இம்மன்னனது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முற்காலப் பாண்டியர் வரலாறு முதலாம் இராசராசன் காலம் வரை நிலவியிருந்தது. இதனையடுத்துப் பாண்டியர் ஆட்சி கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் ஏற்பட்டது. சில பாண்டிய மன்னர்கள் சோழர்களை அண்டி வாழ்ந்தனர். அவர்களுள் குறிப்பிடத் தக்கவன் 'ஸ்ரீ வல்லபன்' என்ற பாண்டிய மன்னன் ஆவான்.

## முதலாம் குலோத்துங்கன் : கி. பி. 1010 - 1120

வலிமை வாய்ந்த சோழ மன்னர்களில் இவனும் ஒருவன். இவன் ஆட்சிக்காலத்தில்; இழந்த பாண்டியர் ஆட்சியை மீட்பதற் காக ஐந்து பாண்டிய மன்னர்கள் இணைந்து இவனுடன் போரிட் டனர். ஆனால் தோல்வியைச் சந்திக்கின்றனர். இருப்பினும் பின்னர் இவனுக்கு அடங்கித் திரை செலுத்திக் கொண்டு பாண்டிய நாட்டை ஆண்டுவந்த பாண்டிய மன்னர்களும் உண்டு.

இம்மாவட்டத்தில் முதற்குலோத்துங்கனின் ஆட்சி நிலவியதற் கான சான்றாக அருப்புக்கோட்டை வட்டத்துக் கோயிலான் குளம், (ARE 397/1914-15) தொப்பலாக்கரை சாத்தூர் வட்டத்துக் குண்டலக்குத்தூர், திருவில்லிபுத்தூர் வட்டத்துத் திருவில்லி புத்தூர் போன்ற இடங்களிலுள்ள கல்வெட்டுகளால் அறியலாம்.

## சுந்தர சோழ பாண்டியன் : கி.பி. 1021 - 1052

முதலாம் இராசராசனுக்குப் பின்னர் இராசேந்திரன் காலத்தில் பாண்டிய நாட்டை ஆளுவதற்குச் சோழர்களின் பிரதிநிதியாக சோழ வமிசத்தவர்களே அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் சோழ பாண்டியர்கள்' என்ற பட்டப் பெயர்களுடன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்தனர்.

இச்சோழ பாண்டியர்களுள் தலைமையானவன் சுந்தர சோழ பாண்டியனாவான். இவனது கல்வெட்டுகள் பாண்டிய நாட்டில் அதிகமாகக் காணப்படுகின்றன. இனப்பெயர்கள் இவன் பெயரால் மாற்றம் பெற்றுள்ளதைச் சில கல்வெட்டுகள் வழி அறிய முடிகின்றது.

இம்மாவட்டத்துள்; சிவகாசி வட்டத்து எதிர்க்கோட்டை' சாத்தூர் வட்டத்துக் குண்டலக்குத்தூர்ப் பகுதியிலும், இம் மன்னனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. வீரசோழன் என்ற பெயர் இரண்டாம் இராசேந்திரனின் தம்பிக்குரிய பெய ராகும். அப்பெயரில் இம்மாவட்டத்திலுள்ள ஓர் ஊர்ப் பெயர் காணப்படுகின்றது. ஆனால் இவனது கல்வெட்டுகள் ஏதும் இது வரை கிடைக்கப் பெறவில்லை.

## சடையவர்மன் ஸ்ரீவல்லவன் : கி.பி. 1101 - 1124

இம்மன்னன், குலோத்துங்கனால் தோற்கடிக்கப்பட்ட ஐவருள் ஒருவராய் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. 'திருமடந்தையும் ஜயமடந்தையும்' எனத் தொடங்கும் மெய்க்கீர்த்திக்குரியவனான இவனது கல்வெட்டுகள் திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் கிடைக்கின்றன.

விருதுநகர் மாவட்டத்தில் திருத்தங்கல் சோழபுரம், வேப்பிலைப்பட்டி ஆகிய ஊர்களில் இம்மன்னனது கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவனது மகன் சுந்தரபாண்டியன், சோழபுரம் ஊரிலுள்ள கோயிலில் அமர்ந்து மக்கள் குறைகளைக் கேட்டறிந்து அங்குள்ள பெருமாள் கோயிலுக்குத் தானம் வழங்கினான்.

## மாறவர்மன் பராக்கிரம பாண்டியன் : கி.பி. 1087 - 1110

இம்மன்னன் ஸ்ரீவல்லபனோடு இணைந்து ஆட்சி செய்திருக்க வேண்டும். ஸ்ரீவல்லபன் பதவிக்கு வருமுன்னரே இவன் அதிகாரம் பெற்று ஆட்சி செய்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. 'திருமகள் புணர' என்று தொடங்கும் மெய்க்கீர்த்திக்குரியவன் இவனேயாவான்.

ஸ்ரீவல்லபன் பாண்டிய நாட்டை ஆண்டு கொண்டிருந்த போது பாண்டிய மண்டலத்தின் ஒரு பகுதியை பராக்கிரம பாண்டியன் ஆண்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இம் மன்னனைப் பற்றிய செய்தி இம்மாவட்டத்துச் சோழபுரத்திலுள்ள கல்வெட்டில் காணப்படுகின்றது.

கி.பி. 12, 13 - ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் இப்பகுதியில் அதிகம் காணப்படுகின்றன. இம்மன்னர்களை 'இடைக்காலப் பாண்டியர்கள்' என வரலாற்றாசிரியர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவர்கள் சோழர் வீழ்ச்சிக்குப் பின்னர் பாண்டியர் ஆட்சியை மறுபடியும் பாண்டிய நாட்டில் நிலை பெறச் செய்த பெருமைக்குரியவர்கள்.

## முதலாம் சடையவர்மன் குலசேகரன் : கி.பி. 1190 - 1218

சோழர்களுக்குத் திறை செலுத்தி ஆட்சி செய்து வந்தனர் பாண்டிய மன்னர்கள். முதலாம் சடையவர்மன் குலசேகரன் திறை

செலுத்த மறுத்தான். இக்காலத்தில் சோழ நாட்டை ஆட்சி செய்து வந்த மூன்றாம் குலோத்துங்கன் மதுரை மீது படை யெடுத்து மதுரை நகரைச் சீர் குலைத்தான். போரில் தோற்ற குலசேகரன் தன் பட்டத்தரசி மற்றும் மகனுடன் சென்று சோழன் காலில் விழுந்து சரணடைகின்றான். அடைக்கலம் புகுந்த குல சேகரனுக்கு மன்னனுக்குரிய மரியாதை அளித்து மீண்டும் அரசாட்சி செய்ய அனுமதித்தான். மதுரை ஆலவாயான் கோயி லுக்குப் பொன்வேய்ந்து அணிகலன்கள் பல அளித்து ஆல வாயானையும், அங்கயற்கண் அம்மையையும் திருவீதி எழுந்தருளச் செய்து மன மகிழ்ச்சியுடன் குலோத்துங்கன் வழிபட்டு நின்றான் என்று கல்வெட்டு கூறுகின்றது.

குலோத்துங்கன் ஆசியுடன் ஆட்சி செய்த 'பூவின் கிழத்தி' என்ற மெய்க்கீர்த்திக்குரியவனான சடையவர்மன் குலசேகரன் பாண்டிய நாட்டில் பல கோயில் பணிகளும், சமுதாயப் பணி களும் செய்து வந்தான். இம்மன்னனின் கல்வெட்டுகள் இம் மாவட்டத்துச் சேத்தூரில் காணப்படுகின்றன.

இம்மன்னனின் பெயரில் 'குலசேகரபுரம்' என்ற வணிக நகரம் இருந்ததை அது தெரிவிக்கின்றது. மேலும் இப்பெயரிலேயே இன்றும் சில ஊர்கள் இம்மாவட்டத்துள் உள்ளன. அவையும் நகரம் என்றே குறிப்பிடப்படுகின்றன. எனவே மன்னன் குலசேகரன் தன் காலத்தில் வணிகம் செழித்தோங்க தானே முயற்சி செய்து பல நடவடிக்கைகளை மேற்கொண்டான் என்பது தெரியவருகிறது.

குலசேகரபுரம் என்றழைக்கப்படுகின்ற நகரம் பல நாட்டவர் களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடியதாக; செழிப்புடனும் பரி வுடனும் இருந்தது என்பதை தி.மானகச்சேரி கல்வெட்டு குறிப் பிடுவதால் அறியலாம்.

நகரத்தில் பல வணிகர்கள் வாழ்ந்ததற்கு ஆதாரமாக இன்றும் அவ்வூர்களில் கல்லாலான பல செக்குகள் காணப்படுகின்றன. எண்ணெய் வணிகர்கள் சிறப்புற்று வாழ்ந்ததற்கு இவையே ஆதாரமாய்த் திகழ்கின்றன. மேலும் சோழபுரத்துக்கருகிலுள்ள தேசிகாபுரம்; நாநாதேசிகள் வாழ்ந்த நகரமாக விளங்கியதைக் கொண்டு பல நாடுகள் சென்று வணிகம் செய்யும் பல தொழில் வணிகர்கள் இங்கு வாழ்ந்ததை அறியலாம்.

## முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் : கி.பி. 1216 - 1244

இவனது மெய்க்கீர்த்திகள் 'பூ மருவிய திருமடந்தையும்' என்று தொடங்குகின்றன. குலசேகர பாண்டியனின் 26-ஆம் ஆட்சி யாண்டிற்குப் பிறகு இம்மன்னன் முடிசூடி ஆட்சி செய்தான். சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கன் இறந்த பிறகு 1218-இல் சோழ நாட்டின் மீது படையெடுத்து தஞ்சையும் உறந்தையும் செந்தழல் கொளுத்தினான். தன் தந்தைக்கு நேர்ந்த அவமானத்திற்கு ஈடுசெய்யும் வகையில் இந்நிகழ்ச்சியை நடத்தி னான் என்று கூறலாம். தன் தந்தைக்குச் சோழ மன்னன் பாண்டிய நாட்டைத் திரும்ப அளித்ததைப் போல; இவன் சோழ நாட்டை வென்றுப் பின் சோழனுக்கே திருப்பியளித்தான். அதனால் இவனது கல்வெட்டுகள் இவனை 'சோணாடு கொண்டு வழங்கியருளிய சுந்தரபாண்டியன்' என்று குறிப்பிடுகின்றன.

இம்மன்னனது கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் திருத்தங்கல், திருவில்லிபுத்தூர், தேவதானம், பாலவநத்தம், அருப்புக்கோட்டை, வடக்கு வெங்கா நல்லூர், சோழபுரம் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றன.

திருவில்லிபுத்தூரிலுள்ள இவனது இரண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; இவ்வூர் கோயிலுக்குத் தானம் வழங்கியபோது மன்னன் சுந்தரபாண்டியன் 'சோழ நாட்டு நித்த வினோத வள நாட்டுக் கீழார் கூற்றத்து ஆயிரத்தளி அரண்மனையிலிருந்து இத்தானத்தை வழங்கியதாகக் குறிப்பிடுகின்றது. படையெடுத்துச் சென்று வெளியூரில் தங்கியிருந்த போதும் பாண்டிய நாட்டில் சமயப் பணியும், சமுதாயப் பணியும் செய்ய மறக்கவில்லை எனத் தெரிகிறது.

சோழபுரத்திலுள்ள முன்கோபுரம், 'சுந்தரபாண்டியன் திருவாயில்' என்றழைக்கப்பட்டதை இங்குள்ள கல்வெட்டால் அறியமுடிகின்றது. மேலும் தம்பிக்கு நல்லான் திருக்கோபுரம் என்ற கல்வெட்டு வழி பிற்காலப் பாண்டியரின் பெயர்கள் சோழ புரத்திற்குச் சூட்டப்பட்டிருந்ததை அறியலாம்.

## இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் : கி.பி. 1238 - 1255

இவன் இரண்டாம் சடையவர்மன் குலசேகரனின் மகனாவான். இவனது மெய்க்கீர்த்திகள், "பூமலர் திருவும் பொரு செய மடந்தையும்" எனத் தொடங்குகிறது. இவன் வீரசோமேசுவரன் என்ற கொய்சள மன்னனை 'மாமடி' என்றழைத்திருக்கின்றான். எனவே இவனது கால கட்டத்தில் கொய்சலர்க்கும் பாண்டியர் களுக்கும் 'மணவினை நட்பு' இருந்ததை அறியமுடிகின்றது.

இம்மன்னனது கல்வெட்டுகள் இம்மாவட்டத்துள் விழுப்பனூர், வடக்கு வெங்கா நல்லூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

## முதலாம் மாறவர்மன் குலசேகரன் : கி.பி. 1268 - 1318

முதலாம் சடையவர்மன் சுந்தர பாண்டியனின் மகனான இவன் காலத்தில் பாண்டியர் ஐவர் ஆட்சி செய்ததாக வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இவனது காலத்தில் மாற வர்மன் விக்கிரமன், முதலாம் சடையவர்மன் வீரபாண்டியன், இரண்டாம் சடையவர்மன் வீரபாண்டியன் ஆகியோர் ஆட்சி செய்துள்ளனர் எனத் தெரிகின்றது.

இவனது மெய்க்கீர்த்தியுள் வரலாற்றுச் செய்திகள் ஏதும் கூறப்படவில்லை. எனினும் குலசேகரன் தன்னை 'எம்மண்டலமும் கொண்டருளிய' எனக் கூறிக்கொள்கின்றான். ஐவரும் சேர்ந்து செய்த பணியை ஒவ்வொருவரும் பெருமையாகக் கூறியதை அறிய முடிகிறது. இவனது மகன் சுந்தரபாண்டியனும் இதே மெய்க் கீர்த்தித் தொடக்கத்தைக் கொண்டிருந்தான்.

இம்மன்னன் குலசேகரன் கொல்லத்தை வென்றதால் 'கொல்லம் கொண்டருளிய குலசேகரன்' என்று சிறப்புப் பெயர் கிட்டியது. இம்மாவட்டத்து இராசபாளையத்திற்கு அருகிலுள்ள 'கொல்லங்கொண்டான்' என்ற ஊர் இவனது பெயரை இன்றளவும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

இம்மன்னனின் கல்வெட்டு இம்மாவட்டத்திலுள்ள தேவதானம் பகுதியில் காணப்படுகின்றது. (ARE 249/1940-41)

## முதலாம் சடையவர்மன் பராக்கிரம பாண்டியன் : கி.பி. 1315-1334

சோழபுரம் பகுதியில் கிடைக்கும் இவனது கல்வெட்டு சக ஆண்டு 1244இல் இவனது எட்டாம் ஆட்சியாண்டைக் குறிப்பிடு கின்றது. இதனால் இம்மன்னன் கி.பி. 1315இல் ஆட்சிப் பீடம் ஏறியிருக்கவேண்டும் என்று தெரிகிறது. 1316இல் டில்லி சுல்த்தா னாக முடிசூட்டிக்கொண்ட 'குத்புதீன் முபாரக்' என்பவன் 1318இல் தமிழகத்தை நோக்கிப் படையெடுத்து வந்து பல இடங் களைச் சூறையாடினான். இவனுடன் போரிட்டு பராக்கிரம பாண்டியன் வெற்றி பெற்றான். அதனால் இவனுக்கு 'வாளால் வழி திறந்த பராக்கிரம பாண்டிய தேவர்' என்ற சிறப்புப் பெயர் கிட்டியது. இவனது வெற்றியைக் கொண்டாடும் முகமாக 'வாளால் வழி திறந்தான் பணம்' அச்சடிக்கப்பட்டது. அப்பணம் அப்போது வழக்கிலிருந்ததைக் கல்வெட்டுகள் வழி அறியலாம். (பாண்டியர் வரலாறு, சேதுராமன், ப. 196)

## டெல்லி சுல்த்தான் படையெடுப்பு :

முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்குப் பின்னுள்ள பாண்டிய மன்னர்களுக்குள் ஏற்பட்ட ஆட்சிப் பூசல் காரணமாகத் தமிழகத்துப் பாண்டிய மன்னர்களின் ஆட்சி இறுதிக் கட்டத்தை எய்தியிருக்க வேண்டும்.

டெல்லி சுல்த்தான் அலாவுதீன் கில்ஜியால் அனுப்பப்பட்ட 'மாலிக்காபூர்' என்ற தானாதிபதி தமிழகத்தை நோக்கி வந்து பல தலைநகர்களைத் தன்வயப்படுத்தினான். இருப்பினும் கேரளத்தில் புறப்பட்ட 'வீரகேரளரவிவர்மன்' என்ற புயலொன்று சென்னை வரை சென்று பல வெற்றிகளைக் கண்டது. ஆனால் இவ்வெற்றி யானது தற்காலிகமாகவே இருந்தது.

கி.பி. 1323 இல் டெல்லி சுல்த்தானின் தானாதிபதி 'உலூக் கான்' தமிழகத்தை மீண்டும் டெல்லி சுல்த்தானின் ஆளுகைக்கீழ் கொண்டு வந்தான், ஹரிஹரன், புக்கன் என்ற விஜயநகர மன்னர்கள் தோன்றி சுல்த்தான் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள். இது நடந்தது கி.பி. 1371இல் ஆகும்.

## வாணாதிராயர்கள்

மதுரையை இழந்த பாண்டிய வமிசத்தினர் சிலர் திருநெல்வேலியிலும், வள்ளியூரிலும் தங்கள் தலைநகரை அமைத்துக் கொண்டு சிற்றரசர்களாக ஆண்டு வந்தனர். இந்நேரத்தில் 15ஆம் நூற்றாண்டின் மத்தியில் பாண்டிய நாட்டின் ஒரு பகுதி வாணாதிராயர் என்ற சிற்றரசர்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. இவர்களுள் குறிப்பிடத் தக்கவன் 'மாவலி வாணாதிராயன்' என்பவனாவான்.

இம்மன்னன் அழகர் கோயிலைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவனாவான். கி.பி. 1428 முதல் கி.பி. 1477 வரை ஆட்சி செய்த இவனது கல்வெட்டு திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் காணப்படுகின்றது. இம்மன்னனின் காலத்தில்தான் ஆண்டாள் கோயில் முழுவதுமாகச் சீரமைக்கப்பட்டது. இவ் வமிசத்து மற்றொரு மன்னன், 'சுந்தரத்தோளுடையான் மாவலி வாணாதிராயன்' என்பவன் ஆவான். இவனது கல்வெட்டுகளும் திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் காணப்படுகிறது.

## தென்காசிப் பாண்டியர்கள்

இதனை அடுத்து பாண்டிய மன்னர்கள் ஆட்சி தென்காசி கண்ட பராக்கிரம பாண்டியன் முதல் தொடங்குகின்றது. அம்மன்னர்கள் தங்கள் தலைநகராகத் தென்காசியை மாற்றிக் கொண்டார்கள். அதனால் இவர்கள் தென்காசிப் பாண்டியர்கள் என வரலாற்றாசிரியர்களால் அழைக்கப்பட்டார்கள். இவர்களின் ஆட்சிக் காலம் குழப்பமான காலகட்டமாக இருந்தாலும்கூட ஆலயப் பணிகளிலும், தானங்கள் அளிப்பதிலும், சமுதாயப் பணிகள் செய்வதிலும் சிறப்பிடம் பெற்றிருந்தனர் என்பதை அவர்களது கல்வெட்டுக்கள் மூலம் அறியலாம்.

### அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் : கி.பி. 1473-1506

இவன் பராக்கிரம பாண்டியனின் தம்பியாள குலசேகரனின் மகனாவான். தென்காசிக்கருகிலுள்ள விந்தனூரில் சுந்தரராஜப் பெருமாள் கோயிலை எடுப்பித்தவன். இவனுக்கு 'செண்பக பராக்கிரம பாண்டியன்' என்ற பெயர் இருந்ததாகக் கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன.

விருதுநகர் மாவட்டத்துத் தேவதானம் எனும் ஊரில் இவன் கல்வெட்டொன்று காணப்படுகின்றது.

**திருநெல்வேலிப் பெருமாள் : கி.பி. 1552 - 1564**

இம்மன்னன் முடிசூட்டிக் கொண்டதைத் தெரிவிக்கும் தென் காசிக் கோபுரப் பாடல் கல்வெட்டு; சகாப்தம் 1474இல் (கி.பி. 1552) பரிதாபி ஆண்டு சித்திரை மாதம் 26ஆம் தேதி உரோகிணி நாள் முடிசூட்டிக் கொண்டான் எனக் குறிப்பிடுகின்றது. மேலும் இம்மன்னன் பற்றிய தென்காசிக் கோயில் கல்வெட்டில் 'அபிராம பராக்கிரம பாண்டியன் மகன் திருநெல்வேலிப் பெருமான் வீர வெண்பாமாலை குலசேகர தேவன்' எனக் குறிப்பு காணப்படுகின்றது. இவன் தமிழ்ப் புலமை மிக்கவனாதலால் 'வீரவெண்பாமாலை' என்ற விருதுப் பெயர் பெற்றான்.

இம்மன்னனது கல்வெட்டுகள் இம்மாவட்டத்து சேத்தூர் (ARE 230/1940-41) தேவதானம் (ARE 245/1940-41) வடக்கு வெங்காநல்லூர் (ARE 530/1940-41) சோழபுரம் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுக்கள் இவனைச் 'சலிவதிபதி' என்றும் 'தர்மப்பெருமாள் குலசேகர தேவன்' என்றும் 'திருநெல்வேலிப் பெருமாள் குலசேகர தேவன் என்ற வீரவெண்பாமாலை' என்றும் குறிப்பிடுகின்றன.

**அதிவீரராம பாண்டியன் : கி.பி. 1564 - 1604**

இவன் திருநெல்வேலிப் பெருமாளின் மகன் ஆவான். இம்மன்னன் தென்காசியில் முடிசூட்டிக் கொண்டதைத் தென்காசிக் கோபுரப் பாடல் கல்வெட்டொன்று; சகாத்தம் 1483இல் (கி.பி. 1564) சித்திரை மாதம் 20ஆம் தேதி புனர்பூச நட்சத்திரத்தில் முடிசூட்டப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. இவன் தமிழ்மொழியிலும் வடமொழியிலும் சிறந்த தேர்ச்சி பெற்றவன். பல நூல்களையும் மொழி பெயர்ப்பு நூல்களையும் எழுதியவன்.

இம்மன்னனது கல்வெட்டுகள் இம்மாவட்டத்துச் சோழபுரத்தில் காணப்படுகின்றன. மேற்படிக் கல்வெட்டுகள் வடமொழிச் சுலோகத்துடன்; 'ஏதத் திரைலோக்கிய நெம்மானத்ரான சம்ஹார காரணம் சாசனம் சாஸ்வதம் சம்போ விக்ரம பாண்டூசு வரஸ்ய காரணம்' என்று தொடங்குகின்றது.

கல்வெட்டின் உட்பகுதியில் 'தர்மப் பெருமாள் குலசேகர தேவரான அழகன் பெருமாள் அதிவீரராமன்' என்றும், 'பெருமாள் அதிவீரராமனான ஸ்ரீவல்லபன்' என்றும் குறிப்பிடப்படுகின்றான். இப்பெயர்கள் இம்மன்னனின் 13-ஆம் ஆட்சியாண்டில் காணப்படுகின்றது. மேலும் விக்கிரம பாண்டீசுவரர் கோயிலில் 'பண்டாரக் கணக்கர்', 'தானிகக் கணக்கர்' போன்ற பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்துத் தாமும் வழங்கியுள்ளான்.

**வரதுங்க ராமன் : கி.பி. 1588-1609**

இவன் திருநெல்வேலிப் பெருமாளின் இரண்டாவது மகனாவான் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இவனது கல்வெட்டுக்கள் இவனை 'அபிராம சுந்தர ஈசுவரன்' என்றும், 'வீர பாண்டியன்' என்றும், 'அபிராம வரதுங்கன்' என்றும் குறிப்பிடுகின்றன.

இவனைப் பற்றிய தென்காசிக் கோபுரப் பாடல் கல்வெட்டு ஒன்று கி.பி. 1588-இல் முடிசூட்டிக் கொண்டதாகக் குறிப்பிடுகின்றது. அதில் இவன் 'வீரமாறன்', 'செழியன்', 'வல்லம் எறிந்தான்' என்று குறிப்பிடுகின்றதை அறியலாம்.

இம்மாவட்டத்திலுள்ள தேவதானம், திருவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளில் இவனது கல்வெட்டுகளைக் காணமுடிகின்றது. இவனே திருவில்லிபுத்தூரில் ஒரு வடமொழிச் செப்பேட்டை வழங்கியுள்ளான் எனத் தெரிகிறது. இதேபோன்று இம்மாவட்டத்தில் பிற இடங்களில் காணப்படுகின்ற இத்தென்காசிப் பாண்டியர்களின் கல்வெட்டுகள்; இவர்கள் இப்பகுதியில் வழங்கிய நில தானத்தைப் பற்றியும், இவர்களின் ஆட்சி நிலவியிருந்ததைப் பற்றியும் தெரிவிக்கின்றன.

**பூதல வீர உதைய மார்த்தாண்டன் :**

இம்மாவட்டத்தில் வேணாட்டு மன்னன் பூதல வீர உதைய மார்த்தாண்டன், தென்காசிப் பாண்டிய மன்னர்களின் இடைக்காலத்தில் வலுப்பெற்று மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய தென்தமிழ்நாட்டை ஆண்டு வந்தான். தென்காசிப் பாண்டிய மன்னர்களின் வேண்டுகோளுக்கிணங்க விஜயநகர மன்னர்கள்

'சலக்கராஜ' திருமலை' என்ற தானாதிபதியை அனுப்பி உதைய மார்த்தாண்டனை வென்று திருநெல்வேலிப் பகுதியைப் பாண்டியனுக்குக் கொடுத்தான். உதைய மார்த்தாண்டனின் கல்வெட்டுகள் திருவில்லிபுத்தூரில் காணப்படுகின்றன. இம்மன்னன் இம்மாவட்டத்திலுள்ள ஏழாயிரம் பண்ணையில் அமர்ந்து தானம் வழங்கிய செய்தியை இவனது கல்வெட்டுத் தருகின்றது.

**வீரகேரளவர்மன்:**

இம்மன்னன் வேணாட்டை ஆண்டு வந்த போது சதாசிவராயர் என்ற விஜயநகர மன்னன் தம் தானாதிபதி விட்டலதேவராயரை அனுப்பி வைத்தான். அவனும் வீரகேரள மன்னனை வென்றான். அதன் பின்பு வெட்டிவைக்கப்பட்ட சதாசிவராயரின் கல்வெட்டு ஒன்று திருவில்லிபுத்தூரில் காணப்படுகின்றது.

**நாயக்க மன்னர்கள்:**

இதே காலகட்டத்தைச் சேர்ந்த நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றன. ஒரு சில தென்காசிப் பாண்டியர்கள் நாயக்க மன்னர்களின் அனுமதி பெற்றே தென்தமிழ் நாட்டின் சில பகுதிகளை ஆண்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. நாயக்க மன்னர்களின் ஆட்சியைத் தொடங்கி வைத்தவன் விசுவநாத நாயக்கனாவான். வீரப்ப நாயக்களின் நான்கு கல்வெட்டுகள் திருவில்லிபுத்தூரில் காணப்படுகின்றன.

அழகன் பெருமாள் அதிவீரராம பாண்டியன்; வீரப்ப நாயக்கனின் நலத்திற்காகத் திருவில்லிபுத்தூருக்கு அருகில் ஒரு கிருஷ்ணன் கோயிலைக் கட்டுவித்தான். இதேபோன்று முத்து வீரப்ப நாயக்கர் கல்வெட்டும்; திருமலை நாயக்கரின் செப்பேடு களும் பள்ளிமடம் இலந்தைக்குளம் பகுதியில் காணப்படுகின்றன. சொக்கநாதன் கல்வெட்டுகள் நென்மேனி பனையடிப்பட்டி ஆகிய ஊர்களில் காணப்படுகின்றன. முத்து விஜயரங்க சொக்கநாதன் கல்வெட்டு மேட்டுப்பட்டியில் காணப்படுகிறது.

விசுவநாத நாயக்கர் காலத்தில் ஆட்சி செய்வதற்கு எளிதாக அவர்களது ஆட்சிப் பகுதி 72 பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு

ஒவ்வொரு பாளையத்திற்கும் ஒரு தலைவர் நியமிக்கப்பட்டனர். அவர்கள்; மக்கள் பாதுகாப்பு, வரிவசூல் செய்தல் போன்றவற்றைச் செய்துவந்தனர். கி.பி. 1736-இல் நாயக்கர் ஆட்சி முற்றிலுமாக முடிவடைந்தபோது பாளையக்காரர்கள் அனைவரும் தன்னாட்சி செய்யத்தொடங்கினர்.

இம்மாவட்டத்தில் சேத்தூர், கொல்லங்கொண்டான், ஏழாயிரம் பண்ணை, பெரிய கொல்லப்பட்டி, பாளையம்பட்டி, கோலவார்பட்டி, சென்னெல்குடி, செவ்வல்பட்டி, பந்தல்குடி, சென்னவாடி, மன்னார்கோட்டை, பாவாலி போன்ற ஊர்களில் பாளையப்பட்டுக்களான சமீன்கள் இருந்தன.

## ஆங்கிலேயர் ஆட்சி :

ஆர்க்காட்டு நவாபு, ஆங்கிலேயர் ஆட்சிகளிடையே ஆட்சிப் பொறுப்பை யார் வைத்துக் கொள்வது என்ற குழப்பம் ஏற்பட்ட போது சமீன்கள் இவ்விருவருக்குமே கப்பம் கட்டவேண்டிய சூழ்நிலையில் சிரமப்பட்டார்கள். ஆங்கிலேயர்கள் கப்பத் தொகையை உயர்த்திக் கொண்டே போனார்கள். இதனால் கப்பம் கட்டமுடியாத பாளையக்காரர்கள் இழிவுபடுத்தப்பட்டார்கள் அல்லது துன்புறுத்தப்பட்டார்கள். கப்பம் கட்டமுடியாத சேத்தூர், கொல்லங்கொண்டான் சமீன்கள் இப்பாதிப்புக்கு உள்ளாயின. இது கி.பி. 1767-இல் நடைபெற்றது. இதனைக் கண்ட மற்ற பாளையக்காரர்கள் ஆங்கிலேயரின் ஆட்சியை எதிர்க்கவேண்டிய சூழல் ஏற்பட்டது.

அவ்வகையில் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆங்கிலேயருக்கு எதிராகக் குரல் கொடுத்தான். இவனுடன் கொல்லப்பட்டி, ஏழாயிரம் பண்ணை சமீன்களும் குரல் கொடுத்தன. இதனால் பானர்மேன் என்ற ஆங்கிலேய ஆளுநன் கி.பி. 1799-இல் பாளையக் காரர்களின் முழு அதிகாரத்தையும் பறிக்கும் வகையில் ஒரு ஆணை பிறப்பித்தான். அதனைச் செப்பேட்டில் பொறித்துப் பாவாலி, கோலவார்பட்டி போன்ற சமீன்களில் பதிக்கச் செய்தான். இவ்வாணை மூலம் சமீன்தார்களின் ஆயுதங்கள், அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. கோட்டைகள் அழிக்கப்பட்டன. மேலும்

ஆங்கிலேய அரசை எதிர்த்தால் கூட்டபொம்மனுக்கு ஏற்பட்ட தண்டனைதான் கிடைக்கும் என்று பல சமீன்கள் அவ்வாணை மூலம் எச்சரிக்கப்பட்டனர்.

இவ்வேளையில் விருது நகரிலுள்ள முக்குளத்தில் பிறந்த மருது சகோதரர்கள் சிவகங்கையிலிருந்து ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள். கி.பி. 1801-இல் வெளியிடப் பட்ட எட்வர்டு கிளைவின் அறிவிப்பு பாளையக்காரர்களைச் சமீன்தார்களாகத் தரம் தாழ்த்தியது.

இக்காலகட்டத்தில் மாவட்ட ஆட்சியர்கள் நியமிக்கப்பட்டு ஆங்கிலேய அரசு அதிகாரத்தையும், வரிவசூலிப்பையும் தங்களின் முழு ஆளுகைக்கீழ் கொண்டுவந்தது.

# அருச்சுனாபுரம்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்து வத்திராயிருப்பு உள் வட்டத்தில் அமைந்து உள்ளது. இவ்வூரின் பழமைக்கு எடுத்துக் காட்டாகத் தென்காசிப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட 'சாந்தவனப் பெருமாள்' என்ற பெருமாள் கோயில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர்; 'சேந்தனேரி' என்றும், இறைவன் பெயர்; சேந்தனேரி தனிமலை அழகியார்' என்றும் அழைக்கப் படுவதைக் காணலாம்.

கருங்கற்களால் கருவறை, அரை மண்டபம், மாமண்டபம், முன் மண்டபம் என்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது இக்கோயில். இங்கு 'ஏகாதசி மண்டபம்' என்ற பெயரில் ஒரு கல்மண்டபம் காணப்படுகின்றது. அதில் அழகிய கற்சிலைகள் உள்ளன.

தென்காசிப் பாண்டியர் வமிசத்தைச் சேர்ந்த வீரபாண்டியன், பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியன் ஆகியோர் காலக் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. இக்கோயில், 'வென்று மாலையிட்ட வீரபாண்டியன்' என்ற மன்னனால் கி.பி. 1464இல் கட்டப்பட்டு குடமுழுக்கு செய்யப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகின்றது. மேலும் 'இருபது மா' நிலம் வழிபாட்டிற்காகவும் திருப்பணிக்காகவும், மற்றுமுள்ள செலவினங்களுக்காகவும் வழங்கப் பட்டதாகத் தெரிவிக்கின்றது.

கி.பி. 1479-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று கிழவனேரியான பராக்கிரமப் பாண்டியப் பேரேரியைச் சேர்ந்த நிலங்கள் பூசைக்காகவும், வழிபாட்டிற்காகவும், நித்தியப் படைப் பிற்காகவும் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டியனால் தானம் அளிக்கப்பட்டதை அறியமுடிகிறது.

இவ்வூரிலுள்ள கிணறு ஒன்றில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அது குலசேகரபாண்டியனின் 21-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும். 'நக்கன்', 'சொக்கன்', 'வில்லி' என்போர் இக்கிணற்றை வெட்டி வைத்ததாகக் கல்வெட்டு தெரிவிக்கிறது.

## அருப்புக்கோட்டை

இவ்வூர் விருது நகரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வட்டத்தின் தலைமையிடமாகவுள்ள இவ்வூரின் பெயர்க் காரணம் பற்றிக் கூறுகையில்,

மல்லிகை மொட்டுகள் அரும்பிநிற்க;
கோட்டை ஒன்றும் இங்கிருக்க
அரும்புக்கோட்டை என்று இவ்வூருக்குப்
பெயர் ஏற்பட்டு இப்பெயரே நாளடைவில்
அருப்புக்கோட்டையாயிற்று என்பர்.

கோட்டையில்; வீருகொண்டு எழுந்து வரும் எதிரிகளின் தலைகளை அரிந்ததால் அருப்புக் கோட்டை என்று பெயர் ஏற்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

தொடக்க காலத்தில் இவ்வூருக்குத் 'திருநல்லூர்' என்று பெயர் இருந்ததாகவும், வீரப்ப நாயக்கர் காலத்தில் (கி.பி.1672-1692) இவ்வூரில் ஒரு கோட்டை கட்டப்பட்ட பின்னர் அருப்புக் கோட்டை எனப் பெயர் வந்தது எனவும் கூறுகின்றனர். நாயக்க மன்னனால் கட்டப்பட்ட கோட்டை இன்றும் இடிந்த நிலையில் இங்கு காணப்படுகின்றது.

இவ்வூரிலுள்ள சிவன் கோயில் ஒன்றில்; கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. அதில் ஒரு கல்வெட்டு, சடையவர்மன் சுந்தர பாண்டியன் என்பவன் குலோத்துங்க சோழனிடத்தில் தோல்வி அடைந்தான் என்றாலும் குறைந்த பலத்துடன் தொடர்ந்து ஆட்சி செய்து வந்தான் என்று கூறுகின்றது. இவனைத் தொடர்ந்து வந்த பராக்கிரம பாண்டிய மன்னன்; பாண்டியரின் பெருமையை நிலைநாட்டும் வகையில் குலோத்துங்க சோழனை தொடர்ந்து வெற்றிபெற இயலாவண்ணம் செய்தான்.

இவ்வூரில் சிவன் கோயில்கள் மூன்றும், வெங்கடேசப் பெருமாள் கோயில் ஒன்றும், முத்துமாரியம்மன் ஆயிரங்கண் மாரியம்மன் ஆகிய கோயில்களும் உள்ளன. இவற்றுள் சுந்தரேசுவரர்

கோயில் வளாகத்திலுள்ள கோயிலிலும் வாழவந்த அம்மன் கோயிலிலும், பொதுச் சத்திரம் ஒன்றிலும், கோயில் தெப்பக் குளத்திலும் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

கல்வெட்டுகளில் இவ்வூர்: 'செங்காட்டிருக்கை இடத்துவழி' என்று குறிப்பிடப்படுகின்றது. மற்றொரு கல்வெட்டில் இவ்வூர் 'வெண்பில் அல்லது வெண்புல் நாட்டுப் பிரிவில்' இருந்துள்ளமை வெளிப்படுகிறது.

இங்குள்ள கல்வெட்டுகளில்: பழமையானது முதலாம் மாற வர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டாகும். எனவே இம் மன்னன் காலத்திலேயே இக்கோயில் கட்டப்பட்டதாக அறிய முடிகின்றது. தற்போது சிவன்கோயில் இறைவன் 'சுந்தரேசுவரர்' என்றழைக்கப்படுகின்றார். ஆனால் கல்வெட்டுகளில் 'குறல் மணி ஈசுவரம் உடையார்' என்று குறிப்பிடப்படுகிறார்.

சுந்தரபாண்டியனின் கல்வெட்டு ஒன்று இச்சிவன் கோயிலின் கருவறையின் தெற்குச் சுவரில் காணப்படுகின்றது. இது இவ்விறைவனுக்குப் பூந்தோட்டம் அமைப்பதற்காக நிலம் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகின்றது. இம்மன்னனின் 8-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு 'அருந்தவஞ் செய்த நாச்சியார்' என்று பெயர் கொண்ட பார்வதியின் உருவச்சிலையை 'செகல் சேவுகத் தேவன்' என்பவன் எழுந்தருளச் செய்த செய்தியைத் தருகின்றது.

இவன் தென்னிலங்கையைச் சேர்ந்த 'வளஞ்சியர்' இனத்தவன் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் இக்கோயில் வளாகத்தில் 'லிங்க புராணத் தேவர்' என்ற ஒரு சிலையை ஏற்படுத்திய செய்தியை இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. 'லிங்க புராணத் தேவர்' என்று கல்வெட்டு குறிப்பிடுவது; திருமாலும் நான்முகனும் சிவனின் அடிமுடியைக் காணச் செல்லும் காட்சியை விளக்கும் லிங்கோத்பவர் சிற்பத் தொகுதி யாகும்.

சுந்தரபாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; சோழகங்கதேவன் என்பவன் 'எனக்கு நல்ல பெருமாள்' என்ற பெயரில் இறைவன் திருவுருவத்தையும், 'எனக்கு நல்ல நாயகி' என்ற

பெயரில் இறைவியின் திருவுருவத்தையும் செய்து வழங்கியதைத் தெரிவிக்கிறது. இத்திருமேனிகள் ஊர்வலமாக எடுத்துச் செல்லும் செலவிற்காக நில தானம் வழங்கிய செய்தியினைத் தருகின்றது இக்கல்வெட்டு.

எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரனின் 18-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; 'எடுத்தாடுவ பிள்ளையார் என்ற இறைவனுக்கு நிலதானம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது. கோயில் ளாகத்தில் துர்க்கையின் திருமேனியை எழுந்தருளுவித்த செய்தியைச் சோணாடு வழங்கியருளிய சுந்தரபாண்டியனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றின் மூலம் அறியமுடிகிறது.

சுந்தர பாண்டியனின் 14-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று, குளம் ஒன்றை விற்பனைச் செய்த செய்தியையும் 'எடுத்தாட வலிய பிள்ளையார்' என்ற விநாயகப் பிள்ளையார் கோயிலுக்கு, நிலம் தானமாக வழங்கிய செய்தியையும் தெரிவிக்கின்றது.

சகம் 1090-ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஒன்று; சோழகங்கன் என்பவன் அழகிய ஆழ்வார் என்ற இறைவனின் திருமேனியை எழுந்தருளச் செய்ததைத் தெரிவிக்கின்றது. எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகர பாண்டியனின் 15-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; அழகிய ஆழ்வார்க்கு, நெல் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தருகின்றது.

இவ்வூர்க் கல்வெட்டுகளில்; 'வெண்புல நாட்டுச் செங்காட்டிருக்கை இடத்துவழி' என்றழைக்கப்பட்ட இவ்வூர், மதுரோதய வளநாட்டுப் பிரிவாக இருந்ததையும் அறியமுடிகின்றது. மேலும் விக்கிரம பாண்டிய பெருந்தெரு, ஸ்ரீவல்லபப் பெருந்தெரு, தேசிகாசிரியப்பட்டினம் போன்ற தெருப்பெயர்கள் இவ்வூர் வணிக நகராக விளங்கியதைத் தெரிவிக்கின்றன. ஸ்ரீவல்லபப் பெருந் தெருவில், பல நாடுகளுக்கும் சென்று வணிகம் செய்யும் வளமுடைய திசையாயிரத்து ஐந்நூற்றுவர் என்ற வணிகக்குழு இருந்ததையும் கல்வெட்டுவழி அறியமுடிகின்றது.

பொம்மக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த நிலம் அருப்புக் கோட்டையைச் சார்ந்த வளநாடன் என்பவனால் வாழவந்த அம்மன் என்ற இறைவிக்குப் பூசை செய்வதற்காகத் தானமாக வழங்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டு தருகின்றது. இத்தானத்தை வழங்கியவன் திருமலைச் சேதுபதி ரகுநாததேவர் என்பவரிடம் அருப்புக்கோட்டை காணியாளனாகப் பணியாற்றியவனாவான். இக்கல்வெட்டில்தான் முதன் முதலில் அருப்புக்கோட்டை என்ற ஊர்ப்பெயர் காணப்படுகின்றது.

சகம் 1154-ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று சத்திரத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. பாடல் வடிவிலுள்ள இக்கல்வெட்டு சத்திரம் தோன்றிய வரலாற்றைத் தெரிவிக்கின்றது.

## ஆவியூர்

அருப்புக்கோட்டை மதுரைச் சாலையில் அமைந்துள்ள இவ்வூர் காரியாபட்டி வட்டத்து அதே உள்வட்டத்தில் காணப்படுகின்றது. இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இவ்வூர் சிவன் கோயில் அமைகின்றது. முதலாம் இராசேந்திரன் பெயரில் இக்கோயில் 'இராசேந்திர சோழீசுவரமுடைய நாயனார்' என்று அழைக்கப்படுகின்றது. கல்வெட்டுகளில் இவ்வூர்; 'வரலூர் நாட்டு ஆவியூர்' எனக்குறிப்பிடுகின்றது.

சிவன் கோயில் சோழர் பெயரைத் தாங்கியிருந்தபோதிலும் தற்போதுள்ள கல்வெட்டுகளைக் கொண்டு பார்க்கும்போது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில், இக்கோயில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என அறியமுடிகின்றது. முதலாம் சடையவர்மன் விக்கிரம பாண்டியனின் கல்வெட்டு; 'புறவாயம் மற்றும் ஊராயம்' என்ற இரு வரிகளை பற்றிக் குறிப்பிடுகின்றது. இவ்வரிகள் வணிகம் செய்வோர் மீது விதிக்கப்பட்டவையாகும். இவ்வருவாயிலிருந்து இம்மன்னன் காலத்தில் இக்கோயில் திருப்பணி செய்யப்பட்டது. வணிகர்கள் அதிகம் வாழ்ந்த நகராகவும், வணிகம் அதிகம் நடைபெற்ற இடமாகவும் 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டால் அறியமுடிகின்றது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிக்காலத்தில் 'செய்துங்க நாடாழ்வான்' என்பவன் சிவன்கோயில் வளாகத்தில் திருக்காமக்கோட்டத்து நாச்சியாரை எழுந்தருளச் செய்திருக்கின்றான். மேலும் 'அருளாளப் பெருமாள் கோழகங்கதேவன்' என்பவன் இறைவிக்கு இறையிலி தேவதானமாக நிலம் வழங்கிய செய்தியை ஒரு கல்வெட்டின் வாயிலாக அறியமுடிகிறது.

இவ்வூரில் பழைய கற்காலச் சில்லு ஒன்றை 'இராபர்ட் புருஸ்புட்' என்ற மேனாட்டறிஞர் சேகரித்தார் என்று கூறுகின்றனர். இக்கருத்தின்படி இவ்வூரில் வரலாற்றுக் காலத்திற்கு முன்பே பழைய கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்து வந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

## இராசகுலராமன்

இவ்வூர் இராசபாளையம் வட்டத்து கீழராச குலராமன் உள் வட்டத்துள் அமைந்துள்ளது. வருவாய் வசூலிக்கும் வசதிக்கேற்ப இவ்வூர் மேலராசகுலராமன், கீழராசகுலராமன் என்று பிரிக்கப் பட்டுள்ளது.

இவ்வூரின் பழமையைத் தெரிவிக்கும் வகையில் அழகிய திருமால் சிலை ஒன்று; கோயில் குளக்கரைப் படிக்கட்டின் அருகில் அமைந்துள்ளது. நான்கு அடி உயரம் உடைய இச்சிலை சிம்மாசனத்தில் அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றது. கிரீட மகுடம் அணிந்த நிலையிலும், நாற்கரங்களில் மேலிரு கரங்களில் சங்கு சக்கரமும், முன்னிருகரங்களில் வலக்கரம் மலர் ஏந்தியும், இடக்கரம் இடது தொடைமீது வைத்த நிலையிலும் அமைந்துள்ளது. இது இவ்விடத்தே பழமையான பெருமாள் கோயில் இருந்ததற்கான சான்றாகக் கூறப்படுகின்றது.

## இராசபாளையம்

திருவில்லிபுத்தூர் தென்காசி சாலையில் திருவில்லிபுத்தூரி லிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். இராச பாளையம் வட்டத்துத் தலைமையிடமான இராசபாளையத்தில் இராஜுக்கள் அதிகம் வாழுகின்றனர்.

விஜய நகர மன்னர் காலத்தில் 'சின்னராஜா' என்பவர்கள் முதன் முதலில் தன்னுடைய கூட்டத்தாரோடு கீழராஜ குலராமன் என்ற ஊரில் வந்து தங்கினார்கள். பிறகு அவர்கள் சஞ்சிவி மலையருகே குடியேறினார்கள். அதற்குச் சிறிது மேற்கில் அவர் களின் நாய்கள் முயல்களால் தாக்கப்பட்டன. அவ்விடத்தின் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக அந்த முயல்களின் செயல் அமைந்ததாகச் செவிவழிச் செய்தியாகக் கூறுவர்.

பழைய பாளையம் என்ற இடத்தில் அவர்கள் வந்து குடியேறினர். இந்நிகழ்வு நடந்தது கி.பி. 1483-ஆம் ஆண்டில். நாயக்கர் ஆட்சி மதுரையில் ஏற்பட்டபோது சொக்கநாத நாயக்கர் ஆட்சிக் காலத்தில் (கி.பி, 1659 - 1682) சின்னராஜா மற்றும் அவருடைய நான்கு மகன்களுடைய சேவையைப் பாராட்டி செப்புப்பட்டயம் வழங்கப்பட்டது. தலைக்கோட்டைப் போருக்குப் பின் (கி.பி. 1565) அதிகமான இராஜுக்கள் விஜயநகர சாம்ராஜ்யத்திலிருந்து இவ்வூருக்கு வந்து குடியேறினர்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கரிடமிருந்து (கி.பி. 1706-1732) பெறப்பட்ட சாசனத்தின் அடிப்படையில் இவ்வூரானது மேலும் விரிவாக்கப்பட்டு புதுப்பாளையம் என்ற பெயரில் புதுக்குடியிருப்பு ஏற்படுத்தப்பட்டது.

இவ்வூரில் இடம்பெற்றுள்ள சஞ்சீவி மலை இராமாயணக் கதையோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. இலக்குமணனின் அம்புக் காயத்தைப் போக்குவதற்காக அனுமன் சஞ்சிவி பருவத மலையைத் தூக்கி வரும்போது அதிலிருந்து ஒரு சிறிய துண்டு இவ்விடத்தில் விழுந்துவிட்டது எனவும் அதுவே 'சஞ்சீவி மலை' என்றழைக்கப்பட்டது எனவும் கூறுவர்.

இதேபோன்று கன்யாகுமரி மாவட்டத்திலும் சஞ்சீவி மலை ஒன்றுள்ளது. அதன் தோற்றத்திற்குக் காரணமாக இதே கதை கூறப்பட்டு வருகின்றது. இராசபாளையத்திலுள்ள சஞ்சீவி மலையில் சஞ்சீவி நாதர் கோயிலும், குமாரசுவாமி கோயிலும் உள்ளன. இவை காலத்தால் பிற்பட்டவை.

இவ்வூரிலுள்ள பெரிய கோயில் மயூரநாத சுவாமி கோயிலாகும். இக்கோயில் இவ்வூரின் வடக்கில் அமைந்துள்ளது. ஆனி மாதத்தில் இங்கு தேர்த்திருவிழா நடைபெறும். இத்திருவிழா ஒன்பது நாட்கள் நடைபெறும். இவ்வூரின் மேற்கில் இராமசாமி கோயிலுள்ளது. பங்குனி மாதத்தில் இவ்வூரிலுள்ள திரௌபதை அம்மன் கோயிலில் 'அக்கினிகாளி' என்னும் விழா நடைமெறுகின்றது. அப்போது 'தீமிதி' எனும் 'பூக்குழி' இறங்குதல் நடைபெறும். மேலும் சுப்பிரமணிய சுவாமி கோயில், கோதண்ட ராமசுவாமி கோயில், சொக்கர் கோயில், மாரியம்மன் கோயில், குருசாமி கோயில் என்று சில கோயில்களும் இங்குள்ளன.

ஊரின் கிழக்கில் வேட்டை வேங்கடேசப் பெருமாள் கோயில் எனும் வைணவக்கோயில் அமைந்துள்ளது. இது கருவறை, அரை மண்டபம், மாமண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. இதில் தற்போது திருப்பணிகள் நடைபெற்றமையால், கல்வெட்டுகள் இடம் மாறிக் கிடக்கின்றன.

கருவறையில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலையமைப்புடன் காணப்படுகின்ற பெருமாள் திருமேனி உள்ளது. முதலாம் சடையவர்மன் குலசேகரனின் ஐந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; 'வெம்பைக்குடி நாட்டுத் துடையநூர் முட்டத்தில்' இக்கோயில் செலவிற்காக நிலத்தானம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.

மற்றொரு கல்வெட்டு; 'தாமரைக் கண்ணன்' என்பவன் சந்தி விளக்கு எரிப்பதற்காக தானம் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கிறது. முகமண்டபத்திலுள்ள தூண் கல்வெட்டுகள், தூண்களும், உத்திரங்களும் தானமாக வழங்கியவர்களின் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. உத்திரங்களை கொட்டிமுக்குலுவைச் சார்ந்த திம்மராஜா என்பவரின் சகோதரர் கிருஷ்ணமராஜா

என்பவர் வழங்கியுள்ளார். இம்மண்டபத் தூண்களிலொன்றை 'சோழராஜா பெத்திசோழநாதன் என்பவன் வழங்கியுள்ளான்' என்பதை அறியமுடிகின்றது. பொதுவாக இக்கோயிலில் வைத்துத் தான் ஏழை எளியவர்களுக்குத் திருமணம் நடைபெறுவது வழக்கம்.

இவ்வூரில் தமிழ் வருடப்பிறப்பு மிகச் சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது. இதற்குச் சித்திரை வெண்குடைத் திருவிழா' என்று பெயர். இங்குள்ள அப்பாள் ராஜா குளத்தின் அருகிலுள்ள காலியிடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து இவ் விழாவினைக் காணுவர். இந்த நாளிலேயே அய்யனாருக்கும் சிறப்பு விழாக்கள் நடத்தப்படுகின்றன. வெண்குடைத் திருவிழா என்பது 'வெண்கொற்றக் குடை' யாருக்கு உரிமையுடையது என்னும் போராட்டத்தைக் காட்டும் விழாவாகக் கொண்டாடப் படுகிறது. இந்நிகழ்ச்சி ஏதோவொரு வரலாற்று நிகழ்ச்சியினை நிகழ்த்திக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தமிழ்ப் புத்தாண்டில் இவ்விழா நடைபெறுவதால் வெண் கொற்றக் குடையைப் பிற இனத்தவர்கள் அபகரித்து விடா வண்ணம் காத்துக் கொண்ட தமிழர்களின் வீரத்தை எடுத்துக் காட்டுவதாக இவ்விழா அமைந்துள்ளது எனலாம்.

சுதந்திரப் போராட்ட காலத்திலும் இவ்வூர் சிறந்து விளங்கி யதற்குப் பல நிகழ்ச்சிகள் சான்றாக அமைந்துள்ளது. மகாத்மா காந்தி தன் மனைவி கஸ்தூரிபாயோடு 1927-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 4, 5 தேதிகளில் இங்கு வந்து P. S. குமார சுவாமி ராஜாவின் இல்லத்தில் தங்கியிருந்தார். இதன் பின்னர் 1934-ஆம் ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதி 'தாக்கூர் பாபா', 'மீரா பென்' ஆகியோருடன் காந்தியடிகள் மீண்டும் வந்து இதே இடத்தில் தங்கினார். இராஜேந்திர பிரசாத் 1935-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ஆம் தேதியிலும், ஜவகர்லால்நேரு 1936-ஆம் ஆண்டில் அக்டோபர் 13-ஆம் தேதியிலும் இங்குவந்து தங்கி னார்கள்.

ஆதலால் இவர்கள் வந்து தங்கியிருந்த P. S. குமாரசுவாமி ராஜாவின் வீடு புகழ் பெற்றதாயிற்று. ஆகவே இப்பெரியவர்கள் தங்கியிருந்த தன் வீட்டை 'காந்தி கலை மன்றம்' என்ற பெயரில்

ஒரு கலையமைப்பை 1955-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி யன்று உருவாக்கினார். இக்கலைமன்றம் தொடர்ந்து நடைபெற தம் இல்லத்தையே தானமாக வழங்கினார். அது பிற்காலத்தில் கலை, இலக்கியம், கல்வி வளர்க்கும் ஒரு கலைக்கூடமாகவும் சிறந்த நூலகமாகவும் விளங்கி வருகின்றது.

இராசபாளையம் வியாழன் சந்தை இராமநாதபுரம் மாவட்டத்திலேயே நடைபெறும் மிகப் பெரிய சந்தையாகும். இது நடைபெற எ.கா.த. தர்மராஜா தனது நிலத்தை வழங்கினார். 1822-ல் தொடங்கப்பட்ட 'இவ்வாரச் சந்தை' இன்றும் தொடர்ந்து வளர்ந்து பெரிய அளவில்; மக்களைக் கவரும் வகையில் உள்ளது. இச்சந்தையின் வருமானம் எ.கா.த. தர்ம ராஜா அறக்கட்டளைக்காகச் செலவிடப்பட்டு வருகின்றது.

புதுப்பாளையத்திலுள்ள சத்திரம் பழமையானதாகும். இது வழிப்போக்கர்கள் தங்குவதற்காக அமைக்கப்பட்டது. தினமும் ஆறு பயணிகளுக்கு இலவசமாக உணவு வழங்கப்பட்டது. 1878-இல் எ.கா.த. தர்மராஜா குடும்பத்தாரின் பெரும் நிதியுதவி யோடு இச்சத்திரம் உருவாக்கப்பட்டது. இன்றும் அவர் குடும்ப வழியினர் இச்சத்திரத்தின் பொருப்பாளராக விளங்கி வருகின்றனர்.

இராசபாளையத்திலிருந்து 12 கி.மீ. தொலைவில் அய்யனார் ஊற்று என்று கூறப்படும் ஒரு சுற்றுலாத்தலம் உள்ளது. அடர்ந்த காடு நிறைந்த இயற்கை அழகோடு கூடிய இவ்விடம் பல சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த ஒன்று. சுமார் பதினைந்து அடி உயரத்திலிருந்து விழும் சிறிய நீர்வீழ்ச்சி இவ்விடத்திற்கு மேலும் அழகு செய்வதோடு காண்போரை மகிழ்வடையச் செய் கின்றது. இவ்விடத்திலேயே 'வழுக்குப் பாறை' என்றழைக்கப் படும் இடம் ஒன்று நீர் ஓடிவரும் சரிவான மேடுபள்ளமற்ற பாறைப் பகுதியாகும். நீர் ஓடிவரும் காலங்களில் வேகமாகச் சருக்கி வந்து தடாகத்தில் விழுவதைச் சிறுவர் சிறுமியர் விரும்புவர்.

இவ்வருவியின் நீர் தன்தளத்தில் ஓடிவரும்போது 'முடங்கியார் ஆறு' எனப் பெயர் பெறுகின்றது. இவ்வாற்று நீரைத் தேக்கிக்

குடிநீர்த் தேவைக்கும், விவசாயத் தேவைக்கும் பயன்படுத்து கின்றனர். பஞ்சு ஆலைகளும் நூற்பாலைகளும் அதிகமுள்ள இவ்வூர் ஒரு பெருந்தொழில் நகரம் எனில் அது மிகையாகாது.

## இருக்கண்குடி

இவ்வூர் சாத்தூருக்குக் கிழக்கில் அர்ச்சுனா நதிக்கரையில் அமைந்துள்ளது. இரு கங்கைக்குடி என்பதே நாளடைவில் இடுக்கண் குடியாயிற்று என்பர். புகழ்பெற்ற மாரியம்மன் கோயில் முன்னர் அர்ச்சுனாநதியும், வைப்பாறும் இணைவதால் இவ்வூருக்கு இப்பெயர் ஏற்பட்டது. ஆனால் இவ்வூர்க் கல்வெட்டுகளில் 'இருப்பைக்குடி' என்றே குறிப்பிடப்படுகின்றது. இருநதிகளுக்கும் இடையில் இது அமைந்துள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது. 'பை' என்பது நீரோட்டத்தைக் குறிக்கும். 'இருப்பை' என்பது இரு நதிகளைக் குறித்து வந்த பெயர் என்று அறிய முடிகின்றது.

நென்மேனியிலுள்ள ஒரு கல்வெட்டு; இவ்வூரை 'இலுப்பைக் குடி' என்று குறிக்கிறது. இலுப்பை மரங்கள் அதிகம் காணப் பட்டதால் இப்பெயர் பெற்றது. இலுப்பைக்குடியே நாளடைவில் இருப்பைக்குடி ஆயிற்று எனலாம்.

இவ்வூரின் பழமை 10,000 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை இவ்வூரில் கிடைத்துள்ள நுண்கற் கருவிகளால் அறிய மூடிகின்றது. இம்மத்திய கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாடு நிலவியது என்பதை இவ்வூரில் கிடைத்த கருப்பு, சிவப்பு பானை ஓடுகளும் முதுமக்கட்டாழிகளின் உடைந்த வாய்ப்பகுதி மற்றும் ஓடுகளின் மூலம் அறியலாம்.

அத்துடன் சங்ககாலத்துக் கல்மணிகளும் இவ்வூரிலுள்ள கைலாசநாதர் கோயில் அருகிலுள்ள சிறிய குன்றுப் பகுதியில் சேகரிக்கப்பட்டன. மேலும் ரோமானியர்களோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்ததை அவர்கள் பயன்படுத்திய பானை களின் ஓடுகள் இங்கு கிடைத்துள்ளமை கொண்டு அறிய மூடிகின்றது.

இவ்வூரில் வரலாற்றுச் சிறப்புடைய சிவன் கோயில் ஒன்றுள்ளது. அது தற்போது கைலாச நாதர் கோயில் என்ற ழைக்கப்படுகிறது. முற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டது என்பதற்கான கல்வெட்டுச் சான்றுகள் இருந்த போதிலும்; கட்டடக்கலை அமைப்பு மிகப் பிற்காலத்தியதாகத் தெரிகிறது. நென்மேனிக் கல்வெட்டொன்று இக்கைலாசநாதர் கோயிலை 'நக்கன் கோயில்' என்று குறிப்பிடுகின்றது. கோயிலின் உட்புறத்தில் முற்கால மற்றும் பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த செப்புத் திருமேனிகள் காணப்படுவதையும் கொண்டு இக்கோயிலின் பழமையை ஒருவாறு அறியலாம்.

ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன் காலத்தில் சாத்தூர்ப் பகுதியிலிருந்து 'இருஞ்சோநாட்டை' ஆண்ட 'எட்டிச் சாத்தன்' என்பவன் இருப்பைக் குடியில் ஒரு சமணப்பள்ளி ஒன்றை எடுப்பித்துள்ளான் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டின் வாயிலாக இருக்கண்குடியில் சமணப்பள்ளி இருந்ததையும், 1200 ஆண்டு களாக வளம் பொருந்திய நகராக இருந்ததையும் அறிய முடிகின்றது.

சடையன் மாறனுடைய 16 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'இருப்பைக்குடி கிழவன்' என்பவன் இவ்வூரிலுள்ள குளத்தைத் 'தூர்வாரி' இடிந்துபோன பழைய கரைகளை கருங்கல்லால் கட்டி வலுப்படுத்தினான் என்றும் பின்னர் இக்குளம் அவனது பெய ராலேயே 'கிழவனேரி' என்றழைக்கப்பட்டது என்றும் கீழ்க்காணும் பாடல் கல்வெட்டால் தெரியவருகிறது.

கொங்கர் மலர்க்கடம்பு சூட்டாதி கொல்வளையை
எங்கோன் இருப்பைக் குடிக்கிழவன்-பொங்கார்ந்த
தொட்டார் கரும்பிரைக்கும் தென்னீர் வயலிருஞ்சோழ
நாட்டான்றார் சூட்டுதீரென்று'

(SII. vol. XIV INS. 43; 9-13)

இதே இருப்பைக்குடிக் கிழவன் என்ற இவ்வதிகாரி திருச்செந்தூர் வரகுணன் கல்வெட்டிலும் குறிப்பிடப்படுகின்றான். வரகுணன் 1400 பொற்காசுகளை திருச்செந்தூர் சுப்பிரமணியர்

ஆண்டுத் தேவைக்காக வழங்க ஆணையிட்டான். இத்தானத்தை வழங்கிய மூன்று அதிகாரிகளுள் ஒருவனாக இவன் குறிப்பிடப் படுகின்றான்.

இதே போன்று ஸ்ரீவல்லபனின் 18 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றிலும்; இருப்பைக்குடிக் கிழவனின் புகழ் விவரித்துக் கூறப்பட்டு உள்ளது. இம்மன்னன் பகைவர்களை குன்னூரி லிருந்து சிங்களம் வரை படை செலுத்தி வெற்றி கண்டுள்ளான். அம்மன்னனே, எட்டிசாத்தன் என்ற இவ்வதிகாரிக்கு 'இருப்பைக் குடிக்கிழவன்' என்னும் சிறப்புப் பெயரினைச் சூட்டினான். இவ்வதிகாரி தன்னுடைய நிருவாகக் காலகட்டத்தில் இருஞ்சோ நாட்டில் பல கோயில்களையும் அம்பலங்களையும் கட்டியுள்ளான். மக்களுக்கு நலம்பயக்கும் பல திட்டங்களை உருவாக்கி மன மகிழ்வு எய்தியிருக்கின்றான். இதனை;

"..... .....
இருஞ்சோழ நன்னாட்டு ளெத்தனையும்
திருத்துவித்தோனிருப்பைக்குடி
கிழவனென
நிலவித்தன்பியர் நிற்பச் சொல்மிக்க
பெரும்புகழொடு மதியமும்
ஞாயிறும் போலப் பதிதோறும்
விளங்குக பாரின் மேலே" - என்று

(SII. Vol XIV Ins. 44 பக். 24, 25) அக்கல்வெட்டு கூறுகின்றது. சாத்தூர் குளக்கரைக் கல்வெட்டிலும் இருப்பைக்குடிக் கிழவனின் பணி குறிப்பிடப்பட்டுள்ளது

இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புடைய இவ்வூரில் தற்போது 'மாரியம்மன் கோயில்' புகழ் பெற்று விளங்குகின்றது. இக்கோயில் தற்போது வழிபாடு செய்கின்றவர்களின் குடும்பத்தார்களால் 260 ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். ஆடிமாதத்திலும், தை மாதத்திலும் சிறப்புடைத் திருவிழாக்கள் இங்கு நடைபெறுகின்றன.

இம்மாரியம்மன் கோயில் இங்கு ஏற்பட்டதற்கான கதை ஒன்று வழிவழியாகக் கூறப்பட்டு வருகின்றது. 'பூசாரியின் மகள் ஒருத்தி சாணம் பொருக்கிச் சேகரித்து வரும்போது அக்கூடையை ஓரிடத்தில் வைத்திருக்கின்றாள். பின்னர் மீண்டும் அக்கூடையை அங்கிருந்து எடுக்க முடியாமல் போயிற்று. அவ்விடத்திலேயே மாரியம்மனுக்குக் கோயில் எடுக்கப்பட வேண்டும் என்று அப்பெண்ணுக்கு 'அசரீரி' கேட்க அதே போல் இக்கோயில் கட்டப் பட்டதாகக் கூறுகின்றனர்.

## இருஞ்சிறை

இவ்வூர் திருச்சுழி வட்டத்து நரிக்குடி உள்வட்டத்துள் அமைந்துள்ளது. திருச்சுழி மானாமதுரை சாலையிலுள்ள இவ்வூரின் பெயர்க் காரணத்தை; திருஆலவாயுடையார் திருவிளை யாடற் புராணத்திலிருந்து அறியலாம். பாண்டிய மன்னன் மேகத்தை இவ்வூரில் சிறை வைத்திருந்ததால் 'இருஞ்சிறை' என இவ்வூர் பெயர் பெற்றதாம்.

இவ்வூர் பற்றிய பழமை வரலாற்றை அறிந்து கொள்ளப் பல தொல்லியல் சான்றுகள் இங்கு கிடைத்துள்ளன. பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிவன் கோயில் ஒன்று இங்கு காணப்படுகின்றது. அக்கோயில் இறைவன் 'காலேசுவரன்' என அழைக்கப்படுகின்றார். இக்கோயிலிலுள்ள சிலைகள் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. எனவே இக்காலகட்டத்தில் கோயி லொன்று இருந்திருக்க வேண்டும் என ஊகிக்க இடமுள்ளது.

## இலந்தைகுளம்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்துக் கோட்டைக்குளம் உள் வட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள அண்ணாமலைத்

தேவரிடம் இருக்கும் செப்பேடு ஒன்று இவ்வூரின் பழமையை விளக்குவதாக அமைந்துள்ளது. இச்செப்பேடு திருமலை நாயக்கர் காலத்தில் பொறிக்கப்பட்டதாகும்.

திருமலை நாயக்கர் திருவல்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் தரிசனம் செய்ய வரும் வழியில் திருவண்ணாமலை என்னும் ஊரில் தங்கி இருக்கின்றார். அப்போது அவர் முன்னால் ஒரு பெண் ஓலமிட்டு அழுகின்றாள். அதன் காரணத்தை அறிந்து வருமாறு பாளையக்காரர்களுக்கு ஆணையிடுகின்றார் மன்னர். அவர்கள் 'அந்தப் பெண் கம்மவார் இனத்தவள் என்றும் அவள் கணவனைப் புலி அடித்துக் கொன்றுவிட்டதாகவும் அதனால் அப்பெண் தங்கள் முன் அழுது புலம்டகின்றாள் என்றனர். இதைக் கேட்ட மன்னன் அப்புலியைக் கொல்பவர்களுக்குத் தக்க பரிசு அளிக்கப்படும் என்று ஆணையிட்டார்.

இதைக் கேட்டதும் மூவரையதேவனும் அவனது சகோதரனும் மன்னனிடம் தாம்பூலம் பெற்றுக் கொண்டு உடனே அப்புலியைக் கொன்றுவரச் சென்றனர். மன்னன் அந்த நேரத்தில் திருவண்ணா மலையை அடுத்துள்ள 'விராட சமுத்திரம்' சென்றுவிட்டான். அவ்வேளையில் புலிவேட்டைக்குச் சென்ற வீரர்கள் புலியைக் கொன்று உடலைக் கொண்டு வந்து மன்னனிடம் காட்டினர். உடன் திருமலை மன்னன் 'மூவரைய தேவனைப் பாராட்டி அவனுக்கு 'திருமலை' என்ற தனது பெயரையும் சூட்டித் தானங்கள் கொடுத்து மரியாதை செய்வித்தான்' என்று இச்செப் பேடு தெரிவிக்கின்றது.

## ஈஞ்சார்

இவ்வூர் சிவகாசி வட்டத்து மங்கலம் உள்வட்டத்துள் அமைந்துள்ளது. திருவில்லிபுத்தூர் சிவகாசி நெஞ்சாலையில் சுமார் 15 கி.மீ. தொலைவில் உள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர், 'மல்லிநாட்டுத் தடங்கண்ணிச் சிற்றூர்' என்று குறிப்பிடப்படு கின்றது.

இவ்வூரிலுள்ள மேட்டுப் பகுதியான இடத்தில் கிடைக்கும் தொல்பொருட்கள் இவ்வூரில் காலப் பழமைக்குச் சான்றாய் அமைந்துள்ளன. அர்ச்சுணா நதிக்கரையில் நுண்கற்கருவிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை மத்திய கற்காலத்தைச் சார்ந்தவை யாகும். இச்சான்றுகளால் இவ்வூரின் பழமை 10,000 ஆண்டு களுக்கு முன் செல்கின்றது.

இவற்றைத் தவிர இவ்வூரிலுள்ள வயல் பரப்புகளில் ஏராள மான கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும், முதுமக்கட்டாழிகளின் வெளிம்புப் பகுதிகளும் ஓடுகளும் சிதறிக் கிடக்கின்றன. இவை 2000 ஆண்டுகளுக்கு முன்பு நாகரிக மேம்பாட்டுடன் வாழ்ந்த மக்கள் விட்டுச் சென்ற தடையங்களாகும்.

இதனைத் தொடர்ந்து இங்கு காணப்படும் முற்காலப் பாண்டியர் காலத்து அழகிய சுப்பிரமணியர் சிலையைக் கூறலாம். இச்சிலை இயற்கைச் சீற்றத்தால் அதிகம் ஆட்பட்டிருந்த போதிலும் அதன் தொன்மை அழகு குன்றாமல் காட்சியளிக்கின்றது. இது முற்காலப் பாண்டியர் காலத்திலேயே சிறப்புடைய சிவன் கோயில் ஒன்று இங்கிருந்ததற்கான சான்றாகத் திகழ்கின்றது.

பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட சிவன் கோயில் பழம் பொலிவோடு காட்சி தருகின்றது. கருவறை, இடைநாழிகை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை யுடன் காணப்படுகின்றது. சிகரப் பகுதி முற்றிலுமாக அழிந்து விட்டது.

இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள் முதலாம் மாற வர்மன் சுந்தரபாண்டியனின் காலத்தியதாகும். இம்மன்னனின் காலத்தில், 'குருகுலத்தரையன் சோழன் உய்ய நின்றாடுவான்' என்பவன் இக்கோயிலை எழுப்பினான் என்று அக்கல்வெட்டின்வழி அறியமுடிகின்றது. இக்குருகுலத்தரையன் என்ற சிற்றரசனும் அவன் வமிசத்தாரும் பல்லாண்டுகளாக ஈஞ்சார்ப் பகுதியில் வாழ்ந்து வந்ததாகக் கருதப்படுகின்றது.

மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இக்கோயிலுக்குத் திருப்படி மாற்றுள்ளிட்ட தேவைகளுக்காக நிலத்தானம் வழங்கப் பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. மற்றொரு கல்வெட்டு இவ்வூரில் நிலவிய பல்வேறு அரசு வரிகளைப் பற்றித் தெரிவிக் கின்றது எனலாம்.

இங்குள்ள மற்றொரு சிவன்கோயில் ஆலடி ஈசுவரர் கோயி லாகும். இதில் தனித்தனிக் கருவறைகள் சுதை மற்றும் செங்கற்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன. இக்கோயிலமைப்பில் குறிப்பிடத்தக்க செய்தியானது; கருவறைத் தெய்வ உருவங் களுக்குப் பதிலாக ஓவியங்களே வரையப்பட்டு வழிபடப்பட்டு வருவதாகும்.

நடராசர் உருவம் ஒரு கருவறையில் காணப்படுகின்றது. இவரே ஆலடி ஈசுவரர் என்றழைக்கப்படுகின்றார். இக்கோயில் இங்குள்ள ஒரு பெரிய ஆலமரத்தின்கீழ் அமைந்துள்ளதால் இப்பெயர் பெற்றது என்பர். நடராசர் கருவறைக்கு முன்னுள்ள தூண்மண்டபத்தின் சுவர்ப்பகுதியில், கூப்பிய கரங்களுடன் நின்ற நிலையில் வரையப்பட்டுள்ள அறுபத்து மூன்று நாயன்மார்களின் உருவங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு உருவின் கீழும் அதனதன் பெயர் எழுதப்பட்டுள்ளது.

மற்றொரு கருவறையின் சுவர்ப்பகுதியில் நாயக்க மன்னன் அல்லது பாளையக்காரர் ஒருவரின் உருவமும், அவரை வணங்கி நிற்பது போன்று ஒரு அதிகாரியின் உருவமும் வரையப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர பேச்சியம்மன், இருளப்பசாமி, பைரவர் ஆகிய கிராமியத் தெய்வ உருவங்களும் வரையப்பட்டுள்ளன.

இங்குள்ள ஓவியங்களில் மிகச் சிறப்பாகவும், உயிரோட்ட முள்ளனவாகவும் சிறுத்தொண்ட நாயனார் கதையைக் கூறும் ஓவியங்கள் உள்ளன. அவர் பிள்ளைக்கறி சமைத்துப் படைக்கும் காட்சி காண்போரின் மனத்தில் அச்சத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இவ்வோவியங்கள், 200 ஆண்டுகளுக்கு முன்னர் திட்டப் பட்டிருந்த போதிலும் ஆடை அணிகலன்களும், ஆயுதங்களும், செடி கொடிகளும், மலர்களும் இயற்கை அழகு குன்றாமல்

வரையறுக்கப் பட்டிருப்பது ஓவியனின் கைத்திறத்தினைக் எடுத்துக் காட்டுவதாய் அமைகின்றது. இன்றளவும் அதன் வண்ணம் குறையாமல் இருப்பது ஓவியன் பயன்படுத்திய வண்ணங்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

ஆண்டிற் கொருமுறை நடைபெறும் மாசி சிவராத்திரித் திருவிழாவும், ஆனிமாதத்தில் நடைபெறும் முப்பழத் திருவிழாவும் பல்வேறு மக்களை இவ்விடத்தே ஈர்க்கும் வண்ணம் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பகுதியில் முதலாம் இராசராசனின் காசுகளும், பிற்காலப் பாண்டியர் காலத்துக் காசுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வூரின் வரலாறு மேலும் சிறப்புடையதாக இருந்ததை அறிய முடிகின்றது.

## எதிர்க்கோட்டை

இவ்வூர் சிவகாசி வெம்பக்கோட்டை சாலையில் சாயல்குடி ஆற்றின் கரையில் எதிர்க்கோட்டை உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் 'வெண்பைக்குடி நாட்டுக் கூத்தன்குடி' என்றும், 'கூத்தன் குடியான உதைய மார்த்தாண்ட புறம்' என்றும் அழைக்கப்படுகின்றது.

இங்குள்ள பழமையான சிவன்கோயில் தொல்லியல் சான்றுகளைத் தாங்கி நிற்கின்றது. இது ஆற்றின் கரையிலுள்ள ஒரு பெரும் கற்பாறையில் அமைந்துள்ளது. இக்கோயிலில் இருக்கும் இறைவன் கல்வெட்டுகளில் 'பாற்சுனைக்குடிப் படாரர்' என்றழைக்கப்படுகின்றார். ஆனால் தற்போது 'சுனைகாத்தசுவரர்' என்ற பெயரில் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

கருவறை மற்றும் அரை மண்டபத்தை மட்டும் கொண்டு விளங்கும் இக்கோயிலில் சோழன் தலைகொண்ட வீரபாண்டியனின் காலத்திய துர்க்கை, சண்டிகேசுவரர், விநாயகர் தெய்வத் திருவுருக்கள் காணப்படுகின்றன.

மேலும் இங்கு சோழன் தலைகொண்ட வீரபாண்டியன், சடையன்மாறன் ஆகியோரின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. எனினும் பிற்காலப் பாண்டியர் காலத்தில் இக்கோயில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் இயற்கையாய் அமைந்த சுனை ஒன்று உற்பத்தியாகி வருவதால் இப்பகுதி 'சுனைக்குடி' என்றே இப்போதும் அழைக்கப்பட்டுவருவது கவனிக்கத்தக்கது.

சடையன்மாறன் கல்வெட்டு; புதிதாகச் சேவகர்களை நியமித்ததாகத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டுக் காலத்திற்கு முன்பே இக்கோயில் இருந்ததை அறியமுடிகின்றது. சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் கல்வெட்டு; சுனைக்குடிப் படாரர்க்கு இவ்வூர் அறுவை வாணிகர் சேரியைச் சார்ந்த ஆச்சன் என்பவன் '55' ஆடுகள் தானமாகக் கொடுத்ததைத் தெரிவிக் கிறது. இதன்மூலம் 1100 ஆண்டுகளுக்கு முன்பே இவ்வூரில் துணிவணிகம் அதிகம் இருந்ததையும் அத்தொழிலில் ஈடுபட்ட வாணிகர் அதிகம் இருந்தனர் என்பதையும், அவர்கள் வாழ்ந்த இடம் 'அறுவை வாணிகச்சேரி' என்றழைக்கப்பட்டதையும் அறிய முடிகின்றது.

இவ்வூரிலுள்ள மற்றொரு தொல்லியல் சான்று வேணுகோபால சுவாமி கோயில் ஆகும். இதுவும் சிவன்கோயிலைப் போன்றே பிற்காலப் பாண்டியர் காலத்தில் திருப்பணி செய்யப்பட்டது. கல்வெட்டுகளில் இவ்விறைவன் 'நாராயண விண்ணகரத் தேவர்' என்றழைக்கப் படுகின்றார்.

இக்கோயிலில் முதலாம் இராசராசன், சுந்தரச் சோழ பாண்டியன் மற்றும் பாண்டிய மன்னர்களின் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. முதலாம் இராசராசனின் கல்வெட்டு வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு; இக்கோயிலில் பூசை நடைபெறுவதற்காகவும், மத்தளம் கொட்டு வதற்காகவும் தானம் வழங்கப்பட்ட செய்தியைத் தருகின்றது.

இம்மன்னனின் மற்றொரு கல்வெட்டு இவ்வூர் 'வணிகச் சபையார்' வரியிலியாக நில தானம் செய்ததைக் குறிப்பிடு கின்றது. இக்கோயிலிலுள்ள பிற்காலப் பாண்டியனின் கல்வெட்டு; மேற்படி வணிகச் சபையார் கால்வேலி நிலம் கோயிலுக்குத்

தானமாக வழங்கியதைத் தெரிவிக்கின்றது. கோயில் நிருவாகத்தில் வணிக சபையின் பங்கு அதிகமாக இருந்தது என்பதையும், இவ்வூரில் வணிக சபை 200 ஆண்டு காலமாக முறையாக இயங்கி வந்தது என்பதையும் இது எடுத்துக்காட்டுகின்றது.

துணி வணிகத்தில் மட்டுமல்லாது கல் மணி வணிகத்திலும் இவ்வூர் சிறந்து விளங்கி வந்தது என்பதை மற்றொரு கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சடாவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு; கூல நாகை ஈசுவரமுடைய நாயனார்க்கு அரைவேலி நிலம் தானமாகக் கொடுக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இந்நில தானத்தை கொண்டு கோயிலில் நைவேத்தியப் படைப்புகள் தவறாது நடைபெறவேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இந்நில மானது; புல்லிணைக் குறிச்சி விக்கிரம பாண்டீசுவரமுடைய நாயனார் கோயில் நிலத்திலிருந்து தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

## ஏழாயிரம் பண்ணை

இவ்வூர் சாத்தூரிலிருந்து 13 கி.மீ. தென்மேற்கில்; சாத்தூர் வட்டத்து நள்ளி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இது ஒரு ஜமீன் கிராமமாகும். ஏழாயிரம் என்பது எண்ணிக்கையையும், பண்ணை என்பது நிலத்தின் அளவையும் குறிக்கும். வணிகக் குழுக்கள் எண்களின் பெயரில் அமைந்திருந்ததைக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகின்றது. அதே போன்று ஏதோ ஒரு வணிகக் குழுவின் பெயரால் இவ்வூரின் பெயர் அமைந்திருக்கலாம் என்றும் கூறலாம்.

இவ்வூரின் பழமையை வெளிப்படுத்தும் முகமாக; இவ்வூர் ஜமீன் அரண்மனைக்குத் தெற்கிலுள்ள குளக்கரையிலமைந்த பாலச் சுவரில் தலையில்லாத தீர்த்தங்கரர் உருவமொன்று காணப்படுகின்றது. இதன் மூலம் இவ்வூரில் சமணமதம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருந்தது என்பதை அறியமுடிகின்றது.

மேலும் பூதல வீர உதைய மார்த்தாண்டன் என்னும் சேர மன்னன், 'ஏழாயிரம் பண்ணையில் நாம் புதிய வீட்டில் வீடா யிருந்த போது' என்று கன்னியாகுமரிக் கல்வெட்டில் குறிப் பிட்டுள்ளது இங்கு நோக்கத்தக்கது. இதன் மூலம் சேர மன்னர் ஆட்சி இங்கு நிலவியிருந்தது என்பதையும் அறிய முடிகின்றது.

## கம்பிக்குடி

இவ்வூர் காரியாபட்டியிலிருந்து மீனாட்சிபுரம் செல்லும் சாலையில்; காரியாபட்டி வட்டத்து அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிவன், விஷ்ணு கோயில்கள் இவ்வூரின் பழமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. ஆனால் அக்கோயில்கள் இன்று பாழடைந்து காணப்படுகின்றன.

இங்குள்ள முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று; இக்கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கப் பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. 'சோழ நல்லூர்' என்ற ஊரைச் சேர்ந்த வணிகன் ஒருவன் இத்தானத்தை வழங்கியுள்ளான் என்று கூறுகின்றது.

## கல்குறிச்சி

அருப்புக் கோட்டை மதுரை சாலையில்; காரியாபட்டி வட்டத்து கல்குறிச்சி உள்வட்டத்துள் அமைந்துள்ளது இவ்வூர். இங்குள்ள சிவன் கோயில் மூலம் இவ்வூரின் பழமையை அறிய முடிகின்றது. இச்சிவன் கோயில் பாழடைந்த நிலையில் இன்று காணப்படுகின்றது.

கருவறை, அரைமண்டபம் ஆகியவை எஞ்சியுள்ளன. கருவறையில் லிங்க உரு காணப்படுகின்றது. நந்தி, சண்டிகேசு வரர், விநாயகர் சிலைகள் கோயில் வளாகத்தின் வெளியே காணப் படுகின்றன. இச்சிலைகளின் உருவ அமைதியைக் கொண்டு

கி.பி. 13ஆம் நூற்றாண்டில் இக்கோயில் உருவாகியிருக்க வேண்டும் என அறியலாம். சிவன் கோயில் வளாகத்தில் ஸ்ரீதேவியின் சிலை ஒன்று காணப்படுகின்றது. இதன் மூலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் திருமால் கோயில் ஒன்றும் இருந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

## கல்லுமடை

இவ்வூர் திருச்சுழி வட்டத்து முக்குளம் உள்வட்டத்து; நரிக்குடி திருப்புவனம் சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரின் பழம் பெயர் கல்வெட்டின் வழியே 'திருப்பழையூர்' என அறிய முடிகின்றது. மேற்படிக் கல்வெட்டு கி.பி. 10ஆம் நூற்றாண்டினது. இதன்படி இவ்வூர் 1000 ஆண்டுகளுக்கு முன்பே சிறப்புடன் விளங்கியிருந்ததைக் காணலாம்.

இவ்வூரில் நீர்பாய்வதற்காகக் கல்லாலாகிய மடை ஒன்று அமைக்கப்பட்ட பின்னர் கல்லுமடை என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். கல்வெட்டுகளைக் கொண்டு விளங்கும் சிவன் கோயில் ஒன்று இவ்வூரில் 'பூலாங்குளம்' என்றழைக்கப்படும் இடத்தில் அமைந்துள்ளது. 'பூலான்' என்பது சமண சமயத்தோடு தொடர்புடைய பெயராகும். சான்றாக; நெல்லை மாவட்டத்து 'மறுகால் தலை' எனும் ஊரிலுள்ள சாஸ்தா 'பூலுடை சாஸ்தா' என்றழைக்கப்படுவதும், பொன்னமராவதி அருகிலுள்ள 'பூலான் குறிச்சி' எனும் ஊரும் சமணத் தொடர்புடைய ஊர்களாக உள்ளமை சுாணத்தக்கது.

சிவன் கோயில் பாழடைந்த நிலையில் காணப்படுகின்றது. இதன் அதிட்டானப் பகுதி மட்டும் நல்ல நிலையில் உள்ளது. அதிலுள்ள கல்வெட்டுகள் இக்கோயிலின் பழமையை எடுத்துக் காட்டுவதாய் அமைந்துள்ளன. இக்கோயில் இறைவன் இக்கல் வெட்டுகளில் 'திருப்பழையூர் ஈசுவரபடாரர்' என அழைக்கப் படுகின்றார். கோயிலின் முன்புறம் உள்ள ஒரு கற்பலகையில்

வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகின்றது. இக்கல்வெட்டு சடையன் மாறன் என்ற முற்காலப் பாண்டிய மன்னனின் காலத்தைச் சார்ந்ததாகும்.

பருத்திக்குடி நாட்டு மேல முக்குளத்தைச் சேர்ந்த கேரள சிங்க முத்தரையனான மாதேவன் மருதன் என்பவன் திருப் பழையூர் ஈசுவரபடாரர் கோயிலில் நொந்தாவிளக்கு எரிவதற்காக 25 பசுக்கள் கொடுத்த செய்தியைத் தெரிவிக்கின்றது. இம் மன்னனின் மற்றொரு கல்வெட்டு; 'மேல முக்குளத்து பூலாங் குளத்துத் திருப்பழையூர் தேவர்க்கு' நிலத்தானம் வழங்கிய செய்தியைத் தருகின்றது.

கோயில் அதிட்டானத்திலுள்ள கல்வெட்டுகள் முதலாம் சடாவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்திலும், முதலாம் மாறவர்மன் குலசேகரன் காலத்திலும் தேவதானமாக இத்திருப் பழையூர் நயினார்க்கு நிலம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றன.

சடாவர்மன் சுந்தரச் சோழ பாண்டியன் கல்வெட்டு இங்குள்ள கல்தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டுகளின் மூலமாக இறைவன் 'ஈசுவரபடாரர்' என்றும் 'திருப்பழையூர் தேவர்' என்றும், 'திருப்பழையூர் நயினார்' என்றும் அழைக்கப்பட்டதை அறியமுடிகின்றது. முற்கால பாண்டியர் காலத்திலும், சோழ பாண்டியர் காலத்திலும், பிற்காலப் பாண்டியர் காலத்திலும் வளமையாக விளங்கிய ஊர் அதன் பின்னர் பல அரசியல் போராட்டங்களில் நலிவடைந்து சீர்குலைந்திருக்க வேண்டும் என்று இச்சிவன் கோயிலைக் கொண்டே அறிய முடிகின்றது.

இக்கோயில் கல்வெட்டுகளைத் தவிர விநாயகர், தாய்மார் எழுவர், திருமால் ஆகிய தெய்வ உருவங்கள் கோயிலின் அருகிலேயே காணப்படுகின்றன. இச்சிலைகளின் திருஉருவ அமைதி கொண்டு அவை கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்க வேண்டும் எனக் கூறலாம்.

## கல்லூரணி

இவ்வூர் அருப்புக் கோட்டையிலிருந்து சாயல்குடி செல்லும் சாலையில்; அருப்புக் கோட்டை வட்டத்து மண்டபசாலையின் உள்வட்டத்துள் அமைந்துள்ளது.

இவ்வூரின் பழமைக்கு இங்குள்ள கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் விஷ்ணுசிலை ஒன்று எடுத்துக்காட்டாக இருக்கின்றது. இது நின்ற கோலத்தில் நாற்கரங்களுடன் கிரீட மகுடம் தரித்துக் காணப்படுகின்றது. மேலிருகரங்கள் சங்குசக்கரம் தாங்கிய நிலையிலும் கீழ்வலக்கரம் அபய முத்திரையுடனும் இடக்கரம் இடையில் ஊன்றிய நிலையிலும் காட்டப்பட்டுள்ளன. காதில் மகரகுண்டலங்களும், கழுத்தில் கனமான அணியும், மார்பில் முப்பிரிநூலும் அழகு செய்கின்றன. இடையாடை கணுக்கால் வரை காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இவ்வூரில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் விஷ்ணு கோயில் ஒன்றிருந்து அழிந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

## குகன்பாறை

கழுகுமலைச்சாலையில் சாத்தூர் வட்டத்து, நள்ளி உள் வட்டத்தில் அமைந்துள்ளது வெம்பக்கோட்டை. இவ்வூரினருகில் சிறிய கல்குன்று ஒன்றுள்ளது. அக்குன்றின் மூலமாக இவ்வூருக்குக் குகன்பாறை எனப் பெயர் ஏற்பட்டது. இக்குன்றின் அடிவாரத்தில் இயற்கையாய் அமைந்த புடவு ஒன்றுள்ளது. அப்புடவில் சமண முனிவர்கள் வாழ்ந்ததாகக் கூறப்படுகின்றது.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்துக் கல்வெட்டு இப்பாறையில் பொறிக்கப்பட்டுள்ளது. அது முன்னூற்றுவர் பெரும்பள்ளி என்ற சமணப்பள்ளி இருந்ததைத் தெரிவிக்கின்றது. மேலும் அச்சமணப்பள்ளி முன்னூற்றுவர் கோயிற் பிள்ளைகள்

என்ற வணிகக் குழுவின் பெயரால் பெயர் பெற்றது என்று தெரிகிறது. இச்சமணப்பள்ளிக்கு அரசு ஆதரவிருந்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. உடைந்த நிலையிலுள்ள சமணச் சிலை ஒன்று இவ்வூரில் காணப்படுகின்றது. அச்சிலை இங்கு ஒரு சமணப்பள்ளி இருந்தது என்பதற்கு ஆதாரமாக விளங்கி நிற்கின்றது.

## குண்டலக்குத்தூர்

இவ்வூர் சாத்தூர் வட்டத்து நென்மேனி உள்வட்டத்துள் இருக்கண்குடி-கோட்டூர் சாலையில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர்; 'கூடற்குடி' என்று குறிப்பிடப்படுகின்றது. முற்கால பாண்டியர் காலக் கல்வெட்டுகளில் 'கூடங்குடி நகர்' எனச் சுட்டப்படுகின்றது. சோழபாண்டியர் கல்வெட்டு; ராசராசப் பாண்டி நாட்டு முடிகொண்ட சோழவளநாட்டு இருஞ்சோ நாட்டு கூடற்குடி' என்று இவ்வூரின் இருப்பிடத்தைத் தெரிவிக் கின்றது.

இவ்வூரிலிருந்த சிவன் கோயில்; 'கூடற்குடி மகாதேவர் கோயில்' என்றழைக்கப்பட்டுள்ளது. சுந்தர சோழ பாண்டியன் கல்வெட்டு, 'வேம்பன் பூவன்' என்பவன் இக்கோயிலுக்கு ஆடுகளைத் தானமாக வழங்கிய செய்தியைத் தருகின்றது. மேற்படிக் கல்வெட்டு, பெருமாள் கோயிலின் வடபுறப் பாறையின் அருகேயுள்ள சிறுகுன்றில் காணப்பட்டது. பாறைகளை உடைக்கும் போது இக்கல்வெட்டும் சிதைந்துவிட்டது.

## குறண்டி

இவ்வூர் காரியாபட்டி வட்டத்துக் காரியாபட்டி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. காரியாபட்டியின் அருகிலுள்ள இவ்வூர்க் கல்வெட்டுகளில் 'வெண்பு நாட்டுக் குறண்டி' என அழைக்கப் படுகின்றது. இக்கல்வெட்டு இங்கு ஒரு சமணப்பள்ளி இருந்ததை

எடுத்துக் காட்டுகின்றது. 1200 ஆண்டுகளுக்கு முன்பு அச்சமணப் பள்ளி சிறப்புடனும், வளத்துடனும், வலிமையுடனும் விளங்கியதைப் பள்ளிமடம் கல்வெட்டுகளில் காணமுடிகின்றது.

அச்சமணப் பள்ளியில் சமணமத அறிஞர்களும், ஆசிரியர்களும் இருந்து சமணசமயக் கொள்கைகளைப் பரப்பி வந்தனர். மேலும் இலக்கிய இலக்கண நூல்களையும் உருவாக்கி வந்துள்ளனர். கல்வெட்டுகளின் வாயிலாக இப்பள்ளி 'பராந்தக பர்வதமாயினதென்வட்டைப் பெரும்பள்ளி' என்று அழைக்கப்பட்டதை அறியமுடிகின்றது. ஆனால் தற்போது இப்பள்ளியின் அடிச்சுவட்டைக் கூட எங்கும் காண முடியவில்லை.

இப்பெரும்பள்ளி பற்றிய செய்திகளைக் கழுகுமலை, பள்ளிமடம், சமணர்மலை போன்ற சமணத் திருத்தலக் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகின்றது. குணவீரபடாரகர், அரிட்டநேமிப் பெரியார், சந்திரப் பிரபாகர், தீர்த்த படாரகர், ஹரிச் சந்திர தேவர், குணகீர்த்தி, கனக நந்திப் படாரகர், குணசேன தேவர், போன்ற சமணச் சான்றோர்கள் பல ஊர்களுக்கும் சென்று சமண தத்துவ ஞானத்தை மக்களுக்குப் போதித்தனர்.

பள்ளிமடத்து மாறஞ்சடையனின் 26ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு: 'வெண்பு நாட்டுத் திருக்காட்டாம் பள்ளித்தேவர்க்கு அருங்குணத்தான் என்பவன் நூறு ஆடுகளைத் தானமாக வழங்கிய செய்திகளைத் தெரிவிக்கின்றது. இத்தானத்தின் மூலமாக இப்பள்ளிக்கு மாதம் ஒன்றுக்குப் பத்து நாழி நெய் வழங்க வேண்டும் என அச்செய்தி தெரிவிக்கின்றது.

மற்றொரு கல்வெட்டு, 'சாத்தன்காரி' என்பவன் 50 ஆடுகள் வழங்கியதைத் தெரிவிக்கின்றது. ஊராரும் கணத்தாரும் அத்தானத்திற்குக் காவலாய் இருந்து செயல்படுத்த வேண்டும் என்று அக் கல்வெட்டு கூறுகிறது.

## குலசேகர நல்லூர்

இவ்வூர் அருப்புக்கோட்டை திருச்சுழி சாலையில்; அருப்புக் கோட்டை வட்டத்து மண்டபசாலை உள்வட்டத்துள் அமைந் துள்ளது. இவ்வூரின் பழமையை எடுத்துக் காட்டும் வகையில் சிவன்கோயில், பூமலர்ந்த அம்மன் கோயில், முனிசாமி கோயில் ஆகியவை அமைந்துள்ளன.

சிவன்கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப் பட்டுள்ளது. கருவறை, அரை மண்டபம், மாமண்டபம் என்ற அமைப்புடன் காணப்படுகின்ற இக்கோயில் சிதலமடைந்த நிலையில் உள்ளது. கருவறையிலுள்ள இலிங்கமும், எதிரே உள்ள நந்தியும் எந்த வித மாறுதலுக்கும் ஆட்படாமல் விளங்குகின்றன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. அவை இக்கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தியைத் தருகின்றன.

நாயக்கர் காலத்திய நவகண்டச் சிற்பம் ஒன்று 'பூமலர்ந்த அம்மன் கோயில்' அருகில் உள்ளது. முதலாம் மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டொன்று முனிசாமி கோயில் அருகில் காணப்படுகின்றது. மணக்காவூர் என்ற ஊரைச் சேர்ந்த 'மணியன் கூத்தாடுவான்' என்பவன் இக்கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தியை அக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

இவ்வூர் சாத்தூர் வட்டத்தில் சாத்தூருக்கு வடகிழக்கில் அமைந்துள்ளது. இவ்வூரில் தற்போது கிடைத்துள்ள எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு இவ்வூரின் பழமைக்குச் சான்றாக அமைந்துள்ளது. மன்னனின் பெயரால் இவ்வூருக்குப் பெயர் ஏற்பட்டது. இதே போன்று மற்றொரு ஊரும் அருப்புக்கோட்டை வட்டத்தில் காணப்படுகின்றது.

மேற்சொன்ன கி.பி. எட்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு; பிரம்மதேயமாக நிலம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இப்பிரம்மதேய நிலத்திற்கு எல்கை குறித்து அளவிட்டுக் கல் நாட்டிக் கொடுத்தவர்கள் மன்னார்குடியைச் சார்ந்த 'பார்பனச் சான்றார்' என்பவர் ஆவர்.

இவ்வூரின் ஒரு பகுதியில் கிணறு தோண்டும் போது நான்கு கால்களுடன் கூடிய 'அரைப்புக் கல்' ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இவை எல்லாம் இவ்வூரில் பழமையான குடியிருப்பு இருந்து காலச் சீற்றத்தால் அழிந்ததற்கான தொல்லியல் சான்றுகளாகும்.

## கொல்லங் கொண்டான்

இவ்வூர் இராசபாளையம் வட்டத்து அயன்கொல்லங் கொண்டான் உள்வட்டத்துள் அமைந்துள்ளது. மாறவர்மன் குலசேகரன் கொல்லத்தை வென்ற பிறகு அவனுக்குக் 'கொல்லங் கொண்டான்' என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது. கொல்லங் கொண்டான் என்ற இச்சிறப்புப் பெயரில் பல ஊர்கள் உள்ளன. அவற்றுள் இவ்வூரும் ஒன்றாகும்.

சிவன் கோயில், பெருமாள் கோயில், மற்றும் இங்கு கிடைத்துள்ள தொல்பொருட்கள் போன்றவை, இவ்வூரின் பழமைக்குச் சான்றாய் விளங்குகின்றன. சிவன் கோயிலில் இருக்கும் இறைவன் பெயர் விக்ரம பாண்டீசுவரமுடையார் என்பதாகும். இக்கோயில் இரண்டாம் மாறவர்மன் விக்கிரமபாண்டியனின் காலத்தில் கட்டப் பட்டதாகும். அம்மன்னனின் பெயரிலேயே இறைவனும் பெயர் பெற்று உள்ளான் எனக் கொள்ளலாம்.

அம்மனுக்கென்று தனிக்கோயில் உள்ளது. அம்மன் கௌரி உமையாள் எனப் பெயர் பெற்றுள்ளாள். பெரிய கோயில் நம்பி என்பவன் 1592இல் இவ்வம்மன் கோயிலைக் கட்டியுள்ளான். இவனே அக்கால கட்டத்தில் சிவன் கோயிலிலும் திருப்பணி செய்துள்ளான்.

## கூமாப்பட்டி

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் வத்திராயிருப்பு உள் வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் அருகிலுள்ள விராட சமுத்திரம் எனும் குளக்கரையில் மதகுக் கல்வெட்டொன்று உள்ளது. கி.பி. 1552-ஆம் ஆண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டில்; 'தும்மிஹியான்' என்பவன் உரிக்கோல் சூரத்தான் என்பவனின் நிதியுதவியுடன் அம்மதகினைக் காட்டியதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன் மூலம் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் நீர் நிருவாகத்தில் மன்னனும் மக்களும் கவனம் செலுத்தினர் என்பது தெரிகின்றது.

இங்குள்ள சுந்தரராசப் பெருமாள் கோயில் தற்போது இடர்தீர்த்த பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகின்றது. இக் கோயில் கொல்லங் கொண்டானின் மேற்கில் அயன் கொல்லங் கொண்டான் என்ற இடத்தில் உள்ளது. இக்கோயில் கருவறை, அரைமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் காணப்படுகின்றது. சுவர்ப் பகுதியில் பொய்க் கோட்டங்களும் அரைத்தூண்களும் காணப்படுகின்றன.

இக்கோயிலின் தெற்கில் 'ஏகாதசி மண்டபம்' என்ற கல் மண்டபம் ஒன்று காணப்படுகின்றது. இது பல்வேறு அழகிய சிற்பங்களைக் கொண்டு சிற்பக்கலைக் கூடமாகத் திகழ்கின்றது. திருவில்லிபுத்தூர் ஆண்டாளை எழுந்தருளச் செய்து இம்மண்ட பத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருந்து வழிபாடு செய்ததின் பின்னர் எடுத்துச் செல்வது வழக்கம்.

பெருமாள் கோயிலின் எதிரில் எழுந்திருத்து மண்டபம் என்ற ஒரு கல்மண்டபம் காணப்படுகின்றது. இம்மண்டபத் தூண்களில் புடைப்புச் சிற்பங்கள் அழகு செய்கின்றன. முக மண்டபத் தூணில் அரச உருவின் புடைப்புச்சிற்பம் ஒன்று காணப்படுகின்றது. இது இம்மண்டபத்தைக் கட்டிய மன்னனின் உரு என்று கூறப் படுகின்றது.

இப்பெருமாள் கோயில் அருகிலுள்ள பலகைக் கல் ஒன்றில் கல்வெட்டொன்று பொறிக்கப்பட்டுள்ளது. கொல்லங்கொண்டான் ஊர்மக்களிடையே ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தை அது குறிப்பிடுகின்றது. உசேன் சாயபு காலத்தில் பாசிவிலையும், ஒரு கோட்டை நிலத்திற்கு ஒரு குறுணியாக விதிக்கப்பட்ட வரியும் இச்சிற்றாரிலுள்ள குளங்களை ஆழப்படுத்துவதற்கும், சீர்படுத்துவதற்கும் செலவு செய்ய வேண்டும் என அத்தீர்மானம் குறிப்பிடுகின்றது.

தென்காசிப் பாண்டிய மன்னன் அதிவீரராம பாண்டியன் காலத்தில் செப்பேடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது. கொல்லங் கொண்டானிலுள்ள அக்ரஹாரங்கள் சதுர்வேதி மங்கலமாக மாற்றியமைக்கப்பட்ட செய்தியை அது தெரிவிக்கின்றது. மேலும் அச்சதுர்வேதி மங்கலத்தின் நிருவாகத்தை அந்தணர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கூறுகின்றது. ஆண்மர் நாட்டுச் சேரியான நயினார் அக்ரஹாரம் பிரம்ம தேயமாக மாற்றப்பட்டு அரசியைக் கவுரவிக்கும் வகையில் 'சிவகாம சுந்தரிச் சதுர்வேதி மங்கலம்' என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டிருந்தது என்று அறிய முடிகின்றது.

வென்றுமாலையிட்ட வீரபாண்டியன் என்ற தென்காசிப் பாண்டியனின் 24-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டொன்று; பெரிய குளம் மதகுத் தூணில் காணப்படுகின்றது. நிலங்கள் திருத்தப்பட்டு வேளாண்மை செய்யத்தக்க வகையில் மாற்றப் பட்டதையும் விவசாயம் செய்ய ஏற்றவகையில் அம்மதகு கட்டப்பட்டதையும், அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

நாயக்கர் காலத்தில் 72 பாளையங்கள் பிரிக்கப்பட்டன. அவற்றில் ஒன்று இக்கொல்லங் கொண்டான் பாளையம் ஆகும். ஆங்கிலேயர் காலத்தில் இக்கொல்லங் கொண்டானின் பாளையக்காரனாக 'வாண்டையத் தேவன்' என்பவன் சமீனாக இருந்தான். அவனது கோட்டை நெற்கட்டான் செவல்கோட்டைக்கு நிகராக விளங்கியது. அத்துடனல்லாது புலித்தேவனுக்கு நெருங்கிய நண்பனாகவும் இருந்தான். அவனது தானாபதியாக இருந்தவன் 'வந்தியத்தேவன்' என்பவனாவான்.

# கொல்லம்பட்டி

இவ்வூர் சாத்தூர் வட்டத்தில் அதே உள்வட்டத்தில்; சாத்தூருக்குத் தென்கிழக்கில் 3 கி.மீ. தொலைவில் அமைந் துள்ளது. கொல்லன் ஒருவன் முறைப்படுத்தி உருவாக்கிய ஊராதலால் இது கொல்லர்பட்டி என அழைக்கப்பட்டது என்பர். இரும்புப் பணிசெய்யும் கொல்லர்கள் வாழ்ந்த ஊராகவோ அல்லது அவ்வினத்தவர் ஒருவருக்குத் தானமாக வழங்கப்பட்ட ஊராகவோ இது இருந்திருக்க வேண்டும். அதனால் இது கொல்லப்பட்டி என்று அழைக்கப்பட்டது. வருவாய் வசதிக்கேற்ப இவ்வூர் பெரிய கொல்லப்பட்டி என்றும் சிறிய கொல்லப்பட்டி என்றும் பிரிக்கப் பட்டுள்ளது.

இவ்வூர் ஒரு சமீனின் தலைமை இடமாக விளங்கியது. கம்பளத்து நாயக்கர் வழிவந்தோர் இச்சமீனின் தலைவராக இருந்தார்கள். இராமசாகி கெச்சிலப்ப நாயக்கர், ஸ்ரீவெங்கடேச எட்டப்ப கெச்சிலப்ப நாயக்கர் ஆகிய இரு சமீன்தார்களின் பெயர்களை மட்டும் இன்று நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. எட்டையபுரம், சாப்டூர், ஊத்துமலை, மன்னார் கோட்டை சமீன்கள் இவர்களுக்கு உறவினர்களாவர்.

எட்டையாபுரம் போன்றே சமீனுக்கு மரியாதை கொடுக்கும் வகையில் 'எட்டு' என்ற எண்ணை மக்கள் கூறுவதில்லை. அதற்குப் பதிலாக 'மகாராஜா' என்று கூறுகின்றனர். இவ்வூரில் தீர்ப்பு சொல்லும் விதம் சற்றுப் புதுமையானதாகும். குற்றம் சாட்டப் பட்டவர் முன்பு சமீனின் ஏவலாள் வந்து 'மகாராசா மறிச்சாச்சு' என்று கூறினால் அவர் தமது வேலையை அப்படியே நிறுத்திவிட வேண்டும். பின்னர் சமீன் விசாரித்து தீர்ப்பு வழங்கிய பின்னரே தனது பணியினைத் தொடரமுடியும் என்ற பொது வழக்கம் இருந்துள்ளது. சோதிடத்தை ஆதரித்த இச்சமீன் பல ஊர்களில் இருந்து சோதிடர்களை அழைத்து வந்து புதுவருடப் பலன் பார்ப்பது வழக்கம். மகாபாரதம் வாசித்தால் மழைவரும் என்ற நம்பிக்கை வழக்கமாக இன்றும் உள்ளது. சேவல்சண்டை இச்சமீனால் ஆதரிக்கப்பட்டு வந்துள்ளது.

சித்திரை மாதப் பவுர்ணமியன்று மதுரையில் நடைபெறும் அழகர் ஆற்றில் இறங்கும் உத்சவத்தைப் போன்று சாத்தூரிலும் நடைபெறும். அப்போது இரு சப்பரங்கள் (ஒன்று பெரியது மற்றொன்று சிறியது) கொல்லப்பட்டியிலிருந்து சாத்தூருக்கு எடுத்துச் சென்று சாத்தூரப்பனான வெங்கடாசலபதியை அமர்த்தி முதலில் சாத்தூரை வலம் வரும். இந்நிகழ்ச்சியில் சமீன்தாரும் கலந்து கொள்வார். இவ்விரு சப்பரத்தினையும் சோடிப்பவர்கள் இவ்வூர் இசுலாமியர்களாவர். சின்ன சப்பரத்தினை இந்துக்களுடன் இசுலாமியர்களும் சுமக்கும் வழக்கம் இன்றும் நிலவுவதாகக் கூறுகின்றனர். மேலும் இச்சமீனுக்குள் அடங்கிய 18 பட்டிகளுக்கும் மேற்படித் திருவிழாச் செய்தியினை இசுலாமியர்களே சென்று கூறிவரும் வழக்கம் இருந்துள்ளது. இச்செயல்பாடுகள் மதநல்லிணக்கத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

ஊரின் தென்மேற்கு மூலையிலுள்ள திருக்கண் மண்டபம் என்றழைக்கப்படும் கல்மண்டபம் ஒன்றுள்ளது. சாத்தூரிலிருந்து இங்கு கொண்டு வரப்படும் வெங்கடாசலபதிக்கு இம்மண்டபத்தில் வைத்துத்தான் மூன்றுநாள் திருவிழா நடைபெறும். மண்டபத்திற்கு வந்திறங்கியவுடன் சமீன் அரசு மரியாதையுடன் பல்லக்கில் வந்து சுவாமி தரிசனம் செய்வது வழக்கமாக இருந்தது. திருக்கண் மண்டபத் தூண்களில் பல்வேறு தெய்வ உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாக உருவாக்கப்பட்டு உள்ளன. மத்தியிலுள்ள இரு தூண்களில் சமீன் மற்றும் இராணியின் முழுவுருவச் சிலைகள் இடம் பெற்றுள்ளன. அரண்மனை வளாகத்தில் ஜக்கம்மா, வீர சின்னம்மா, பாப்பம்மா ஆகிய குல தெய்வக் கோயில்கள் இடம் பெற்றுள்ளன. அரண்மனை வாயிலிலுள்ள நிலைக் கல்லில் பானர்மேனின் செப்பேடு ஆனி அடித்துப் பொருத்தி வைத்துள்ள நிலையில் காணப்படுகின்றது.

மேலும் இவ்வூரில் 18,19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சில உதிரிச் சிற்பங்களும், தொல்பொருட் சான்றுகளும் காணப்படுகின்றன. தற்போது அரண்மனையின் முகப்புப்பகுதி மட்டுமே எஞ்சி நிற்கின்றது. அது நான்கு வளைவுகளை ஆறு தூண்கள் தாங்கி நிற்பது போன்று உருவாக்கப்பட்டுள்ளது. நிலைத் தூண்களில் கஜலட்சுமி, சிம்மம், மகரம், பூரணகும்பம் ஆகியவை புடைப்புச்

சிற்பங்களாக உருவாக்கப்பட்டுள்ளன. விதானப் பகுதிகளில் 12 இராசிகள் அடங்கிய சக்கரம் காணப்படுகின்றது. இதன் நடுவில் ஒருவன் காலை மற்றொருவன் பிடித்த நிலையில் வட்டமாக இருப்பது போன்று புடைப்புச் சிற்பம் உள்ளது. இது இராசி களினுடைய சுழற்சிக்குத் தக்கவாறு மனித வாழ்க்கைச் சக்கரமும் அமைந்துள்ளது என்பதைக் கோடிட்டுக் காட்டும் வகையில் உள்ளது. இவ்வரண்மனைக்கருகில் தெக்கரண்மனை என்றும், சொக்கப்பத்தாள் அரண்மனை என்றும் சிறிய அரண்மனைகள் உள்ளன. ஆனால் அவையீரண்டும் தற்போது சிதைந்த நிலையில் காணப்படுகின்றன.

கி.பி. 1756இல் யூசுப்கானும் 1759-இல் கான்சாகிப்பும் கொல்லங்கொண்டான் கோட்டையைத் தாக்கியுள்ளனர். 1766ல் மேஜர் பிளின்ட் வாண்டையத் தேவனுடன் போரிட்டுத் தோல்வியுறு கின்றான். ஆனால் 1767-ல் கர்னல் டொனால்டு கேம்ப்பல் தலைமை யில் வந்த படைகள் கொல்லங் கொண்டான் கோட்டையைத் தாக்கித் தகர்த்தனர். வாண்டையத்தேவன் தப்பிவிட்டான். இந்நிகழ்ச்சியினை மேற்படி கர்னலின் கடிதம் தெரிவிக்கின்றது.

டொனால்டு கேம்ப்பல் கோட்டையைத் தகர்க்கக் கடும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது என்பதை அவரது கடிதம் தெளிவுறுத்துகின்றது. இப்போர் நடைபெற்றதற்கு ஆதாரமாக அயன்கொல்லங் கொண்டானின் மேற்குப் பகுதிகளில் ஆங்காங்கே பீரங்கிக் குண்டுகளின் சிதறல்கள் கிடப்பதை இன்றும் காணலாம். சிதைந்த கோட்டையும் இன்று காணப்படுகின்றது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழி இன்று சிறு ஓடைப் போலக் காணப்படு கின்றது.

வாண்டையத் தேவன் கலைகளில் ஆர்வம் உள்ளவனாகத் திகழ்ந்தான் எனத் தெரிகின்றது. நாட்டியக் கலையில் ஆர்வ முடைய இவன் மயிலாள் குயிலாள் என்ற இரு நாட்டியப் பெண்களுக்கு அரசு நர்த்தகி என்ற பட்டத்தை வழங்கியுள்ளான். அந்தப் பெண்களுக்கு நில தானங்களும் நல்கியுள்ளான். இன்றளவும் இவ்வூரின் ஒரு நிலப்பகுதி மயிலாள் குயிலாள் குளப் பாசனம் எனக் குறிப்பிடுவது இச்செய்தியை உறுதி செய்கின்றது.

பாளையக்காரன் ஒருவன் ஆடும் பெண்களுடன் நிற்கும் உருவம் இரு பலகைக் கல்லில் காணப்படுகின்றது. இவ்வுருவங்கள் மயிலாள் குயிலாள் உருவங்கள் என்றும் பாளையக்காரன் 'வாண்டையத் தேவன்' உருவம் என்றும் இவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

## கோட்டையூர்

இவ்வூர் சாத்தூரிலிருந்து வடகிழக்கில் 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோட்டையூர் என்பதற்கு கோட்டையைக் கொண்ட ஊர் எனப் பொருள் கொள்ளலாம். நாயக்கர் காலக் கோட்டை இங்கிருந்ததாகவும், தற்போது அழிந்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. அவ்வாறு அழிந்த பின்னர் உள்ள எச்சங்கள் இங்கு காணப்படுகின்றன.

குருநாதசுவாமி என்ற யோகி ஒருவர் இவ்வூரில் வாழ்ந்து முக்தி பெற்றுள்ளார். அவரது வீடு தற்போது வழிபாட்டிற்குரிய இடமாக மாற்றப்பட்டுள்ளது. அவரது சமாதியில் பல வியத்தகு சக்திகள் உள்ளதாக மக்கள் நம்புகின்றனர். இவர் இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி பல அரிய செயல்களைச் செய்து முக்தி அடைந்தவர் என்கின்றனர். கோட்டையூர் தற்போது மக்களால் 'கோட்டூர்' என்றே அழைக்கப்படுகின்றது.

## கோலவார் பட்டி

இவ்வூர் நாத்தூருக்கருகில் வடகிழக்கில் 8 கி.மீ. தொலைவில் சாத்தூர் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டில் இவ்வூர் 'இருஞ்சோ வளநாட்டு கூடார் குடியான கோலவார் பட்டி' என அழைக்கப்படுகின்றது.

இவ்வூரில் நாயக்கர் காலத்துச் சிவன் கோயில் ஒன்றுள்ளது. இவ்விறைவன் பெயர் 'சொக்கநாதர், என்றும், இறைவி பெயர் 'அங்கயற்கண்ணி' என்றும் குறிப்பிடப்படுகின்றது. கோலவார் பட்டி மற்றும் ஒரு சில கிராமங்கள் இக்கோயிலுக்குத் தேவ தானமாக வழங்கப்பட்ட செய்தியினை ஒரு பாடல் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

'சேக்கிழார் ஆரிய நாயனார்' என்பவர், அழகிய சொக்கன் வரகுணராமன் வீரபாண்டியன் வேங்கடபதிராயர், முத்துவீரப்ப நாயக்கர், திருவிருந்தபெருமாள் பிள்ளை ஆகியோரின் நன்மைக் காகக் கோயிலில் அபிஷேகம் செய்யவும், பூசை செய்வதற்காகவும் இத்தானம் வழங்கப்பட்டதாக இக்கல்வெட்டுச் செய்தி தெரிவிக் கின்றது.

தூண்மண்டபத்து ஒரு தூணில் ஆளுருவச் சிலை ஒன்று காணப்படுகின்றது. அச்சிலை கண்டப்ப நாயக்கனின் சிலையாகும். இக்கோயிலுக்கு வெளித்திருச்சுற்று மதிலும் காணப்படுகின்றது. இச்சுவரில் மேஜர் பானர்மேனின் ஆணை அடங்கிய செப்பேடு பதித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வூருக்கும் நல்லாண்பட்டிக்கும் இடைப்பட்ட மேட்டுப் பகுதி பொட்டலாகக் காணப்படுகின்றது. இம்மேடு இன்றளவும் யுத்தமேடு என்றழைக்கப்படுகின்றது. மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் இங்கு போர் நடந்ததால் இப்பெயர் ஏற்பட்டது என்பர்.

இவ்வூர் பாளையப்பட்டுக்களில் ஒன்றாக விளங்கியது. கம்பளத்து நாயக்கர் வழிவந்தவர்கள் இப்பாளையப்பட்டின் சமீனாக ஆளுகை செய்து வந்தனர். வேலுச்சாமி நாயக்கர் என்பவரே இப்பாளையப்பட்டின் கடைசி சமீனாவார். கோலவார் பட்டி சமீனுக்குட்பட்ட எல்லையில் பதினெட்டுபட்டி கிராமங்கள் இருந்துள்ளன. மேலும் கட்டபொம்மனுக்கு அடைக்கலம் கொடுத்த ஊர் இது என்று கூறுவர். ஊமத்துரை தப்பி வந்த போது இக்கிராம மக்கள் அவருக்குக் கூழ் வழங்கிப் பாதுகாத்தனர். இருப்பினும் இச்சமீன் எட்டையபுரத்து சமீனுக்கு வரிகட்டி

இப்பகுதியை ஆண்டுவந்தனர் என்பதும் இங்கு நோக்கத்தக்கது. சமீன் அரண்மனை இருந்த இடம் தற்போது மண்மேடாகக் காட்சியளிக்கிறது.

## கோவிந்த நல்லூர்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் கோட்டையூர் உள் வட்டத்தில் கரிசல் குளம் அருகில் அமைந்துள்ளது. இவ்வூரின் பழமையை இங்குள்ள சிவன் கோயில் மூலமாக அறியமுடிகின்றது. இவ்வூரின் குளக்கரையில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட சிவன் கோயில் காணப்படுகின்றது.

இச்சிவன் கோயில் கருவறை, அரை மண்டபத்துடன் கட்டப் பட்டுள்ளது. சிகரப்பகுதி சிதலமடைந்து காணப்படுகின்றது. சுவர்ப்பகுதியில் பொய்க் கோட்டங்கள் காணப்படுகின்றன. பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுக்கள், திருப்பணியின்போது இடம்மாற்றி வைக்கப்பட்டுள்ளன. அதனால் முழுமையான வரலாற்றைத் தெரிந்துகொள்ள இயலவில்லை. இருப்பினும் கோயிலுக்கு வழங்கப்பட்ட நில தானத்தைக் குறிப்பிடுகிறது என ஊகிக்கமுடிகிறது.

கரிசல் குளம் அய்யனார் கோயில் அருகில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட பலகைக் கல் ஒன்று காணப்படுகின்றது. இக்கல்வெட்டு; 'ஸ்ரீவல்லபன்' என்ற தென்காசிப் பாண்டியனின் ஐந்தாவது ஆட்சியாண்டில் சிவன் கோயிலுக்கு அடுக்களைப் புறமாக நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தருகின்றது. மேலும் மன்னன் தானம் வழங்கிய நிலத்தின் எல்லையையும், அத்தானத்தை முறையாக நிறைவேற்றித் தருமாறு அதிகாரிகளுக்கு ஆணையிட்டதையும் தெரிவிக்கின்றது.

## கோவிலான் குளம்

இவ்வூர் அருப்புக்கோட்டை மதுரை சாலையில்; அருப்புக் கோட்டை வட்டத்துப் பாலையம்பட்டி உள்வட்டத்துள் அமைந் துள்ளது. இவ்வூருக்குக் 'கும்பனூர்' என்ற பழைய பெயர்

இருந்ததைக் கல்வெட்டின் வழி அறியமுடிகிறது. இவ்வூரிலுள்ள சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் ஊரின் பழமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன.

சிவன் கோயில் இறைவன் அம்பலப்ப சுவாமி என்றழைக்கப் படுகின்றார். அம்பலத்து ஆடுகின்ற இறைவனைத்தான் 'அம்பலப்பன்' என்ற பெயர் சுட்டி நிற்கின்றது. தற்போது இது சிவன் கோயிலாக விளங்கிய போதிலும் இங்குள்ள கல்வெட்டு களைக் கொண்டு பார்க்கும்போது இது ஒரு சமணக் கோயிலாக விளங்கியிருந்தது என்பது தெரிகிறது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்று "கும்பனூரில் இருக்கின்ற முக்குடையாருக்கு" தங்கத்தால் விமானம் அமைத்த தாகக் குறிப்பிடுகின்றது. 'முக்குடையார் என்பது சமணத் தீர்த்தங்கரரைக் குறிப்பதாகும். 'முக்குடைக் கீழமர்ந்த முனிவோன் தாழி' என்ற சிலம்பின் வழி இதனை உறுதி செய்யலாம்.

மேலும் இக்கல்வெட்டு இக்கோயிலுக்காக இறைவன் திருவுரு ஒன்றையும், இயக்கி உரு ஒன்றினையும் செம்பில் செய்தளித்ததைக் குறிப்பிடுகின்றது. 'இயக்கி' என்பது சமணத்திற்குரிய பெண்ணடி யார்களைக் குறிப்பதாகும். இக்கல்வெட்டு கோயிலுக்காக நில தானம் வழங்கியதையும், தண்ணீர்ப்பந்தல் ஒன்று அமைத்துக் கொடுத்ததையும் தெரிவிக்கிறது.

'சோழகோன்' என்ற அதிகாரியின் பாடல் கல்வெட்டொன்று, இக்கோயிலுக்கு நில தானம் வழங்கியதையும், கோயில் சொத்துக் களையும், கோயிலையும் பாதுகாக்க காவலர்களை நியமித்ததையும் கூறுகின்றது. கோயில் கருவறையில் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரர் சிலை ஒன்று காணப்படுகின்றது. மற்றொரு சிலை மகாவீரர் அசோக மரத்தடியில் அமர்ந்த கோலத்தில் வடிக்கப்பட்டுள்ளது. அவரின் தலைமேல் முக்குடை காட்டப் பட்டுள்ளது. இம்மூன்று குடையை வைத்துத்தான் இவர் முக்குடையார் எனக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றார். இத்தீர்த்தங்கரரின் அருகில் இயக்கர்கள் வெண்கவரி கொண்டு வீசுவது போன்று காட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள பெருமாள் கோயில் இடிந்த நிலையில் காணப்படுகின்றது. இறைவன் 'எங்கும் அழகிய பெருமாள்' என்று குறிப்பிடப்படுகின்றார். இக்கோயிலிலுள்ள மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு கோயிலுக்குப் பசுக்களும், பழங்காசு ஒன்றும், இரண்டு திரமங்களும் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.

## சாத்தூர்

இவ்வூர் திருநெல்வேலி மதுரை நெடுஞ்சாலையில்; சாத்தூர் வட்டத்துச் சாத்தூர் உள்வட்டத்தில் வைப்பாற்றின் கரையில் அமைந்துள்ளது. கி. பி. 825-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகளில் இவ்வூர் 'இருஞ்சோழ நாட்டுச் சாத்தனூர்' என்று குறிப்பிடக் காணலாம். சாத்தன் கோயிலை மையமாக வைத்து ஊர் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் இப்பெயர் பெற்றிருக்க வேண்டும் எனலாம்.

மேலும் இக்கால கட்டத்தில் களக்குடி நாட்டைச் சேர்ந்த பாண்டிய அதிகாரி சாத்தன் மாறன், சாத்தன் எயினன், சாத்தன் கணபதி, சாத்தன் கொற்றி, சாத்தன்காரி, எட்டி சாத்தன் போன்றவர்கள் இருந்துள்ளார்கள். இவர்கள் காலத்தில் இவ்வூர் உருவாக்கப் பெற்று சாத்தனூர் எனப் பெயர் பெற்றிருக்கலாம்.

இவ்வூரின் மடைக்கல்வெட்டு இவ்வூரின் பழமையை எடுத்துக் காட்டுகிறது. நின்றசீர் நெடுமாறன் காலத்தில் சாத்தூர் குளத்தில் மடைகள் அமைக்கப்பட்டு நீர் நிருவாகம் முறையாகச் செய்யப்பட்டிருந்தது. அவை காலப்போக்கில் தொடர் பராமரிப்பின்மையால் அழிவுற்றன. இதனைக் கண்ணுற்ற இருப்பைக் குடிக்கிழவன் கி. பி. 825-இல் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் காலத்தில் சிதைந்த மடைகளை அகற்றிவிட்டு கல்மடைகளை அமைத்து குளத்தைச் சீர்திருத்தினான். இச்செய்தியினை சடையன்மாறனின் வட்டெழுத்துக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

இருக்கண்குடியிலுள்ள சடையன்மாறனின் 18-ஆம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டு; இருப்பைக்குடிக்கிழவன் செய்த பணியினைப் பாடல் வடிவில் தெரிவிக்கின்றது. அதில் இவன் சாத்தனூரில் செய்த பணியை;

'சாத்தனூர் பெருங்குளத்து வேப்பமடை
கற்படுத்தும் பொன்னான்மடை தன்னொடும்
பூங்குறி மடையமைத்து . . . .' என

விவரித்துச் சொல்கின்றது.

இங்கு வெங்கடாசலபதி கோயில், பிள்ளையார் கோயில், சிவன் கோயில், சுப்பிரமணியர் கோயில், அய்யனார் கோயில் அனுமார் கோயில், பத்ரகாளியம்மன் கோயில், நொண்டிக் கருப்பசாமிக் கோயில் எனப் பல கோயில்கள் உள்ளன. இவற்றுள் வரலாற்றுச் சிறப்புடைய வெங்கடாசலபதி கோயிலும், சிவன்கோயிலும் முக்கிய இடம் பெறுகின்றன.

சிவன் கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில், கட்டப் பட்டிருந்தாலும் நாயக்கர்காலத் திருப்பணியால் பழம் பெருமையை இழந்து காட்சி அளிக்கின்றது. இக்கோயிலில் இரண்டு நந்தி சிலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கி.பி. 10-ஆம் நூற்றாண்டினது. மற்றொன்று கி.பி. 13-ஆம் நூற்றாண்டினது.

வெங்கடாசலபதி கோயில் பிற்காலப் பாண்டியர் கட்டடக் கலையையும் கல்வெட்டுகளையும் கொண்டு விளங்குகின்றது. மாமண்டபம் பிற்காலக் கட்டட அமைப்புடன் விளங்குகின்றது. தூண்மண்டபம் பாளையக்காரர்களின் காலத்தில் கட்டப் பட்டிருக்க வேண்டும். அதில் ஒரு தூணில் சமீன் ஒருவரின் உருவச்சிலை இடம்பெற்றுள்ளது.

இக்கோயிலில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று; 'இருஞ்சோழ நாட்டு வானவன் மாதேவிபுரத்து நகரத்தைச் சேர்ந்த நகரத்தார்கள் இக்கோயிலுக்கு இறையிலியாக நிலத்தானம் வழங்கிய செய்தியைத் தருகின்றது. மற்றொரு கல்வெட்டு; இறைவனுக்கு

உணவு படைப்பதற்காகவும், கோயிலின் பிற பணிகளுக்காகவும் இறையிலி தேவதானமாக நிலம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

இக்கோயிலிலுள்ள குதிரை வாகனம் அழகிய வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டுப் பித்தளைத் தகடு கொண்டு போர்த்தப் பட்டுள்ளது. குதிரையின் பின்பகுதியில் உள்ள கல்வெட்டு இக்குதிரை வாகனம் செய்யப்பட்ட வரலாற்றைத் தெரிவிக்கின்றது.

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் மதுரையில் அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழா நடைபெறும்போது சாத்தூரிலுள்ள வெங்கடாசலபதிப் பெருமாளும் வைப்பாற்றில் இறங்குவார். இவர் 'சாத்தூரப்பன்' என்று இப்போது அழைக்கப்படுகின்றார். ஆற்றில் இறங்கி முடித்தவுடன் மூன்று நாட்கள் கொல்லப்பட்டிக்கு எடுத்துச்சென்று அங்குள்ள எழுந்திருத்து மண்டபத்தில் வைத்து வழிபாடு செய்வது சமீன் காலத்தில் வழக்கமாக இருந்தது- இவ்வாறு நடைபெறும் திருவிழாவினைப் 'பாறைக் காட்டுத் திருவிழா' என்பர். உற்சவரான சாத்தூரப்பனைச் சுமந்து வரும் இக்குதிரை வாகனத்தைப் பித்தளையால் கி.பி. 1823-இல் சுந்தர பாண்டிய இராமசாமி கெச்சிலப்ப நாயக்கர் என்ற கொல்லப்பட்டி சமீன் செய்தளித்துள்ளார்.

சாத்தூர் சமீன் புகழ்பெற்ற சமீன்களில் ஒன்றாகத் திகழ்ந்தது. அப்போது ஷாஜகான் (1627-1658) தன்னுடைய அதிகாரிகள் மூலமாக தெற்கேயுள்ள மன்னர்களோடு தொடர்பு கொண்டிருந்தான். அவ்வதிகாரிகளில் ஒருவன் சாத்தூரில் ஒரு சத்திரம் ஒன்றைக் கட்டித் தன்னுடைய மன்னன் ஷாஜகான் பெயரையே அதற்குச் சூட்டினான்.

இவ்வாறு கட்டப்பட்ட சத்திரத்தின் நிருவாகத்தைச் செவ்வனே நடத்துவதற்காக ஒரு சிற்றூரையே தானமாக அளித்தான். அச்சிற்றூர் 'சத்திரப்பட்டி' என்று அழைக்கப்பட்டது. இவ்வூரின் வருவாய் சத்திரத்திற்கும், பிற கோயில்களுக்கும் செலவிடப்பட்டு வந்துள்ளது.

சாத்தூரில் ஒரு செப்பேடு கிடைத்துள்ளது. இச்செப்பேடு இடங்கை வலங்கைப் பிரிவினரிடையே ஏற்பட்ட சண்டையைப் பற்றியும் அதன் முடிவைப் பற்றியும் தெரிவிக்கின்றது. இடங்கைப் பிரிவைச் சார்ந்த தனிப்புலியுடையான் என்பவன் வலங்கைப் பிரிவைச் சார்ந்த தலைவன் 'ஒருக்கப் புலியுடையான்' என்பவனை வெற்றி கொள்கின்றான். இவ்வெற்றியைப் பாராட்டும் விதமாக மதுரையைச் சேர்ந்த கம்மாள இனத்தவர்கள் இவனைப் புகழ்ந்து சில சிறப்புகளைச் செய்தனர் என்று அச்செப்பேடு தெரிவிக்கின்றது.

## சிவகாசி

இவ்வூர் சிவகாசி வட்டத்து அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. சாத்தூரிலிருந்தும் திருவில்லிபுத்தூரிலிருந்தும் 20 கி.மீ. தொலைவில் உள்ளது. இன்றைய அளவில் தொழிலில் சிறந்து விளங்கும் இவ்வூர் பல ஊர்களுடனும் பேருந்து வழித்தடத்தால் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வூரின் பெயர்க்காரணம் பற்றிச் செவிவழிக் கதையொன்று வரலாற்றோடு இணைத்துக் கூறப்பட்டு வருகின்றது. அது; அரிகேசரி பராக்கிரம பாண்டியன் என்ற தென்காசிப் பாண்டியன் தென்காசியுள் கோயில் ஒன்றை எழுப்பி அதில் எழுந்தருளச் செய்யவேண்டி இலிங்கம் ஒன்றை வாங்குவதற்காக காசி சென்றான். இலிங்கம் ஒன்றை வாங்கித் திரும்பும் வழியில் சிவகாசியில் தங்க நேரிட்டது. அப்போது காடாகக் காட்சியளித்த இவ்வூரில் தங்கியபோது இலிங்கம் எழுந்தருளக் குறித்த நல்ல நேரம் நெருங்கி விட்டபடியால் தான் கொண்டு வந்த இலிங்கத்தை இங்கேயே எழுந்தருளச் செய்தான். அதன் பின்னர் இங்கு ஒரு கோயிலும் கட்டினான் என்று கூறுகின்றனர்.

இது போன்று மற்றொரு கதையும் கூறப்பட்டு வருகின்றது. அது; காசிகண்ட பராக்கிரமரிஷி என்பவர் காசி சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவ்வாறு சென்று வருகின்ற போது ஒரு நாள் இவ்வூரில் தங்க நேரிட்டது. அப்போது அவர்

தியானம் மேற்கொண்டார், அத்தியானத்தில் 'காசி சிவன்' காட்சி தந்தார். சிவன் காட்சி கொடுத்ததினால் 'சிவன் காட்சி' எனப் பெயர் பெற்று நாளடைவில் இப்பெயரே 'சிவகாசி' என மாறிற்று என்பர்.

இவ்வூரில் விசுவநாத சுவாமி கோயில், சுப்பிரமணிய சுவாமி கோயில், பத்ரகாளியம்மன் கோயில், மாரியம்மன் கோயில் பெருமாள் கோயில் என்று பல கோயில்கள் உள்ளன. இவற்றுள் காலத்தால் பழமையானது விசுவநாதர் கோயில் எனும் சிவன் கோயிலே ஆகும். இவ்வூர் தோன்றிய செவிவழிக் கதையின் அடிப்படையில் இக்கோயில் தென்காசி கண்ட அரிகேசரி பராக்கிரம பாண்டியனால் கட்டப்பட்டது என்று கூறினாலும் அதனை உறுதி செய்யும் வகையில் கல்வெட்டு ஏதும் கிடைக்க வில்லை.

இச்சிவன் கோயில் அமைப்பு வெகு சாதாரணமாகக் காணப் படுகின்றது. சுவாமிக்கும் அம்மனுக்கும் தனித்தனியே சன்னதிகள் உள்ளன. சுவாமி கோயில் நிலையிலுள்ள கல்வெட்டொன்று இக்கோயில் திருப்பணிக்காக விவசாயிகளும், வணிகர்களும் வழங்கிய பொருட்களைப் பற்றித் தெரிவிக்கின்றது. வணிகர்கள் நெல், பாக்கு, உப்பு, புளி, கடுகு போன்றவற்றைக் கொண்டு வந்து அதனை விற்கும் போது; விற்கும் தொகையில் ஒரு பகுதியைக் கோயில் திருப்பணிக்காகத் தரவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டதாகக் கூறுகின்றது.

நாயக்கர்களுடைய ஆளுகையின்போது சிவகாசி ஒரு ஆட்சிப் பீடமாக விளங்கியது. திருமலை நாயக்கருடைய சகோதரர், குமார முத்து வீரப்ப நாயக்கர் என்பவர் கி.பி. 1659-ல் சிவகாசியின் ஆளுநராக நியமிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இவ்வூரில் கிடைத்த ஒரு ஓலைச்சுவடியில் உள்ள செய்தி; இக்கோயில் குருக்களின் முன்பு ஏற்பட்ட ஒரு ஒப்பந்தத்தைத் தெரிவிக்கின்றது. பூக்கட்டும் தொழிலைச் செய்யும் பண்டார இனத்தவர்கள் மாதத்திற்கு மூன்று பணம் தங்களின் தாயின் உணவு மற்றும் உடைத் தேவைக்கு வழங்கவேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டதைத் தெரிவிக்கின்றது. இத்தீர்மானம் அன்றைய சமுதாயச் சூழ்நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

மேலும் இவ்வூரில் தோட்டனம் சத்திரம், திருநெல்வேலி வெங்கடேசுவர சோதிடர் சத்திரம் என இரண்டு சத்திரங்கள் உள்ளன. சோதிட சத்திரத்தில் பாத யாத்திரை செல்வோருக்கு உணவு வழங்கப்பட்டு வருகின்றது. சிறந்த தொழில் நகராகவும், அச்சு மற்றும், தீப்பெட்டித் தொழிலும் சிறந்து விளங்குகின்ற இவ்வூரின் வான வெடிப்பொருட்கள் உலகச் சிறப்புடையவை.

## சிறுகுளம்

இவ்வூர் சாத்தூர் வட்டத்து நென்மேனி உள்வட்டத்தில்; கோட்டூர் இருக்கண்குடிச் சாலையில் அமைந்துள்ளது. சிறுகுளம் என்று தற்போது அழைக்கப்பட்டாலும் கல்வெட்டுகளில் இவ்வூர் 'ஆலங்குடி' என்று அழைக்கப்பட்டதை அறிய முடிகின்றது.

இருக்கண்குடியிலுள்ள ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் கல்வெட்டு; இருப்பைக்குடிக்கிழவன் என்ற அதிகாரி ஆலங்குடியின் தலைவனாகவும் செயல்பட்டான் எனத் தெரிகின்றது. இவ்வூரைச் சேர்ந்த 'சத்ரு பயங்கர முத்தரையன்' என்பவன் குறிப்பிடத்தக்க பெருமைக்குரியவனாக, சிறந்த குறுநிலத்தலைவனாக விளங்கினான் என்பதைக் கி. பி. 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று கூறுகின்றது.

முதற்குலோத்துங்க சோழன் கல்வெட்டு; ஆலங்குடிச் சபையாருடைய சபை நடவடிக்கையினைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆலங்குடியிலுள்ள குளங்களையும், மடைகளையும் சீர் செய்வதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதற்காக அச்சபையார் குறிப்பிட்ட நிலங்களை, 'கருநிலக்குடி நாடாழ்வான் பேரரையன்' என்பவனிடம் ஒப்படைக்கப்பட்டது. இவன் ஆலங்குடியைச் சேர்ந்த 'ஆரியன் ஆதிச்சனான அழகிய பாண்டிய கருநிலக்குடி நாடாழ்வானுடைய திருவேளைக்காரனாவான்.

## செங்குன்றாபுரம்

இவ்வூர் விருதுநகர் எரிச்சநத்தம் சாலையில்; விருதுநகர் வட்டத்துள், அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் கல்வெட்டுகளில்; 'செங்குடி', 'சங்கநாதபுரம்' 'செங்கண்மாநகரம்' 'அபிமானமேருபுரம்' என்று பலவாறு சுட்டப்படுகின்றது. 'புரம்', 'நகரம்' என்ற பின்னொட்டுகள் இவ்வூர் வணிகத்தில் சிறந்து விளங்கியிருந்ததையும், வணிக மக்கள் கட்டுப்பாட்டிலிருந்ததையும் உறுதி செய்கின்றது.

இவ்வூரிலுள்ள 'கைலாசநாதர் கோயில்', 'விண்ணகரப் பெருமாள் கோயில்' 'எல்லையம்மன் கோயில்' ஆகியவை இவ்வூரின் பழமைக்குச் சான்றாக விளங்குகின்றன. சிவன் கோயில் கல்வெட்டுகளில்; இவ்விறைவன், 'ஸ்ரீ கைலாசம் நாற்பத்தெண்ணாயிரம் ஈசுவரமுடைய நாயனார்' என குறிப்பிடப்படுகின்றார். இக்கோயில் முற்காலப் பாண்டியர்களால் உருவாக்கப்பட்ட கோயிலாக இருப்பினும் தற்போதுள்ள அமைப்பு பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சார்ந்ததாகும்.

முதலாம் சடையவர்மன் குலசேகரன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று; அரை மண்டபத்து நிலையும், படிகளும் 'கம்பன் பெற்றான்' என்ற செங்குடி நாட்டு வணிகனால் உருவாக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

மற்றொரு கல்வெட்டு இக்கோயிலைக் கட்டிய ஸ்தபதியின் பெயரைச் 'சொக்கன் தேவனான சமய மந்திரி' என்று குறிப்பிடுகிறது. சடாவர்மன் குலசேகரனின் கல்வெட்டு, கோயில் விழாக்கள் நடத்தவும், பூசைகள் நடத்தவும் தேவதானமாக இறையிலி நிலம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது.

இக்கோயிலில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டு காணப்படுகின்றது. இதன் மூலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலேயே இச்சிவன் கோயில் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கின்றது எனலாம்.

'விண்ணகரப் பெருமாள்' என்ற பெருமாள் கோயில் இவ்வூரின் மேற்குப் பகுதியில் காணப்படுகின்றது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் சமீபத்தில் திருப்பணி செய்யப்பட்டது. கருவறையில் அமர்ந்த கோலத்தில் விஷ்ணு பூதேவி, ஸ்ரீதேவியுடன் காணப்படுகின்றார். பழைய திருமேனிகள் பின்னப்பட்டுவிட்டதால் வழிபாட்டிற்கு உகந்ததில்லை என்று கோயிலுக்கு வெளியே வைக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு; இவ்விறைவனை 'திருக்கோயில் விக்கிரம பாண்டிய விண்ணகர எம்பெருமான்' என்று குறிப்பிடுகின்றது. கி.பி. 1246-இல் கேரளன் நாராயணனான சேரபாண்டிய தேவர் என்பவன் இக்கோயிலைக் கட்டியதாக ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

'மலைமண்டலத்து வாமபுரம்' என்ற ஊரைச் சார்ந்தவனான இவன் பாண்டிய மன்னனிடம் அதிகாரியாக இருந்துள்ளான். இவன் கோயிலைத் தூய்மை செய்வதற்கும், விளக்கேற்றுவதற்கும் நிலத்தானம் வழங்கியுள்ளான். அபிமானபுரம் சபையார் கோயிலின் படைப்புச் செலவிற்காகவும், திருமேனிகள் அலங்கரிக்கும் செலவிற்காகவும் நில தானம் வழங்கிய செய்தியும் சபை உறுப்பினர்களின் பெயர்களும் இக்கல்வெட்டில் காணப்படுகின்றன. மேலும் இவ்வூர் ஒரு வணிக நகரமாக விளங்கியதையும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் முனியாண்டியம்மன் கோயிலருகில் ஒரு கிணறு வெட்டப்பட்டுள்ளது. இக்கிணறு வெட்டப்பட்ட செய்தியினை ஒரு கல்வெட்டு, இராசசிங்க குளக்கீழ் நாட்டு மாங்கல்யபுரம் அரண்மனையைச் சார்ந்த வல்லபன் பாண்டியக்கோன் என்பவன் இக்கிணற்றைத் தோற்றுவித்தான் என்று குறிப்பிடுகின்றது.

இவ்வூர் குளக்கரையில் பைரவர் கோயில் ஒன்று காணப்படுகின்றது. அதில் பிற்காலப் பாண்டியர் கல்வெட்டொன்றுள்ளது. அழகிய வேலைப்பாடமைந்த கற்தூண்கள் இக்கோயிலில் காணப்படுகின்றன.

## செட்டிக்குறிச்சி

இவ்வூர் அருப்புக்கோட்டை பந்தல்குடி சாலையில் பந்தல்குடி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூருக்கு 'நல்லூர்', 'தென்துவழிபதி', 'நாகப்பட்டினம்' என்ற பெயர்கள் இருந்துள்ளன. செட்டிக்குறிச்சி என்ற பெயரே வணிகர்கள் வாழ்ந்த ஊர் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. இவ்வூரின் பழமையை எடுத்துக்காட்டும் வகையில் சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும், உய்ய வந்த அம்மன் கோயிலும் விளங்குகின்றன.

சிவன் கோயில் இறைவன் திருவெட்டீசுவரமுடையார் என்று அழைக்கப்படுகின்றார். கிழக்கு நோக்கி அமைந்துள்ள இச்சிவன் கோயில் கருவறை, இடைநாழிகை, அரைமண்டபம் முதலான பகுதிகளைக் கொண்டு காணப்படுகின்றது. அரைத் தூண்களும், பொய்க்கோட்டங்களும் சுவர்ப்பகுதியை அழகு செய்கின்றன. கபோதத்திற்குமேல் அழகிய யாழிவரி காட்டப்பட்டுள்ளது. சிகரப் பகுதி முற்றிலுமாகக் காணப்படவில்லை.

இக்கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. 'தொண்டை நாட்டு அரையன் வேல்முருகன்' என்பவன், திருவெட்டீசுவரமுடைய நாயனாரும், உமா தேவியாரும் திருவீதியுலா எழுந்தருளுவதற்காக தானம் வழங்கியுள்ளான். இவ்வெழுந்திருத்துத் திருவிழா திருக்கல்யாண உத்சவமாகக் கொண்டாடப்படவேண்டும் எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது. இச்செய்தியைத் தரும் கல்வெட்டு முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் 4-ஆம் ஆட்சியாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

முதலாம் மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு, இவ்வூர்ச் சபையார் சில நிலங்களை விற்று அதில் வந்த வருவாயைக் கோயிலுக்குத் தானமாக வழங்கிய செய்தியைத் தருகின்றது.

இவ்வூரிலுள்ள விஷ்ணுகோயில் வரதராசப் பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகின்றது. இது பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டது. கருவறை, அரைமண்டபம். மாமண்டபம் போன்ற பகுதிகளைக் கொண்டு விளங்கும் இக்கோயில் நாயக்கர் காலத்தில் முற்றிலுமாகப் புதுப்பிக்கப் பட்டுள்ளது. இத்திருப்பணியின்போது; பிற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகள் இடம் மாற்றி வைக்கப்பட்டதினால் வரலாற்றுச் செய்தியை முழுமையாக அறிய முடியவில்லை.

உய்ய வந்த அம்மன் கோயில்; கருவறை மட்டும் கொண்டு, பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டுள்ளது. கருவறையில் மகிட அரசனை வதம் செய்யும் கோலத்தில் எண்கரங்களுடன் கூடிய தேவி காணப்படுகின்றாள்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இவ்வூர் வணிக நகரமாக விளங்கியதற்கு ஆதாரமாக இங்கு கிடைத்த காசுகளைக் கூறலாம். அக்காசுகளில் சுந்தரபாண்டியன், சோணாடு கொண்டான் என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றைக் கொண்டு இக்காசுகள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அச்சிடப்பட்டவை என்று கூறலாம்.

## சென்பகத் தோப்பு

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்துள் மேற்குத் தொடர்ச்சி மலைக்குச் செல்லும் சாலையில்; திருவில்லிபுத்தூரின் மேற்கில் 12 கி.மீ. தொலைவில் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச் சரிவில் அமைந்துள்ளது. இங்குள்ள காட்டழகர் கோயில் வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

மக்களின் பேச்சுவழக்கில் அழகர் கோயில் என்றழைக்கப்படும் இக்கோயில் இறைவன்; கல்வெட்டுகளில் 'திருமாலிருஞ்சோலை தீர்த்தக்கரை அழகர்' என்று குறிப்பிடப்படுகின்றார். இக்கோயிலருகில் 'நூபுரகங்கை' என்ற ஊற்று பெருக்கெடுத்து ஆறாக ஓடுகின்றது. இவ்வாற்றிற்கு 'மண்டுக நதி' என்றும், 'சிலம்பாறு' என்றும் பெயர்கள் உண்டு.

இக்கோயிலுள்ள மலைக்கு 'மண்டுக மலை' என்ற பெயருண்டு. இம்மலையிலிருந்து பெருகி வரும் நதி 'மண்டுக நதி' என்றழைக்கப்படுகின்றது. இவ்வாறு காற்சிலம்பு போல வளைந்து வளைந்து ஓடுவதால் 'சிலம்பாறு' என்றும் பெயர் ஏற்பட்டது என்பர். இவ்வாற்றின் தண்ணீரானது கங்கை நீருக்கு இணையான புனிதமான தீர்த்தம் என்று மக்கள் கருதுகின்றனர். எனவே இத்தீர்த்தக்கரையில் எழுந்தருளியுள்ள இவ்விறைவன் 'தீர்த்தக்கரை அழகர்' என்று பெயர் பெற்றார்.

இக்கோயில் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. கோயிலைச்சுற்றித் திருச்சுற்று அமைந்துள்ளது. கோயில் கட்டிடக் கலை அமைப்பைக் கொண்டு இதன் காலத்தினை கி.பி. 16-ஆம் நூற்றாண்டு எனக்கூறலாம்.

கருவறையின் உள்ளே திருமால் நின்ற கோலத்தில் பூதேவி, ஸ்ரீதேவியுடன் காட்சி தருகின்றார். இவ்விறைவன் 'காட்டழகர்' என்றும் 'சுந்தரராஜ பெருமாள்' என்றும் அழைக்கப்படுகின்றார். கருவறையின் முன்னுள்ள மாமண்டப விதானத்தில் பாண்டியர் கருடனுடைய அரச முத்திரையான இரட்டை மீனும், நடுவில் செண்டும் புடைப்புச் சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் தசாவதாரம், கிருஷ்ணனின் லீலைகள் ஆகியவை புடைப்புச் சிற்பங்களாக காட்டப்பட்டுள்ளன.

கருவறையின் முன்பகுதியில் இரண்டு வாயிற் காவலர்களின் சிலைகள் உள்ளன. கருவறை எதிரில் கருடமண்டபம் தனியே காட்சி தருகின்றது. மாமண்டபச் சுவரிலுள்ள கல்வெட்டொன்று இவ்வூரில்; 'பொம்மைக்குளமான திருமாலிருஞ்சோலைப் பேரேரி'

என்ற ஏரி 'வீரப்ப சமுத்திரம்' எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டுக் கோயில் நிருவாகச் செலவிற்காகவும், வழிபாட்டுச் செலவிற்காகவும் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக் கின்றது. இது வீரப்ப நாயக்கனின் காலத்தில் நடைபெற்றதாக அறிய முடிகின்றது.

மற்றொரு கல்வெட்டு; இக்கோயிலில் திருவிழா நடைபெறு வதற்காக நிலம் தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

இச்சென்பகத்தோப்பிற்கு அருகிலேயே சறுக்குப் பாறை என்ற ஒரு இடம் உள்ளது. ஆற்று நீர் ஓடிவரும் பாறை வழுவழுப்பாக உள்ளதால் இப்பெயர் ஏற்பட்டது. இதில் வழுக்கிவந்து நீராடுவர் மக்கள். இதுவும் ஒரு பசுமை நிறைந்த ஒரு சுற்றுலாத் தலமாக விளங்குகின்றது.

## செவ்வல்பட்டி

இவ்வூர் சிவகாசியிலிருந்து தெற்கே 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சாத்தூர் வட்டத்து நள்ளி உள்வட்டத்தில் உள்ள இவ்வூரின் நிலம் சிவப்பு நிறமாக உள்ளமையால் செவ்வல் பட்டி என்று பெயர் பெற்றது.

இவ்வூரின் பழமையை இங்கு கிடைக்கும் கருப்பு சிவப்பு பானை ஓடுகள் வெளிப்படுத்துகின்றன. வைப்பாற்று நதியின் தென்கரையில் நத்தமேடு என்றழைக்கப்படும் சிறு மண்குன்று காணப்படுகின்றது. இதில் இன்றளவும் முதுமக்கட்தாழிகள் கிடைத்து வருகின்றன. பெருங்கற்காலப் பண்பாடு இங்கு நிலவியதற்குச் சான்றாக இவை உள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

இவ்வூரில் அருணகிரி மலை என்றழைக்கப்படுகின்ற சிறு குன்றுள்ளது. இதில் 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த குடைவரைக் கோயில் ஒன்று காணப்படுகின்றது. அதிக அழகின்றிக்

காணப்படும் இக்கோயில் வடக்கு நோக்கியுள்ளது. இக்குடைவரைக் கோயில் முன்மண்டபத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. நடுமண்டபத்தில் நந்தி உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் கருவறையுள் சிவலிங்கம் இருந்திருக்கவேண்டும் எனத் தெரிகின்றது.

கருவறையின் இருபுறமும் துவார பாலகர் சிற்பங்கள் மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளன. முக மண்டபத்தின் தெற்குச் சுவர் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் படைப்புச் சிற்பங்களாகத் தெய்வ உருவங்களின் நடுவில் விஷ்ணு சிலை அமைந்துள்ளது. விஷ்ணு நாற்கரங்களுடன் நின்ற கோலத்தில் காணப்படுகின்றார் மேலிரு கரங்கள் சங்குசக்கரம் ஏந்தவும் கீழிருகரங்கள் உளுத்துவஹஸ்தமாகவும் காட்டப்பட்டுள்ளன. இடையாடை கணுக்கால் வரையுள்ளது. தலையில் கிரீட மகுடம் உள்ளது. மார்பில் முப்புரிநூல் இடது தோளிலிருந்து வலக்கையின் மீது ஏறிச் செல்கின்றது. சிரித்த முகத்துடன் அழகாக வடிக்கப் பட்டுள்ளது

விஷ்ணுவின் வலப்புறத்தில் ஆடவல்லானின் சிற்பம் அழகுடன் வடிக்கப்பட்டுள்ளது. இடையாடை அழகுடன் காட்டப்பட்டு முன் இடக்கரம் அபயம் காட்ட வலக்கரம் வீசிய நிலையில் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பைக் காட்டித் தாண்டவமாடுகின்றார். விஷ்ணுவின் இடப்புறத்தில் அமர்ந்த நிலையிலுள்ள விநாயகர் உருவம் காணப்படுகின்றது. இவர் வலம்புரி விநாயகராகக் காட்டப்பட்டுள்ளார். தலையில் கிரீட மகுடம் அழகு செய்ய; இருகரங்களுடன் காணப்படுகின்ற இவர் ஒடிந்த தந்தத்தை எழுத்தாணியாகக் கொண்டு இடக்கரத்தில் மோதகம் ஏந்தி விளங்குகின்றார்.

முக மண்டபத்தூண்கள் பெரும் பொதிகையுடனும் அப்பொதிகைகள் வளைவு வளைவாகவும் உருவாக்கப் பட்டுள்ளன. தூணின் மத்தியில் உள்ள சதுரப் பகுதியில் யானை, அன்னம், சிங்கம், பாம்பாட்டி, காளை போன்ற உருவங்கள் சிறிய சிற்பங்களாக நுண்கலையழகுடன் உருவாக்கப் பட்டுள்ளன. இச்சிறு உருவங்கள் மலர்த் தட்டுகளின் நடுவில் அமைத்திருப்பது, சிற்பியின் கைத்திறத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இவ்வூர் ஒரு சமீன் கிராமமாகும். சமீன்தாரால் வளர்ச்சி பெற்ற இச்சிற்றூர் ஏழாயிரம் பண்ணைப் பாளையத்தின் ஒரு பகுதியாகும். கி.பி. 1803இல் இதன் ஒரு பகுதியைச் சுவாமி நாயக்கர் என்பவர் கையகப்படுத்தினார். ஏழாயிரம் பண்ணையின் மற்றொரு பகுதி எட்டையபுரம் சமீன்தாரால் அவரது சமீனோடு இணைக்கப்பட்டது.

சுவாமி நாயக்கர் ஆந்திர மாநிலத்து வெல்லம் புதூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவராவார். ஆதலால் செவ்வல்பட்டி சமீன்கள் 'வெல்லம்வாரு' என்றழைக்கப்பட்டனர். இக்கிராமம் மதுராந்தகத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

கம்மவார் நாயக்கர் என்ற இனத்தவர் அக்கிராமத்தில் அதிகமாக வாழ்ந்து வந்தனர். சுவாமி நாயக்கர் அவ்வினத்தைச் சார்ந்தவரே. செவ்வல்பட்டி கிராமத்தில் அரண்மனை விநாயகர் என்றழைக்கப்படுகின்ற பிள்ளையார் கோயில் ஒன்றும், காளி கோயில் ஒன்றும் உள்ளன.

இவ்வூரில் பல குடும்பத்தவர்களால் நெசவுத் தொழிலே செய்யப்பட்டு வருகின்றது. கனமான வெள்ளைக் காகிதத் துணிகள் இங்கு நெய்யப்படுகின்றன.

## சேத்தூர்

இவ்வூர் இராசபாளையம் வட்டத்துச் சேத்தூர் உள்வட்டத்துள்; இராசபாளையம் தென்காசிச் சாலையில் 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. சேதுபதியினுடைய கிராமம் ஆதலால் சேத்தூர் எனப் பெயர் பெற்றது என்றும்; களிமண் நிலமாய் விளங்கியதால் சேற்றூர் எனப் பெயர் பெற்றுப் பின்னர் சேத்தூர் ஆயிற்று என்றும் கூறுவர்.

இவ்வூரின் தலபுராணம் சேத்தூரின் வளத்தைப் புகழ்ந்து 'போற்றூர்' எனக் குறிப்பிடுகின்றது. இங்கு தேவியாறு, நகரி ஆறு, கோறையாறு, புறவடியாறு, மணமாக்கியாறு போன்ற

ஐந்து ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி இவ்வூர் வழியே ஓடுகின்றன. அதனால் இவ்வூர் செழிப்புற்று விளங்குவதால் இப்பெயர் பெற்றது என்பர்.

கல்வெட்டில் இவ்வூர்; 'செம்மறமான குலசேகரபுரம்' என அழைக்கப்படுகின்றது. இவ்வூரின் பழமைக்குச் சான்றாக கல்வெட்டுகளைக் கொண்டு விளங்கும் சிவன் கோயில் அமைந்துள்ளது. மேலும் இது ஒரு சமீன் கிராமமாகவும் விளங்கியிருந்தது.

இவ்வூரிலுள்ள வைணவக் கோயில் சீனிவாசப் பெருமாள் கோயில் என்றழைக்கப்படுகிறது. ஆனால் கல்வெட்டுகளில் இறைவன் பெயர், 'சேரநாராயண விண்ணகர் ஆழ்வார்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானது சடாவர்மன் குலசேகரனின் கல்வெட்டாகும். இம்மன்னனின் மைத்துனனான விரதமுடித்த பெருமாள்' என்பவனால் இக்கோயில் கட்டப்பட்டதாக அறியமுடிகின்றது. இவன் கேட்டுக்கொண்டதற்கிணங்க இம்மன்னன் அரைவேலி நிலம் இக்கோயிலுக்குத் தானமாக வழங்கினான் என்றும் கூறுகின்றது. இத்தானத்தை 'மதுரோதய வளநாட்டு மாடக்குளக் கீழ் அமைந்துள்ள அரண்மனையில் மழவராயன்' என்னும் கட்டிலில் அமர்ந்து வழங்கினான் என்றும் அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

அண்டநாட்டுப் பெருமணலூரைச் சார்ந்த இராமன் என்ற பல்லவரையன் இம்மன்னனின் மந்திரியாக இருந்ததைக் கல்வெட்டின் மூலம் அறியமுடிகின்றது. 'திருவரங்கன் ஏரி' என்ற குளம் இக்கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட செய்தியை ஒரு கல்வெட்டு கூறுகின்றது. நித்திய பூசைக்காக நகரத்தார் நில தானம் வழங்கியுள்ளனர்.

மாமண்டபத்திலுள்ள உத்திரங்களை மலைமண்டலத்துப் புன்னை நல்லூரைச் சேர்ந்த 'ரவிகேரளனான விச்சாதிரையன்' என்பவன் வழங்கியுள்ளான் என்பதை இங்குள்ள கல்வெட்டு தெரிவிக்கின்றது.

இங்குள்ள சிவன் கோயில் கருவறை, அரை மண்டபம், என்ற முறையான அமைப்புடன் காணப்படுகின்றது. இங்கு பல

கல்வெட்டுகள் உள்ளன. இக்கோயில் இறைவன் 'சுலோசன ஈசுவரர்' என்று அழைக்கப்படுகின்றார். கல்வெட்டுகளில் இவ்விறைவன்; 'கண்ணுடைய ஈசுவரமுடைய நாயனார்' என்று குறிப்பிடப்படுகின்றார்.

இச்சிவன் கோயிலிலுள்ள விக்கிரமபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; ஆண்மர் நாட்டுக் குலசேகரபுரத்தைச் சேர்ந்த அழகன் சிங்கனான 'சிங்களராயன்' என்பவன் கொடுத்த கால்வேலி நிலத்திற்கு மன்னன் இறைநீக்கம் செய்து கொடுத்ததைத் தெரிவிக்கின்றது. இந்நிலம் இவ்வூரில் இவனால் கட்டப்பட்ட திருமடத்தில் தபசிகளுக்கு உணவு அளிப்பதற்காகத் தானமாக வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இம்மடம் கண்ணுடை ஈசுவர முடையநாயனார் கோயிலுக்குத் தெற்கில் உள்ளதாகக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சவுந்தர நாயகி அம்மன் கோயில் எனும் ஒரு சிறு கோயில் இச்சிவன் கோயில் வளாகத்திலுள்ளது. அதில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. அவற்றில் ஒன்று இக்கோயில் எழுப்பப் பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டில் இவ்வம்மன் 'திருக்காமக் கோட்டத்து அழகிய நாச்சியார்' எனக் குறிப்பிடப் படுகின்றார். இவ்வம்மன் கோயிலை 'மலை நாட்டுக் கீழ்க் குளத்தைச் சேர்ந்த சாத்தன்ரவி' என்பவன் எடுத்ததாகக் குறிப் பிடுகின்றது அக்கல்வெட்டு.

இவ்வழகிய நாச்சியார் கோயிலில் விளக்கு எரிப்பதற்காக 'குளஞ்சானான தவப்பெருமாள்' என்பவனிடமிருந்து கண்ணுடை ஈசுவரமுடைய நாயனார் கோயிலைச் சார்ந்த சிவப்பிராமணர்கள் காசுகள் பெற்றுக் கொண்டதாக ஒரு கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

கி. பி. 1561ஆம் ஆண்டைச் சேர்ந்த தர்மப் பெருமாள் குலசேகரனின் கல்வெட்டு; ஆலவாய் உடையார் கோயிலைச் சேர்ந்த வீரபாண்டிய சூடிக் கொடுத்த முதலி என்பவனைத் திருஷ்டீசுவரமுடைய நாயனார் கோயிலில் கணக்கப் பிள்ளையாக இளவரசன் அதிவீர ராமபாண்டியன் நியமித்ததைத் தெரிவிக் கின்றது.

சேத்தூர் பாளையக்காரர்கள் கொல்லங் கொண்டான் பாளையக்காரர்களுக்கு உறவினர். இவர்கள் நெற்கட்டும் செவலின் பாளையக்காரனான புலித்தேவனுக்கு நண்பர்களாக விளங்கினர். கி.பி. 1761இல் சேத்தூர் கோட்டை கும்பினியாரால் தகர்க்கப்பட்டது. 'டொனால்டு கேம்ப்பல்' இக்கோட்டையைத் தகர்க்கக் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. அவர் தனது கடிதத்தில் இக்கோட்டை பாளையங் கோட்டையைப் போல அளவில் பெரியதாக இருந்தது என்று குறிப்பிடுகின்றார். ஆயிரம் பொதிமாடு சுமையுள்ள உணவுப் பொருள்களும், கோட்டைக்குள் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததாகத் தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வூரிலிருந்த ஐந்து ஜமீன்தார்களைப் பற்றிய குறிப்பு மட்டும் தெரியவருகின்றது. இவர்கள் இலக்கியத்திலும், கலையிலும் சிறந்து விளங்கியிருந்தனர். புலவர்கள் பலரை ஆதரித்தனர். இறைவன்பால் ஈடுபாட்டுடன் கோயில் திருப்பணிகள் பல செய்தனர். சுந்தரதாஸ் தேவன் என்ற சமீன் நல்ல கவிஞராகவும் திகழ்ந்தார். தேவதானம் நச்சாடை தவிர்த்தருளிய இறைவன் மீது பல வெண்பாக்களைப் பாடியுள்ளார். 'சின்னையன் அணை' என்ற ஓர் அணையைக் கட்டினார். திருவனந்தபுரம் ராஜா ராமவர்மரைப் புகழ்ந்து கவிதை நூல் ஒன்றை இயற்றியுள்ளார்.

திருவண்ணாத சேவுகப் பாண்டியன் என்பவர் பல கவுரவப் பதவிகளை வகித்து வந்தார். கருநாடக இசையில் நாட்ட முடையவராகவும் 'கஞ்சிரா' எனும் இசைக் கருவியை வாசிப்பதில் வல்லவராகவும் திகழ்ந்தார். கோயில்களுக்குப் பல தானங்களை வழங்கியுள்ளார். மருத்துவமனை மற்றும் பள்ளிகள் இவரால் கட்டப்பட்டுள்ளன. திருவில்லிபுத்தூர் மடவார் வளாகத்தில் சத்திரம் அமைத்து அன்னதானம் வழங்கியுள்ளார்.

## சோழபுரம்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் திருநெல்வேலி சாலையில்; இராச பாளையம் வட்டத்து சோழபுரம் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. திருவில்லிபுத்தூரிலிருந்து 20 கி. மீ. தொலைவில் உள்ளது.

கல்வெட்டுகளில் இவ்வூர், 'உத்தம சோழச் சதுர்வேதி மங்கலம்' என்றழைக்கப்படுகின்றது. இவ்வூரின் பழமைக்குச் சான்றாகச் சிவன், பெருமாள் கோயில்களும் மற்றும் இங்கு கிடைத்துள்ள தொல்பொருட்களும் சான்று பகர்கின்றன.

இவ்வூரின் தொன்மைக்குச் சான்றாக இங்கு ஓடும் தேவியாற்றின் கரையில் இன்றளவும் நுண்கற்கருவிகள் காணப்படுகின்றன. இவை மத்திய கற்காலப் பண்பாடு இவ்வூரில் நிலவியிருந்ததைக் காட்டுகின்றன. சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே இப்பண்பாட்டு மக்கள் இங்கு வாழத் தொடங்கி விட்டார்கள் எனக் கூறலாம்.

இதனைத் தொடர்ந்து இங்கு பெருங்கற்காலப் பண்பாடு நிலவியிருந்ததற்குச் சான்றாக சிவன் கோயில் மற்றும் பெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும், முதுமக்கள் தாழிகளின் உடைந்த பகுதிகளும் காணப்படுகின்றன.

இவ்வூரிலுள்ள பெருமாள் கோயில்; சிவன் கோயிலுக்குத் தென்மேற்கில் அமைந்துள்ளது. இக்கோயில் கொண்டுள்ள இறைவன் தற்போது வெங்கடாசலபதிப் பெருமாள் என்றழைக்கப்படுகின்றார். கல்வெட்டுக்களில் இவ்விறைவன் உத்தமச்சோழ விண்ணகர் ஆழ்வார் என அழைக்கப்படுகின்றார். எனவே சோழர் காலத்திலேயே இப்பெருமாள் கோயில் இருந்ததை அறிய முடிகின்றது.

இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறை, இடைநாழிகை, அரைமண்டபம், மாமண்டபம், முன் மண்டபம் என்ற அமைப்புடன் காணப்படுகின்றது. கருவறை அரை மண்டபம் உரிய கட்டிடக் கலையமைப்புடன் கருங்கல்லால் ஆனவை. சுவர்ப்பகுதிகளில் பொய்க்கோட்டங்கள், கும்பபஞ்சரம், அரைத்தூண்கள் காட்டப்பட்டுள்ளன. கோட்டத்தின் மேலுள்ள மகரதோரணத்தில் அழகிய புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கருவறைக்கு மேலே சிகரம் காணப்படவில்லை.

மாமண்டபச் சுவரின் கிழக்குச்சுவரிலும், வாயில் நிலையிலும் ஸ்ரீவல்லபனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எம்மண்டலமும் கொண்டருளிய குலசேகரனின் 38-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டும் காணப்படுகின்றது. 'வேணாடுடையான்' என்பவன் மாமண்டபமும் சோபானமும் செய்வித்தான் என்று குறிப்பிடுகின்றது. மேலும் குலசேகரனின் மகன் முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியனின் பட்டத்தரசி உத்தமச் சோழ விண்ணகர் ஆழ்வார் கோயிலில் சுந்தரபாண்டிய விண்ணகர் ஆழ்வாரை எழுந்தருளுவித்தேன்' என குறிப்பிடுகின்றாள்.

இக்கோயில் தூண் மண்டபத்தில் உடைந்த நிலையில் உள்ள கி.பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பெருமாளின் திருவுருவம் ஒன்று காணப்படுகின்றது. இச்சிலையே சுந்தரபாண்டியனின் மனைவி செய்த சுந்தரபாண்டிய விண்ணகர் ஆழ்வாராகும். தற்போது கருவறை உள்ளே கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த விஷ்ணு சிலை காணப்படுகின்றது. இக்கால கட்டத்திலேயே கருவறையும், அரைமண்டபமும் உருவாக்கப் பட்டிருக்க வேண்டும் எனலாம்.

சிவன் கோயில் தேவியாற்றின் மேற்குக் கரையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் இறைவன் விக்கிரம பாண்டீசுவரமுடையார் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றார். இக்கோயில் 13-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருப்பினும் தற்போதுள்ள கோயில் பகுதி கி.பி. 16-ஆம் நூற்றாண்டினதாகும்.

கருவறை, அரைமண்டபம், மாமண்டபம், முகமண்டபம் என்ற முறையான கட்டிடக்கலை அமைப்பைக் கொண்டு விளங்குகின்றது. மிகுந்த அலங்காரத்துடன் பொய்க்கோட்டங்களுடன் கருவறையும், அரை மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. கருவறையின் மேல் இருதள விமானம் சுதையால் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்மண்டபத்தில் நிலவறை அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. வடகிழக்கு மூலைக்கருகில் நடராசருக்கென்று தனித்துணை ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது, அது கருவறை முன்மண்டபத்தைக் கொண்டு விளங்குகின்றது. முன்மண்டபத்தின் முன்னிரு தூண்கள் இசைத் தூண்களாக அமைந்துள்ளமை காணத்தக்கது.

இதன் முன்பு கல்யாண மண்டபம் என்ற பந்தல் கால் மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. கோயிலைச் சுற்றித் திருச் சுற்றும், திருச்சுற்று மாளிகையும் அமைக்கப்பட்டுள்ளன. திருச்சுற்று மாளிகையின் மேற்குப் பகுதி சிதலமடைந்து காணப்படுகின்றது. கோயிலின் முன்பு இரண்டு கோபுரங்கள் உள்ளன; கற்பணிகள் முடிக்கப்பட்டு மொட்டைக் கோபுரங்களாகக் காணப்படுகின்றன. உள்திருச்சுற்றுக் கோபுரம் 'தம்பிக்கு நல்லான் திருவாயில்' என்றும், வெளித்திருச்சுற்றுக் கோபுரம் 'சுந்தரபாண்டியன் திருக்கோபுரம்' என்றும் பெயர் பெற்று விளங்கியதைக் கல்வெட்டின் வழி அறிய முடிகின்றது.

சிவன் கோயிலின் தென்பகுதியில் அம்மனுக்கென்று தனிச் சன்னதி உள்ளது. அம்மனின் பெயர் குழல்வாய்மொழி அம்மன் என்று குற்றாலத்து இறைவி பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ்வம்மன் சன்னதி கருவறை, அரைமண்டபம், முன்மண்டபம் ஆகியவை முறையான கட்டடக்கலை அமைப்புடன் கட்டப்பட்டுள்ளது. இதற்கென்று விமானம் இல்லாதிருந்தது. தற்போது செங்கல்லும் சிமெண்டும் சேர்த்துக் கட்டிய சாலை விமானம் அழகு செய்கிறது.

சிவன் கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடையேயுள்ள திருச்சுற்றுப் பகுதியில் ஒரு சித்தரின் ஒடுக்கம் காணப்படுகின்றது. கோயிலில் பழைய கல்வெட்டுகள் யாவும் திருச்சுற்று மாளிகையிலும், கோபுரங்களிலும் காணப்படுகின்றன. தென்காசிப் பாண்டியர் கல்வெட்டுகளே கருவறை அரைமண்டபச் சுவர்ப் பகுதியில் உள்ளன, இவை குலசேகரப் பெருமாளான பராக்கிரம மாறன் அழகிய சொக்கன் என்ற தென்காசிப் பாண்டியனின் கல்வெட்டுகளாகும். இவற்றில் ஒன்று கி.பி. 1573 நவம்பர் 15ந் தேதி பொறிக்கப்பட்டதாக வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மாடாபத்திய கணக்கனுக்குக் காணியாட்சியாக ஆண்மர் நாட்டு சோலைச் சேரிப்பற்றுள் முடி வழங்கு பாண்டின் குளக்கீழ் ஒரு மா நிலம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ஒரு கோட்டை நெல்லும், நாள் ஒன்றுக்கு நானாழிச் சோறுமாக வழங்க மன்னன் உத்திரவிட்டுள்ளான்

என்று தெரிகிறது. விக்கிரம பாண்டீசுவரர் கோயிலில் பண்டாரக் கணக்கர், தானிகக் கணக்கர் போன்ற பதவிகளுக்கு அதிகாரிகளை நியமித்து தென்காசிப் பாண்டியர் காலத்தில் கோயில் நிருவாகம் மேம்படச் செய்யப்பட்ட முயற்சிகளை இது எடுத்துக்காட்டுகின்றது எனலாம்.

சடாவர்மன் பராக்கிரம பாண்டியனுடைய 8 ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; ஆரிநாட்டுத் தனியாளைச் சதுர்வேதிமங்கலத்து மகாசபையார் சங்கனேரியில் சிலபகுதிகளைத் தம்பிக்கு நல்ல பெருமாளான பிள்ளை சுந்தரபாண்டிய வாணகோவரையருக்கு விற்றுக் குடுத்த செய்தியினைத் தெரிவிக்கின்றது. அந்நிலமானது வாடாக் கடமையாக விக்கிரம பாண்டீசுவரர்க்கு வழங்கப்பட்டுள்ளது.

மாறவர்மன் குலசேகரனின் கல்வெட்டு; சோழபுரத்திலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வாழ்கின்ற நெசவு தொழிலாளர்கள் புடவை ஒன்றிற்குக் கால்பணம் தானமாக வழங்கியதைக் கூறுகின்றது. இந்தப் பணமானது கோயில் திருப்பணிச் செலவிற்காகச் செலவிடப்பட்டதை அறியமுடிகின்றது. தென்னிலங்கை வளஞ்சியன் என்பவன் கோயில்களுக்குத் தளிப் படைப்பிற்கான செலவிற்காகவும், திருவிழாவிற்காகவும், விக்கிரக அலங்காரத்திற்காகவும் தானம் கொடுத்த செய்தியை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

சடாவர்மன் சுந்தரபாண்டின் காலத்தில் அவனிவேந்த ராமன் சந்தி என்றும், சடாவர்மன் பராக்கிரம பாண்டியனின் காலத்தில் 'வாளால் வழி திறந்தான் சந்தி' என்றும் கோயிலில் பூசை நடைபெறுவதற்காகத் தானம் வழங்கப்பட்ட செய்தியை அறியமுடிகின்றது.

தேசியம்மன் என்றழைக்கப்படுகின்ற அம்மன் கோயில் ஒன்று இவ்வூரின் வடக்கில் உள்ளது. இக்கோயில் இருக்குமிடம் தற்போது தேசிகாபுரம் என்று அழைக்கப்படுகின்றது. 'நானா தேசிகள்' என்றழைக்கப்படும் வணிகர்கள் இக்கோயிலை எடுத்திருக்க வேண்டும். அவர்கள் ஒன்று கூடி வாழ்ந்த இடமே தேசிகாபுரம் என்றழைக்கப் பட்டிருக்க வேண்டும்.

தேசியம்மன் கோயில் கருவறையில் மகிஷாசுரமர்த்தினியின் உருவம் காணப்படுகிறது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைய தேசியம்மன் சிலை இக்கோயில் முன்னுள்ள கிணற்றிற்கருகில் உடைந்த நிலையில் காணப்படுகின்றது.

சோழபுரத்தின் வடக்கில் தேவியாற்றின் கரையில் தீப்பாச்சி யம்மன் சிலை ஒன்று காணப்படுகின்றது. இதில் ஆண், பெண் உருவங்கள் அமர்ந்த நிலையில் காணப்படுகின்றன. ஆணுருவம் வலக்கால் மடித்து இடக்கால் தொங்கவிட்டமர்ந்த நிலையில் காணப்படுகின்றது. வலக்கரம் கீழ்நோக்கித் தரையில் ஊன்றிய வாளுடனும், இடக்கரம் தொடை மீது வைத்த நிலையிலும் உள்ளன.

ஆணின் இடப்புறம் பெண்ணுருவம் உள்ளது. பெண்ணின் வலக்கரம் செண்டேந்தியும் இடக்கரம் தொடையின் மீது வைத்தும் காணப்படுகின்றன. இடக்கால் மடித்து வலக்கால் தொங்கவிட்ட நிலையிலும் உள்ளன. இவ்விருவரையும் இணைத்து ஒரு பெரிய முத்து மாலைபோல் ஒரு மாலை போடப்பட்டுள்ளது. மழை வேண்டி இவ்வூர் மக்கள் இச்சிலையை நிமிர்த்தி வைத்து வணங்குவர்.. நன்கு மழை பெய்ததும் மீண்டும் சிலையைக் கிடத்தி விடுகின்றனர். இவ்வழக்கம் இன்றும் இங்குள்ளது காணத் தக்கது

இவ்வூரில் முதலாம் இராசராசனின் செப்புக் காசுகள், கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் கிடைத்துள்ளன. சுந்தர பாண்டியனின் காசுகளும் நாயக்க மன்னர்களின் காசுகளும் கிடைத்துள்ளன. மேலும் தற்போது 78 தங்கத்தாலான இராசிப் பணம் என்றழைக்கப்படுகின்ற மிளகாய் விரைக்காசுகள் கிடைத் துள்ளன இவையெல்லாம் இவ்வூரின் தொடர்ந்த வரலாற்றுச் செய்தியை எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன.

## திருச்சுழி

இவ்வூர் அருப்புக் கோட்டை வட்டத்துத் திருச்சுழி உள் வட்டத்தில், அருப்புக் கோட்டையிலிருந்து மானாமதுரை செல்லும்

சாலையில் சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. குண்டாற்றின் தென்கரையிலுள்ள இவ்வூருக்கு இப்பெயர் ஏற்படக் காரணம் பற்றி வழிவழியாகக் கூறிவரும் கதை ஒன்றின் மூலம் அறியமுடிகின்றது.

ஒவ்வொரு யுகத்திலும் இவ்வூரில் பெருவெள்ளம் ஏற்பட்டு பேரழிவு உண்டாவதுண்டு. துவாபர யுகத்தில் பேரழிவு ஏற்பட்ட போது மன்னன் இவ்வழிவிலிருந்து இவ்வூரைக் காப்பாற்ற வேண்டிச் சிவபெருமானை வேண்டி நிற்கின்றான். அவனது வேண்டுதலை ஏற்றுக் கொண்ட சிவனும் தனது சூலத்தால் தரையில் குத்தி நிலத்தில் ஒரு பெரிய ஓட்டையிட்டு; வெள்ளத்தைப் பூமியில் புகுமாறு செய்தார். சிவபெருமானின் சூலத்தைச் சுற்றி வெள்ளம் சுழித்துச் சென்றதால் 'சுழி' என்று பெயர் பெற்றுப் பின்னர் 'திரு' எனும் அடைமொழி சேர்ந்து 'திருச்சுழி' ஆயிற்று என்பர். இவ்வூருக்கு திருச்சூலபுரம், புண்ணை வனம், புவநேசுவரம், காளீசுவரம் என்று வேறு பெயர்களுமுண்டு.

பள்ளிமடத்துக் காலநாதசுவாமி கோயில் கல்வெட்டு; இவ்வூரினை, 'பருத்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுழியல்' என்று குறிப்பிடுகின்றது. கழுகு மலையிலிருக்கும் மாறஞ் சடையனின், கல்வெட்டு மூலமாக இவ்வூர் 'திருச்சுழியல்' என்றழைக்கப்பட்டதையும், இது ஒரு வணிக நகரமாக விளங்கி யதையும் அறியமுடிகின்றது.

இவ்வூரைப் பற்றிய பல புராணக் கதைகள் காணப்படு கின்றன. கோசலமுனிவர், கௌசிகமுனிவர், கன்வரிஷி, கௌடில்ய முனிவர் போன்ற பல முனிவர்கள் இவ்வூரைச் சுற்றிய பகுதிகளில் தங்கி சிவனை நோக்கித் தவமிருந்து தங்கள் பூசைத் தேவைக் காகத் தீர்த்தக் கட்டங்களையும் தோற்றுவித்தார்கள், இலிங்கங் களை உருவாக்கினார்கள் என்று சொல்லப்படுகின்றது. அவற்றுள் ஒன்பது தீர்த்தக் கட்டங்களும் 8 இலிங்கங்களும் இன்றளவும் மக்களால் அடையாளம் காணப்பட்டுப் போற்றிப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன.

இம்முனிவர்களுள் கௌடில்ய மகரிஷி தவம் மேற்கொள்ள இறைவன் சதுர்முக மலையிலிருந்து இவ்வூர் வழியே ஓடச்செய்த

நதிதான் 'கௌடில்ய நதி' எனப் புராணங்கள் கூறுகின்றன. இந்நதியே இன்று 'குண்டாறு' என அழைக்கப்படுகின்றது. குன்று ஆறு என்பதே குண்டாறு ஆயிற்று. இவை இவ்வூரின் புராணப் பழமையைச் சுட்டுவதாக அமைகின்றது.

இவ்வூரிலுள்ள சிவன் கோயில் பழமைக்குத் தொல்லியல் சான்றாக விளங்குகின்றது. இக்கோயில் இறைவன் தற்போது பூமிநாத சுவாமி என அழைக்கப்படுகின்றார். பாண்டிய நாட்டுப் புகழ்பெற்ற சிவன் கோயில்கள் பதினான்கினுள் ஒன்றாகக் கருதப் பட்டு சைவர்களால் போற்றி வழிபடப்படுகின்றது. இக்கோயில் இறைவனைச் சுந்தரரும், சேக்கிழாரும் போற்றிப் புகழ்ந்து பாடி யுள்ளனர். ஆனால் இவர்கள் பாடிய காலகட்டத்துக் கோயில் அமைப்பு இன்றில்லை. பல்வேறு காலகட்டத்தில் கோயில் திருப் பணிகள் செய்யப்பட்டு பல மாற்றங்களை அடைந்துள்ளது.

இக்கோயிலில் சிலதுண்டுக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன; அவற்றுள் பழமையானது சடையன் மாறனுடையதாகும். இராச ராசனின் 10 மற்றும் 12ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. அவை இக்கோயிலுக்கு விளக்குகள் மற்றும் விளக்கு எரிப்பதற்காகத் தானம் கொடுக்கப் பட்டதைத் தெரிவிக்கின்றன.

முத்துராமலிங்க சேதுபதி இக்கோயில் திருச்சுற்று மதிலை எழுப்பி இக்கோயில் பெருந்திருப் பணியினை மேற்கொண்டார். இன்றளவும் இக்கோயில் இராமநாதபுரம் சேதுபதி சமஸ் தானத்தைச் சேர்ந்ததாக உள்ளது. சிவன் கோயிலுக்குத் தெற்கில் கிழக்கு நோக்கிய நிலையில் அம்மன் கோயில் அமைந்துள்ளது. இவ்வம்மன் தற்போது சகாயவல்லியம்மன் என்ற முத்து மாலை யம்மன் என்றழைக்கப்படுகின்றாள். கோயிலின் கிழக்கில் ஐந்து நிலைக்கோபுரம் அமைந்துள்ளது. மேலும் கோபுரத்தின் கிழக்கில் பெரிய திருக்குளமும், மைய மண்டபமும் இக்கோயிலுக்குச் சிறப்பானதொருத் தோற்றத்தை அளிக்கின்றன.

இக்கோயில் வளாகத்தில் சில உதிரிச் சிற்பங்கள் காணப் படுகின்றன, அவற்றைக் கொண்டு 1200 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு சிவன் கோயில் அமைந்திருந்தது என்று கூறலாம். மேலும்

இங்கு காணப்படும் திருமால் மற்றும் ஸ்ரீதேவி பூதேவி சிலைகள் அக்கால கட்டத்தில் விஷ்ணு கோயில் ஒன்று இங்கிருந்ததற்கு ஆதாரமாக விளங்குகின்றன.

## திருத்தங்கல்

இவ்வூர் சிவகாசி வட்டத்துச் சிவகாசி உள்வட்டத்துச் சிவகாசியிலிருந்து 5 கி.மீ. தொலைவில் விருதுநகர் செல்லும் சாலையில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் 'திருத்தங்கால்' என்றும், 'திருத்தங்கல்' என்றும் அழைக்கப்படுகின்றது.

இவ்வூரின் வடகிழக்கில் சுமார் 100 அடி உயரமுடைய குன்று காணப்படுகின்றது. திருப்பதி நாராயணர் திருவில்லிபுத்தூரிலுள்ள ஆண்டாளின் திருமணத்திற்காக வரும் வழியில் இப்பாறையில் தங்கியிருந்து பின்னர் திருவில்லிபுத்தூர் சென்றதால் இவ்வூர் 'திருத்தங்கல்' என்று பெயர் பெற்றது.

இவ்வூர் தொல்லியல் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் உடைய ஊராகும். இவ்வூரின் அருகில் மேற்குப் பகுதியில் நுண்கற் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை சில்லு பெயர்த் தெடுக்கப்பட்டு மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒரு முனை அறுப்பான், இருமுனையறுப்பான், துளைப்பான், வட்டவடிவக் கருவி, பிறைவடிவக்கருவி போன்ற பல்வேறு வடிவத்தில் கற்கருவிகள் கிடைத்துள்ளன. இவை மத்திய கற்கால மனிதன் தன் உணவுத் தேவைக்காகப் பயன்படுத்திய கற்கருவி களாகும். இத்தடையங்களால் இங்கு 10,000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழத் தொடங்கிவிட்டனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இதனைத் தொடர்ந்து பெருங்கற்காலப் பண்பாட்டு மனிதன் இங்கு வாழ்ந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வூர்க் குளத்தருகே பெரிய மண்மேடு காணப்படுகின்றது. அங்கு கருப்பு சிவப்பு பானை ஓடுகள், சங்கு வளையல்கள், சுடுமண்

விளையாட்டுப் பொருட்கள், வட்டாக்குச் சில்லுகள், கல்மணிகள், சுடுமண்ணாலான வடிதட்டுகள் போன்ற தொல்பொருட்கள் கிடைத்துள்ளன. இவை தவிர முதுமக்கள் தாழிகளின் விளிம்புப் பகுதிகள் கிடைத்துள்ளன. சில பானை ஓடுகளில் குறியீடுகள் வரையப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சான்றுகள் சங்க காலத்தில் இவ்வூர் செழிப்புற்று விளங்கியமைக்கு எடுத்துக் காட்டுகளாகும்.

திருத்தங்கலில் சங்ககாலப் புலவர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். அக்காலத்தில் அறிவுடைய மக்கள் பலரைக் கொண்ட நகராக இது இருந்தது என்று தெரிகிறது. மேலும் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இந்நகர் பற்றிய குறிப்புகள் வருகின்றன. ஒருசில செவிவழிக் கதைகள் வழியாக மதுரையிலிருந்து சேரநாடு செல்லும் பெருவழியில் திருத்தங்கல் இருந்தது என்று அறியமுடிகின்றது.

காவிரிப்பூம்பட்டினத்து அந்தண வணிகன் ஒருவன் சேர நாட்டிற்குச் சென்று விட்டுத் திரும்பும் வழியில் திருத்தங்கலில் தங்குகின்றான். அவ்வாறு தங்கிய போது சில சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பதைக் காண்கின்றான். அச்சிறுவர்களில் ஒரு சிறுவனின் முகம் மிகப் பொலிவுடன் இருப்பதைக் கண்டு அவனது அறிவைச் சோதிக்க எண்ணுகின்றான். அவனை அழைத்து அவன் பெயரை வினவுகின்றான். அச்சிறுவன் தன் பெயர் தக்ஷிணாமூர்த்தி என்று கூறுகின்றான். அவனிடம் வேதங்களிலிருந்து பல கேள்விகளைக் கேட்க; அச்சிறுவனும் தயக்கமின்றி விடையளிக்க; அச்சிறுவனின் அறிவைக் கண்டு வியந்து விலைமதிப்பற்ற பல பரிசுகளை அளிக்கின்றான். அவை; முத்துக்களாலான முப்பிரி நூல், பொன்னாலாகிய கடகம், தோடுகள், ஆபரணங்கள் என்பன.

இவ்விலையுயர்ந்த ஆபரணங்களையணிந்த அச்சிறுவனைக் கண்ட அரண்மனைக் காவலர்கள் அச்சிறுவனைத் திருடன் என எண்ணிச் சிறையிலிடுகின்றனர். இதனைக் கண்ட அச்சிறுவனின் தாய் கொற்றவைக் கோயிலுக்குச் சென்று தன் மகனுக்கு நேர்ந்த அநீதியை இறைவியிடம் முறையிட, துர்க்கைக் கோயில் கதவுகள் மூடிக் கொள்கின்றன. இந்நிகழ்ச்சி மன்னன் செவிக்கு எட்டுகின்றது. தன் காவலன் செய்த தவறுக்காக வருந்தி

அச்சிறுவனை விடுதலை செய்து அச்சிறுவனின் குடும்பத்திற்கு திருத்தங்கல், வெயலூர் ஆகிய இரு சிற்றூர்களையும் பிரம்மதேய மாக வழங்கினான். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் துர்க்கைக் கோயில் கதவுகள் தானாகத் திறந்து கொண்டன என்று கூறப் படுகின்றது.

இவ்வூரிலுள்ள வரலாற்று சின்னங்களில் குறிப்பிடத் தக்கது முற்காலப் பாண்டியர் காலத்து விஷ்ணு கோயிலாகும். இது ஒரு குடைவரைக் கோயில். கருவறையில் கருங்கல்லில் செதுக்கப்பட்ட உயரிய திண்ணையில் திருமால் கிடந்த கோலத்தில் காணப் படுகின்றார். அவரைச் சுற்றியுள்ள பிற உருவங்கள் பிற்காலத்திய தாகும். சுதையாலாகிய பச்சை வண்ணப் பூச்சும், ஆபரணங் களும் பிற்காலத்தியவை.

மலைமீது கட்டப்பட்டிருக்கும் நின்றருளிய நாராயணர் கோயில் பழமையானதாகும். வைணவத் திருத்தலங்கள் 108னுள் இதுவும் ஒன்றாகப் போற்றப்படுகின்றது. முற்காலப் பாண்டியர் கோயிலாக இருப்பினும் பிற்காலப் பாண்டியர் காலத்தில் முற்றிலுமாகப் புதுப்பிக்கப்பட்டுள்ளது. திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார் போன்ற ஆழ்வார்கள் இவ்விறைவனைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர்.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அவனது அதிகாரி, 'சோரன் உய்யநின்றாடுவான் குருகுலத்தரையன்' என்பவன் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் ஆகியவற்றை எடுப்பித்ததாகக் கல்வெட்டுகளின் வழி அறியமுடிகின்றது. இவன் தடங்கண்ணிச் சிற்றாரினன். முதலாம் மாறவர்மன் குலசேகரனின் காலத்தில் இக்கோயிலுக்கான திருச்சுற்று எழுப்பப்பட்டுள்ளது.

அம்மன் கோயிலும் நரசிம்மருக்கான தனிச் சன்னதியும் இம்மன்னன் காலத்தில்தான் கட்டப்பட்டுள்ளன. பிறகு நாயக்கர் காலத்தில் புதுப்பிக்கப்பட்டன. நாகலாபுரம் சமீன்தார் ரெங்கசாமி நாயக்கர் என்பவர் வெள்ளிக்கிழமை பூசை நடைபெறுவதற்காக 'சுக்கிரவாரக்குறடு' என்ற மண்டபத்தை கி. பி. 19-ஆம் நூற் றாண்டில் கட்டிக் கொடுத்துள்ளார். அவரது உருவச்சிலையும் இம்மண்டபத்தில் காணப்படுகின்றது.

இங்கு முதலாம் வரகுணன், பராந்தகசோழன், முதற் குலோத்துங்கன்; ஸ்ரீவல்லபன், முதலாம் சடையவர்மன் குலசேகரன், முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகரன் போன்ற சோழ, பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் உள்ளன.

முதலாம் வரகுணன் கல்வெட்டு; அழற்றூர் நாட்டுக் கிழவன் என்பவனால் நொந்தா விளக்கு எரிப்பதற்காக ஆடுகள் தானமாக வழங்கப்பட்டுள்ள செய்தியைத் தருகின்றது. திருத்தங்கல் கிராமம், ஒரு பிரம்மதேய கிராமமாக விளங்கியுள்ளது. அக்கிராமத்து நிருவாகத்தைக் கவனிப்பதற்காக 'மூலபருடையார்' என்ற அந்தணர் சபை இயங்கிற்று என்பதைக் கல்வெட்டுகள் வழி அறிய முடிகின்றது.

கல்வெட்டுகள் இக்கோயிலில் நடந்த பல்வேறு காலகட்டத்துத் திருப்பணிகளையும் கோயிலுக்குத் தானமாக நிலங்களும், பொருட் களும் வழங்கப்பட்ட செய்திகளையும் தெரிவிக்கின்றன. இவ்வூர் நிலங்களுக்கு நீர் பாய்வதற்காக 'தேவேந்திர வல்லபப் பேரேரி', 'நின்ற நாராயணப் பேரேரி' என்று இரு பெருங்குளங்கள் இருந்ததைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகின்றது.

இவ்வூரில் மகாபாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களி லிருந்து நிகழ்ச்சிகளை நிகழ்த்திக் காட்டுவதற்காகவும் நீதிக் கதைகள் சொல்வதற்காகவும் கல்மண்டபம் ஒன்றிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. மேலும் இவ்வூரின் அருகில் 54 மறையவர் களுக்காகக் குலசேகரச் சதுர்வேதிமங்கலம்' என்ற ஊர் உருவாக்கப் பட்டதையும் கல்வெட்டு மூலம் அறியமுடிகின்றது. வைகாசி விசாகம், அமாவாசையன்று இறைத்திருவுரு எழுந்தருளவும், ஆவணித் திருநாள் போன்ற திருவிழாக்கள் நடைபெறவும் பிற்காலப் பாண்டியர் காலத்தில் தானங்கள் ஏற்படுத்தப்பட்டன. சுந்தரபாண்டியன் சந்தி, குருகுலத்தரையன் சந்தி போன்ற பூசைகள் நடைபெற குருகுலத்தரையன் தானங்கள் வழங்கி யுள்ளான்.

கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் திருமங்கை ஆழ்வார் திருவுரு செப்புத் திருமேனியாக எழுந்தருளுவிக்கப்பட்டது. காலிங்கராயன் மனைவி 'சடகோபன் திருமங்கையாண்டாள்' என்பவள் இறைவன்

இறைவி செப்புத் திருமேனிகளை இக்கோயிலுக்குச் செய்து வழங்கியுள்ளாள் என்பதை முதலாம் சடையவர்மன் குலசேகரனின் கல்வெட்டு கூறுகின்றது.

சிவன் கோயில்: பாறையின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. இறைவன் கருநெல்லிநாத சுவாமி என்றும், இறைவி மீனாட்சியம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர். இக்கோயில் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுக்கு முன்பே கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் தடங்கண்ணிச் சிற்றூர் உடையான் சோரன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன் கி.பி. 1233-இல் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் ஆகியவற்றை அடிமுதல் முடிவரை கருங்கல்லால் கட்டிக் கொடுத்ததாக சுந்தரபாண்டியனின் 17-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு பாடல் வடிவில் குறிப்பிடுகின்றது.

தாருகாவனத்து ரிஷிகளின் கர்வத்தைச் அடக்க சிவபெருமான் பிச்சையெடுத்து வந்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. இந்நிகழ்ச்சி கோயில்களில் பிக்ஷாடனரின் செப்புத் திருமேனியினை வைத்து நிகழ்த்திக் காட்டுவது வழக்கமாகும். இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடும் கி. பி. 13-ஆம் நாற்றாண்டுக் கல்வெட்டொன்றில்; திருநெல்வேலி நாடான் ஒருவன் 'பிக்ஷாடன மூர்த்தி இனிக் கபாலம் ஏந்தி பிச்சை எடுக்க வேண்டாம் நிலங்கள் கொடுத்துள்ளேன்' என்று தான் தானம் கொடுத்ததைக் குறிப்பிட்டுள்ளான்.

குதிரை வீரனின் வீரக்கல் ஒன்றும் கோயில் வளாகத்தில் காணப்படுகின்றது. அதில் கல்வெட்டொன்றும் பொறிக்கப் பட்டுள்ளது. அக்கல்வெட்டு; 'வரதுங்கராம தனிப்புலி கலங்காத கண்ட நாயக்கனின் வேலைக்காரன் உள்ளி பொம்மன் கலங்காத கண்ட நாயக்கனுக்கு திருத்தங்கலில் இரத்த காணிக்கையாக நிலம் வழங்கிய செய்தியையும், அதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட செய்தியையும் தெரிவிக்கின்றது.

இவ்வூரின் பழமையையும் பெருமையையும் அறிவதற்காகத் தமிழக அரசின் தொல்லியல்துறை இவ்வூரில் மேற்பரப்பாய்வும், அகழாய்வும் மேற்கொண்டது. அவ்வமையம் பல தொல்லியல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதில் பாண்டியர்,

சோழர், நாயக்கர் காலக்காசுகள் அடங்கும். அவற்றுள் சங்ககாலப் பாண்டியர் காசு சதுரவடிவில் அமைந்திருந்தது குறிப்பிடத் தக்கது. அக்காசின் ஒருபுறம் மீனின் உருவமும், மறுபக்கம் யானையின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன.

## திருவண்ணாமலை

திருவில்லிபுத்தூரிலிருந்து 4 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இதன் வடக்கிலுள்ள மலைப்பாறையில் ஒரு விஷ்ணு கோயில் அமைந்துள்ளது. இவ்விஷ்ணு கோயிலே இவ்வூருக்குப் புகழை ஈட்டித் தந்துள்ளது. தொடக்க காலத்தில் இவ்வூர் 'திருமலை' என்று அழைக்கப்பட்டு பின்னர் திருவண்ணா மலை எனப் பெயர் பெற்றது.

மக்களால் தென்திருப்பதி என்றழைக்கப்படும் இக்கோயில் உள்ள இடத்திற்கு வெங்கடாசலபதிப் பெருமாள் வேட்டைக்கு வந்ததாகவும் பின் மக்களுக்கு அருள்செய்யும் வகையில் இக்கோயில் எழுந்தருளியதாகவும் கூறப்படுகிறது. கோயில் திருச்சுற்றுமதி லுடன் அமைந்துள்ளது. வடப்புறச் சுவற்றிற்கு வடபுறப் பாறையில் விஷ்ணுவின் புடைப்புச் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. நின்ற கோலத்தில் காணப்படுகின்றார் இப்பெருமாள்.

நாயக்கர் காலத்தில் இக்கோயில் கட்டபபட்டுள்ளது. கருவறையில் நின்றநிலையில் வெங்கடாசலபதி காட்சி தருகின்றார். சுமார் 10 அடி உயர விநாயகர் சிலை ஒன்று குளக்கரை அருகி லுள்ளது. இது பார்ப்போரை வியப்படையச் செய்வதாக உள்ளது. இச்சிலையும் நாயக்கர் காலத்தியதேயாகும்.

இவ்வூரினருகிலுள்ள இலந்தைக் குளத்தில் கிடைத்த செப்பேடு ஒன்று; நாயக்க மன்னன் 'திருமலை நாயக்கர்' இம்மலையில் தங்கி இருந்ததாகக் கூறுகின்றது. எனவே திருமலை நாயக்கர் காலத்திலேயும் சிறப்புடைய ஒரு ஊராக இது விளங்கிற்று என்று கூறல் பொருந்தும்.

## திருவில்லிபுத்தூர்

இவ்வூர் இராசபாளையம் மதுரைச் சாலையில் இராச பாளையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் திருவில்லிபுத்தூர் வட்டத்தின் தலைமைப் பகுதியாக அமைந்துள்ளது. கல்வெட்டு களில் இவ்வூர்; 'மல்லிநாட்டுப் பிரம்மதேயம் திருவில்லிபுத்தூர்' என்று அழைக்கப்படுகின்றது. 1200 ஆண்டுகளுக்கு முன்னரே இவ்வூர் இருந்ததற்கான சான்றுகளைக் கல்வெட்டுகள் நமக்களிக் கின்றன.

இவ்வூர் தோன்றிய வரலாற்றைச் செவிவழிச் செய்தியாகக் கூறிவருகின்றனர் மக்கள். ஏதோ ஒரு சாபத்தால் இருமுனிவர்கள் வேட்டுவர்களாகப் பிறக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் வில்லி என்ற பெயரிலும், மற்றொருவர் கண்டன் என்ற பெயரிலும் அழைக்கப்பட்டனர். ஒருநாள் இவ்விருவரும் வேட்டையாடச் சென்றனர். கண்டனை ஒரு புலி அடித்துக் கொன்று விடுகின்றது. இது தெரியாமல் வில்லி கண்டனைத் தேடி வருகின்றான். அலைந்து திரிந்த வில்லிக்கு களைப்பு மேலிட்டால் உறங்கிப் போகின்றான். அப்போது அவன் கனவில் இறைவன் தோன்றி இவ்விடத்தில் ஒரு நகரை உருவாக்கச் சொன்னதால் வில்லி ஒரு புதுநகரை உருவாக்கியதாக கூறப்படுகிறது. வில்லி உருவாக்கிய புதிய ஊர் 'வில்லிபுத்தூர்' என்றழைக்கப்பட்டுப் பின்னர் 'திரு' எனும் அடைமொழியுடன் திருவில்லிபுத்தூர் ஆயிற்று என்பர்.

சூடிக் கொடுத்த நாச்சியார் எனும் கோதை அவதரித்த தலமாதலால் இவ்வூர் 'கோதாபுரி' என்றும் பெயர் பெற்றது. சமஸ்கிருதத்தில் இவ்வூர் 'ஸ்ரீதனுசுபுரம்' என்று அழைக்கப்படு கின்றது. பெருமானின் 108 திவ்வியச் சேத்திரங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வூரின் வரலாற்றுக்குச் சான்றாக ஆண்டாள் கோயிலும், வடபத்ர சாயி கோயிலும் அமைந்துள்ளன.

இவ்வூர்க் கோயில்களில் முற்காலப் பாண்டியர்கள், சோழர்கள், பிற்காலப் பாண்டியர்கள், வாணாதிராயர்கள், தென்காசிப் பாண்டியர்கள், நாயக்க மன்னர்கள், சேர மன்னர்கள் போன்றோரின்

கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அம்மன்னர்கள் கோயிலுக்கும், இவ்வூருக்கும் செய்த பல நற்பணிகளைப் பற்றி கல்வெட்டுகளின் வாயிலாக அறியமுடிகின்றது. கோயில் வளாகங்களில் புதுப்புது பகுதிகள் உருவாவதற்கும், சதுர்வேதி மங்கலங்கள் தோன்றுவதற்கும் இவர்கள் காரணமாய் இருந்தார்கள் என்று தெரிகின்றது.

வடபத்ரசாயி கோயிலிலுள்ள சோழன் தலைகொண்ட வீர பாண்டியனின் கல்வெட்டு காலத்தால் பழமையானதாகும். இக்கோயில் இறைவனை 'சலசயனத்துக் கிடந்தருளின பரமசுவாமி' எனக் குறிப்பிடுகின்றது. இதே இறைவனை கி.பி. 13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று 'வடபெருங்கோயில் பள்ளிகொண்டருளின பெருமாள்' எனக் குறிப்பிடுகின்றது.

வட்டெழுத்துக் கல்வெட்டொன்று; புனல் வேலியைச் சேர்ந்த 'ஆண்மர் நாட்டுக் கிழவன் சங்கரன் மூறி அருளாக்கி' என்பவன் பராங்குசப் புத்தூர் குளத்தின் வடபுறத்திலுள்ள மதகினைப் புதிதாகக் கட்டித் தானமாக வழங்கியுள்ளான் எனத் தெரிவிக்கிறது.

திருவில்லிபுத்தூர் மகாசபை கி.பி. 960இல் பரமசுவாமிக்கு நிலத்தானம் வழங்கிய செய்தியினை ஒரு கல்வெட்டுத் தருகின்றது. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவன் நொந்தா விளக்கெரிக்க ஆடுகளைத் தானமாக வழங்கிய செய்தியினைத் தெரிவிக்கின்றது.

முதலாம் குலோத்துங்கனின் கல்வெட்டொன்று 'விக்கிரமச் சோழச் சதுர்வேதி மங்கலம்' என்ற பிரம்மதேயம் உருவாக்கப் பட்டதைத் தெரிவிக்கின்றது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் குலசேகரச் சதுர்வேதி மங்கலம் என்ற ஒரு சதுர்வேதிமங்கலம் உருவாக்கப்பட்டு அது 122 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு அந்தணர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

முதலாம் சடையவர்மன் குலசேகரன் மற்றும் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டுகள், இக்கோயிலில் விளக்கெரிப்பதற்காகவும் பூசைக்காகவும், மடப்பள்ளித் தேவைக் காகவும் நிலத்தானம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக் கின்றன.

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கருநிலக்குடி நாட்டு மங்கலத்தில் தங்கியிருக்கும்போது கோயில் நிலங்களுக்கு வரி விலக்களித்து ஆணையிட்டான் என்ற செய்தியை ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது. அத்துடன் இராமாயணம், மகாபாரதம் ஓதுவதற்காக ஒரு மண்டபம் பிற்காலப் பாண்டியர் காலத்தில் எழுப்பப் பட்டுள்ளது. கல்வெட்டுகளில் இக்கோயில் சூடிக்கொடுத்த நாச்சியார் கோயில் எனக் குறிப்பிடப்படுகிறது.

ஆண்டாள்; பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள், பெரியாழ்வார் தினந்தோறும் பூக்கள் சேகரித்து மாலை தொடுத்து இறைவனுக்கு வழங்குவதைக் கடமையாகக் கொண்டிருந்தார். அவ்வாறு நந்தவனம் சென்று பூக்கள் சேகரித்து வரும்போது அங்குள்ள துளசிச் செடியின் அருகில் கண்டெடுக்கப்பட்ட குழந்தைதான் ஆண்டாள். அக்குழந்தைக்குப் பெரியாழ்வார் இட்டபெயர் 'கோதை' என்பதாகும். கோதை வளர்ந்து வரும் நாளில் பெரியாழ்வார் கட்டும் மாலைகளை அவரறியாது எடுத்துச் சென்று தான் சூடி கிணற்று நீரில் பார்த்து ரசித்து மகிழ்ந்த பின்னர் கோயிலுக்கு அம்மாலையை கொடுத்து வந்தாள்.

ஒருநாள் இதனைக் கண்ட பெரியாழ்வார் கோதையைத் திட்டி விட்டுப் புதிய மாலை புனைந்து இறைவனுக்குச் சூட்டினார். அன்றிரவில் பெரியாழ்வார் கனவில் தோன்றிய இறைவன் கோதை சூட்டிய மாலையையே தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். அப்போதே இக்குழந்தை சாதாரணக் குழந்தையன்று என்பதை உணர்ந்தார். அன்று முதல் கோதை சூட்டிய மாலையையே இறைவனுக்குச் சூட்டி வந்தனர். அதனால் ஆண்டாளுக்குச் 'சூடிக்கொடுத்த நாச்சியார்' என்ற பெயர் ஏற்பட்டது.

இந்நிகழ்வின் பின்னர் கோதை நாச்சியார் இறைவனிடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டிக் கொண்டார். இந்நினைவோடு திருவரங்கம் கோயில் பெருமாளைக் கண்டுவரக் கோயிலுக்குச் சென்றபின் மறைந்து விட்டதாக ஒரு கதை நிலவுகின்றது. ஆண்டாள் பூதேவியின் மறு அவதாரமாகக் கருதப்படுகின்றாள். ஆண்டாள் பாடிய பாடல்கள் திருப்பாவை என்றும், நாச்சியார் திருமொழி என்றும் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆண்டாள் கோயில் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற அமைப்புடன் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் சுந்தரத் தோளுடையான் வாணாதிராயன் என்பவனால் கட்டப்பட்டது. கருவறையில் உள்ள இறை உருவங்கள் ஆண்டாளும் ரங்க மன்னாரும் திருமணக் கோலத்தில் காட்சி தருகின்ற உருவச் சிலைகளாகும்.

மாமண்டபத்திலுள்ள 'வெளிக்குறடு மண்டபம்' திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. இம்மண்டபத்தில் ஆண்டாள் ரங்கமன்னார் ஆகியோர் செப்புத் திருமேனிகள் வெள்ளிக்கிழமை தோறும் ஊஞ்சலில் எழுந்தருளிவிக்கப்படுகின்றன. இம் மண்டபத்துத் தூண்களில் திருமலை நாயக்கர், அவர் சகோதரர் முத்தியாலு நாயக்கர், ராணியரின் உருவங்கள் புடைப்புச் சிற்பமாக உருவாக்கப்பட்டுள்ளன, இவ்வுருவங்கள் தங்கமுலாம் பூசப்பட்ட செப்புத் தகடுகளால் போர்த்தப்பட்டுள்ளன. இம் மாமண்டபத்திலேயே மஞ்சனக் குறடும், கண்ணாடிக் கிணறும் காணப்படுகின்றன.

ஆண்டாள் கோயில் கல்வெட்டுகள் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட நிலங்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. திருமாலிருஞ்சோலை மாவலி வாணாதிராயன் கி. பி. 1429-இல் வைகைக் கரையில் உள்ள விரகனூரில் திருவிடையாட்டமாக நிலங்கள் வழங்கியதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

சுந்தரத் தோளுடைய வாணாதிராயனுடைய தாய் ரங்கநாயகி என்பவள் மார்கழி மாதத்தில் இறைவியை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்வதற்காக சொக்கனேந்தல் என்ற சிற்றூரைத் தானமாக வழங்கியுள்ளாள். அச்சிற்றூர் 'சுந்தரத்தோள் நல்லூர்' எனப் பெயர் மாற்றம் செய்யப்படு திருவிடையாட்டமாக வழங்கப்பட்டது. இத்தானத்தைத் தனது மனக்கவலை போக்குவதற்காக வழங்கி யதைக் கல்வெட்டுள் தெரிவிக்கின்றாள். இவளின் கணவன் 'திருமாலிருஞ்சோலை நின்றருளின வாணாதிராயன்' என்பவன் இக்கோயிலில் ஆடித்திருவிழா நடைபெறுவதற்காக 'மாங்குடி' என்னும் சிற்றூரைத் தானமாக வழங்கியதை ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சோழ மண்டலத்தைச் சேர்ந்த, 'கீழக்காட்டார் குலதிப மங்கலம்' என்ற சிற்றூர் இறையிலியுடைய அடுக்களைப்புறமாக 1425-இல் தானம் வழங்கப்பட்டுள்ளது. கி.பி. 1453-ஆம் ஆண்டைச் சேர்ந்த கல்வெட்டு, 'முட்ட நாட்டுத் திருவரங்க நல்லூர்' என்ற ஊர் இக்கோயிலுக்கு அடுக்களைப்புறமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது.

சாளுவ மன்னன் நரசிம்ம உடையார் 1453-இல் தென்கரை வடகரை ஆகிய சிற்றூர்களில் இக்கோயில் நித்தியபூசைச் செலவிற்காக நில தானம் வழங்கியுள்ளார். 1455-இல் பாகனூர்க் கூற்றத்திலுள்ள ஒரு சிற்றூர் இதேபோன்று அடுக்களைப் புறமாக வழங்கப்பட்டுள்ளது.

வடபெருங்கோயில் சுந்தர பாண்டியன் மண்டபத்தில் குலசேகரன் முத்துப்பந்தலில் வெம்பூர் உடையான் அரியணையில் இறைவன் அமர்ந்து நம்மாழ்வாரின் திருப்பாசுரங்களைக் கேட்டு மகிழ்வதற்காகத் தானம் வழங்கிய செய்தியை மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது.

விட்டலதேவ மகாராயர் காலத்திலும் சதாசிவராயர் காலத்திலும் இக்கோயிலுக்கென்று சில தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. வீரமார்த்தாண்டன் என்னும் திருவிதாங்கூர் மன்னன் தன்னுடைய பெயரில் 'வீரமார்த்தாண்டன் சந்தி' பூசைக்கு கி.பி. 1533-இல் நிலத் தானங்கள் வழங்கியுள்ளான். செட்டிப்பள்ளம், பராந்தக நல்லூர் ஆகிய ஊர்களை வீரமார்த்தாண்டன் மடமான திருவேங்கடத்தான் மடத்திற்குத் தானம் வழங்கியுள்ளான். இத்தானத்தைக் கொண்டு தினசரி 33 அந்தணர்களுக்கு உணவு வழங்க வேண்டும் என்றும் அக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

தென்காசிப் பாண்டியர் ஆட்சிக் காலத்தில் வீரபாண்டியன் சந்தி, ஸ்ரீவல்லபன் சந்தி ஆகிய சிறப்பு வழிபாடுகள் தோற்றுவிக்கப்பட்டன. மன்னர்கள் தங்கள் பிறந்த நட்சத்திரத்தில் இப்பூசைகளைச் செய்ய ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். இதற்காகக் காசுகளும், நிலங்களும் தானமாக வழங்கப்பட்டன. இக்காலகட்டத்தில் மேலெழுத்து, மண்டபக்கணக்கு, உள்காவல் போன்ற பணிகளுக்காக ஆட்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஊதியமாக நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு இவ்வூரில் பகவதி விண்ணகர் ஆழ்வார், இடர்கெடுத்த பெருமாள் கோயில் ஆகிய இருகோயில்கள் கட்டப்பட்டதாகத் தெரிவிக்கின்றது.

இவ்வூரில் அமைந்துள்ள மற்றொரு கோயில் கிருஷ்ணன் கோயிலாகும். இது கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. முறையான கட்டடக் கலையமைப்புடைய இக்கோயிலை 'அழகன் பெருமாள் அதிவீரராமன்' என்ற தென்காசிப் பாண்டியன் கி.பி. 1571-இல் கட்டியுள்ளான். கருவறையில் ருக்மணி சத்யபாமாவுடன் கிருஷ்ணன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றார். கோயிலைக் கட்டிய மன்னன் இங்கு பூசை நடைபெறுவதற்காக 'வேப்பன் குளம்' என்ற சிற்றூரைத் தானமாக வழங்கியுள்ளான்.

வீரப்ப நாயக்கன் காலத்தில் கோயில் பணி செய்யும் சலவைத் தொழிலாளருக்கு சர்வமானியமாக நிலம் வழங்கிய செய்தியையும் கிருஷ்ணப்ப நாயக்கர் காலத்தில் திருவேங்கட சமுத்திரம் என்ற சிற்றூர் தானமாக வழங்கப்பட்ட செய்தியையும் தெரிவிக்கின்றன.

## தேவதானம்

இவ்வூர் மதுரை செங்கோட்டைச் சாலையில் இராசபாளையத்திலிருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் சேத்தூர் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. தேவதானம் என்பது தேவ(ன்) + தானம் என்று பிரித்து, தேவன் தங்கும் இடம், அல்லது தேவனுக்குரிய ஊர் எனக் கூறுவர். ஆனால் கல்வெட்டின்வழிப் பார்க்கையில் சிவன் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட நிலப்பகுதியை அல்லது ஊர்ப்பகுதியை தேவதானம் என்று கூறுவது மரபு.

பொதுவாகக் கல்வெட்டில் தேவதானம் என்ற பெயரோடு ஊர்ப்பெயரும் குறிப்பிடப்பட்டிருக்கும். சான்றாக, 'பரித்திக்குடி நாட்டுத் தேவதானம் திருச்சுரியல்' (vol. XIV, Ins. 46) என்று குறிப்பிடக் காணலாம். ஆனால் இங்குதான் தேவதானமாக

வழங்கப்பட்ட ஊர் 'தேவதானம்' என்றே பெயர் பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. இதேபோன்று நெல்லை மாவட்டம் அம்பா சமுத்திரம் வட்டத்தில் பிரம்மதேயமாக வழங்கப்பட்ட ஊர்ப்பகுதி 'பிரம்ம தேசம்' என்ற பெயரிலேயே அழைக்கப்படுவதை இன்றும் காணலாம்.

இவ்வூரின் பழமைக்குச் சான்றாக; இங்கு நுண்கருவிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இவ்வூரில் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததை அறியமுடிகின்றது. இதன் காலம் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முந்தையது ஆகும். அக்காலம் தொட்டே மக்கள் இங்கு வாழ்ந்து வந்தனர் என்பதை இக்கண்டு பிடிப்பு உறுதி செய்கின்றது. இதனைத் தொடர்ந்து; இவ்வூரின் மேற்கில் நெடும் பரம்பு என்றழைக்கப்படும் மேட்டுப்பகுதியில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. இத்தாழிகள் சங்ககாலத்தில் மக்கள் இங்கு வாழ்ந்ததற்கான ஆதாரங்களா கின்றன.

மேற்சொன்ன வரலாற்றுக்கு முந்தைய காலச் சான்றுகளைத் தொடர்ந்து வரலாற்றுச் சான்றுகளாக இங்குள்ள சிவன் கோயில் அமைகின்றது. இச்சிவன் கோயில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் ஊரை விட்டு வெகு தொலைவில் மேற்கில் அமைந் துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர்; 'செம்மரமான குலசேகரபுரம்' என்றழைக்கப்படுகின்றது. கோயில் உள்ள பகுதி பகவான் பாறை என்றழைக்கப்படுகின்றது. கோயில் கொண்டுள்ள இறைவன் கல்வெட்டுகளில் 'உடையார் பகவான் பாறை ஆளுடைய நாயனார்' என்றழைக்கப்படுகின்றார். இவரே பிற்காலக் கல்வெட்டுகளில் 'நச்சாடை தவிர்த்தருளிய நாயனார்' என்று குறிப்பிடப்படு கின்றார். இப்பெயர் ஏற்பட்டதற்கான காரணத்தை செவிவழிக் கதை ஒன்று வெளிப்படுத்துகின்றது.

சோழர்க்கும் பாண்டியர்க்கும் போர் ஏற்பட்டபோது; சோழனால் பாண்டியனைப் போரில் வெல்ல முடியவில்லை. அதனால் சோழன் பாண்டியனைத் தந்திரமாக வெல்ல நினைக் கின்றான். அதனால் நச்சில் தோய்ந்த ஆடை ஒன்றைத் தூதுவன் ஒருவனிடம் கொடுத்துப் பாண்டிய மன்னனுக்குப் போர்த்துமாறு அனுப்பி வைக்கின்றான். இறைவன் பாண்டியன் கனவில் தோன்றி சோழ தூதுவன் நச்சாடை போர்த்த வருவதை முன்னரே

தெரிவிக்கின்றான். அதனால் சோழர் தூதுவன் வந்து அவ்வாடையை வழங்க நினைக்கும்போது பாண்டிய மன்னன் 'தூதுவனே அவ்வாடையை நீயே போர்த்திக்கொள்' என்று ஆணையிடுகின்றான். மன்னன் ஆணையை மறுக்க முடியாத தூதுவன் அந்நச்சாடையைப் போர்த்தி மாண்டு போகிறான். இதனால் இக்கோயில் இறைவன் 'நச்சாடை தவிர்த்தருளிய நாயனார்' என்றழைக்கப்பட்டார் என்று அக்கதை தெரிவிக்கின்றது.

சிவன் கோயில் முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டிருந்த போதிலும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டளவில் இங்கு திருப்பணி மேற்கொள்ளப்பட்டது என்பதைக் கல்வெட்டுகள்வழி அறியமுடிகின்றது. இக்கோயில் கருவறை அரைமண்டபம், முன்மண்டபம், மாமண்டபம் கொடிமர மண்டபம் என்ற அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது.

இக்கோயிலிலுள்ள சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் போன்ற பழமையான சிலைகள் முற்காலப் பாண்டியர் காலத்தவை. எனவே அக்காலகட்டத்திலேயே இங்கு கோயில் அமைந்துள்ளது எனலாம். இங்குள்ள அம்மன் கோயில் தென்காசிப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இறைவி தவம் பெற்ற நாயகி என்று பெயர் பெற்றுள்ளாள். விநாயகர், துர்க்கை, தாய்மார் எழுவர், நந்தி ஆகியவை தென்காசிப் பாண்டியர் காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.

கொடி மர மண்டபத்தில் அழகிய ஆமை ஒன்றின் உருவம் தரையில் புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் புராணக் கதையினை அடியொற்றி அமைக்கப்பட்டது என்பர். இதே போன்று பிரம்மதேசம், திருவில்லிபுத்தூர், மடவார்வளாகம், கடையம் போன்ற ஊர்களில் ஆமையுருவம் செதுக்கப்பட்டுள்ளது.

இங்கு மற்றொரு சிவன் கோயில் இடம் பெற்றுள்ளது. இறைவன் பெயர் 'மலைக் கொழுந்தீசுவரர்' என்றழைக்கப்படுகிறது. இக்கோயில், திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் உள்ள உயரமான பாறையில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இப்பாறையின் மீதுதான் பாண்டியன் அரியாசனம் இட்டு அமர்ந்திருந்தான் என்று கூறப்படுகின்றது. சோழத்தூதுவன் மேற்குத் திருச்சுற்றில் அரசனுக்கு எதிராக நின்று பேசியதாகவும், அந்த

இடத்திலேயே நச்சாடை போர்த்தி இறந்ததாகவும் நம்பப்படுகின்றது.

மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு; செம்மறமான குலசேகரபுரநகரத்தார்; 'பிள்ளை சேரக்கோனார்' என்பவருக்குப் புலமை விருத்தியாக நிலத்தானம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு; 'இக்கோயிலில் திருப்பணி செய்வதற்காக நிலத்தானம் வழங்கிய செய்தியைத் தருகின்றது. சடாவர்மன் பராக்கிரம பாண்டியன் மற்றும் ஸ்ரீவல்லப பாண்டியன் போன்ற மன்னர்கள் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தேவதானத்தில் முகாமிட்டிருந்த போது இங்கு திருப்பணி மேற்கொள்ளப்பட்டது. மாறவர்மன் ஸ்ரீவல்லபன்; 'ஆரிநாட்டு வரதுங்கதேவநல்லூரில் நிருத்த மண்டபத்தில் முகாமிட்டிருந்தபோது 'தொண்டன் குளம்' என்ற சிற்றூரை ஆகவராமன் சந்தி என்ற பெயரில் சிறப்பு வழிபாடு நடைபெறுவதற்காக இக்கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்டது' என்று கூறுகின்றான்.

சடாவர்மன் பராக்கிரம பாண்டியன் காலத்தில் பல பணியாளர்கள் இக்கோயிலுக்கென்று நியமிக்கப்பட்டுள்ளனர். 'முடி வழங்கும் பாண்டிய பிரம்மராயன் சூரியப்பட்டன்' என்பவன் தேவகன்மியாக நியமிக்கப்பட்டதைக் கல்வெட்டொன்று எடுத்துக் கூறுகின்றது. மேலும் இம்மன்னன் காலைப் பூசைகள் நடைபெறுவதற்காகவும் தானங்கள் பல வழங்கியுள்ளான்.

சடாவர்மன் வீரபாண்டியன் ஆட்சிக் காலத்தில் 'தனக்கன் குளம்' என்ற சிற்றூர் 'அர்த்த சாம பூசைக்காகவும், பங்குனித் திருநாளான 'உத்திரத்திருநாளில்' திருமேனிகளுக்குத் திருமஞ்சனம் ஆட்டத் தானம் வழங்கியுள்ளான் என ஒரு கல்வெட்டு தெரிவிக்கின்றது.

சேத்தூர் சமீன் சேவுகப் பாண்டியன், இச்சிவன் கோயிலுக்கு 1803இல் நிலத்தானம் பலவற்றை வழங்கியுள்ளார். மேலும் தம்முடைய கோடை கால இருப்பிடமாக அழகிய அரண்மனை

ஒன்றை இங்கே அமைத்துள்ளார். அவ்வரண்மனை எண்பட்டை வடிவில் அமைந்துள்ளது. அரண்மனையின் முன்னுள்ள தர்பார் மண்டபம் அழகிய தூண்களோடும், யாழிகளோடும், எண்பட்டை வடிவிலான கூரையமைப்போடும் மிகக் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. கணம் குறைந்த சிறுசிறு செங்கற்களை ஒட்டி உருவாக்கப்பட்ட இவ்வரண்மனை இன்றளவும் நிலைத்து நின்று கி.பி. 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலக் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

## தொப்பலாக் கரை

இவ்வூர், அருப்புக்கோட்டை சாயல்குடி சாலையில் அருப்புக் கோட்டை வட்டத்துப் பரளச்சி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டுகள் இவ்வூரினை 'அளற்றூர் நாட்டுக் குளத்தூர்' என்றும், 'ஜனநாத நல்லூர்' என்றும் குறிப்பிடுகின்றன. இங்குள்ள விஷ்ணு கோயிலும் தீர்த்தங்கரர் சிலைகளும் இவ்வூரின் பழமைக்குச் சான்றாய் விளங்குகின்றன.

இவ்வூரில் காணப்படுகின்ற கல்வெட்டுகளின்வழி விஷ்ணு கோயில் பற்றியும், விஷ்ணு துர்க்கை பற்றியும், சமணப்பள்ளி பற்றிய செய்திகளையும் அறிந்துகொள்ள முடிகின்றது. இவ்வூரின் மேற்குப் பகுதியில் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. முறையான கட்டடக்கலை அமைப்புடன் இக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது. இருப்பினும் மரஞ்செடி கொடிகள் இதன் மேல் அதிக அளவில் வளர்ந்து இதன் சிரிய அமைப்பை உருக்குலைத்து நிற்கின்றன. இக்கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் மற்றும் முதலாம் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

கல்வெட்டுகளில் இக்கோயில் 'திருமேற்கோயில் உய்யவந்த விண்ணகரம்' என்று குறிக்கப்படுகிறது. மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆட்சிக்காலத்தில் 'இராசேந்திர சோழ வாணாதிராயன் என்பவன் இக்கோயிலில் இறைவனுக்குப் படைப்பதற்கு ஆகும்

செலவிற்காக நில தானம் வழங்கிய செய்திகளை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. பல்லவ குலாந்தக நல்லூரைச் சேர்ந்த ஊர்ச் சபையார் இறையிலி திருவிடையாட்டமாக இக்கோயிலுக்கு நில தானம் வழங்கியதை மற்றொரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

மாறவர்மன் விக்கிரம பாண்டியன் காலத்தில் 'நின்ற ஆதிபிரான் அழகப் பெருமாள்' என்பவன் விளக்குகள் எரிப்பதற் காகக் காசுகளைத் தானமாக வழங்கிய செய்தி கல்வெட்டொன்றில் காணப்படுகின்றது. பலிபீடத்தில் கல்வெட்டொன்று உள்ளது. பரளச்சியைச் சேர்ந்த 'இரட்டை மூவன் ஆன தமிழதரையன்' என்பவன் குலசேகரன் ஆட்சிக் காலத்தில் பலி பீடத்தைச் செய்தளித்ததாக அக்கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

இக்கோயிலின் முன்னால் அழகிய சிம்மக் கற்சிலை ஒன்றுள்ளது. அதில் முதலாம் குலோத்துங்கனுடைய 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அது 'வீரன் சடைக்கண் ஆன தர்மவித்தகன்' என்பவன் தூர்க்கைக்காக இச்சிம்மச் சிற்பச் சிலையை வடித்துக் கொடுத்தான் என்று தெரிவிக் கின்றது.

இவ்வூர்க் குளக்கரையில் இரண்டு தீர்த்தங்கரர்களின் சிலைகள் காணப்படுகின்றன. முதலாம் மாறவர்மன் குலசேகரன் கல்வெட்டொன்று 'விற்போர் வீரர் பெரும்பள்ளி' என்ற சமணப் பள்ளி ஒன்றிருந்த செய்தியைத் தருகின்றது. மேலும் அக்கல்வெட்டு அப்பள்ளிக்குப் பள்ளிச்சந்தமாக பரளச்சி என்ற ஊரில் நிலம் தானமாக வழங்கப்பட்டச் செய்தியையும் தெரிவிக்கின்றது. வணிகக் குழுக்களைக் காக்கும் 'விற்போர் வீரர்' என்ற படைப்பிரிவைச் சார்ந்தவர்கள் இப்பெரும்பள்ளியினை எடுத்திருக்கலாம் என்றறிய முடிகின்றது.

## நக்கனேரி

இவ்வூர் இராசபாளையம் வட்டத்தின் தென்கிழக்கில் கொல்லங் கொண்டானுக்கருகில் அமைந்துள்ளது. இங்குள்ள பாறை ஒன்றில்

சோழன் தலை கொண்ட வீர பாண்டியனின் வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றுள்ளது. அது 'ஆண்மர் நாட்டு ஸ்ரீதேவியம்மா சதுர்வேதி மங்கலம்' என்று இவ்வூரைக் குறிப்பிடுகின்றது. மேலும் இங்குள்ள பாறையின்மேல் சூலமணி விண்ணகரம் என்ற பெருமாள் கோயில் எழுப்பப்பட்ட செய்தியையும் தருகின்றது.

'அண்டநாட்டுப் பெருமூரைச் சேர்ந்த தென்னவன் உத்தர மந்திரியான சூலமணிக் கிழவன்' என்பவன் அக்கோயிலைக் கட்டியதாகக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இவ்வதிகாரி தனது பெயரிலேயே கோயில் எடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவன் வீரபாண்டியனிடம் மந்திரியாக இருந்தவன் என்பதும் தெரிகின்றது. இக்கோயிலில் விளக்கெரிப்பதற்காக 75 ஆடுகளைத் தானமாக வழங்கியுள்ளான்.

தானமாக வழங்கப்பட்ட ஆடுகளைப் பாதுகாக்க; 'ஸ்ரீதேவியம்மா சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த உலகன் குற்றாலம் என்பவனை நியமித்ததாகக் கூறுகின்றது அக்கல்வெட்டு. அவன் 'சோழாந்தக நாழியால் இக்கோயிலுக்கு நெய் அளக்க வேண்டும்' என முடிவெடுக்கப்பட்டதையும் தெரிவிக்கின்றது

## நதிக்குடி

இவ்வூர் சிவகாசி - அச்சந்தவித்தான் சாலையில் சிவகாசி வட்டத்து எதிர்க்கோட்டை உள்வட்டத்துள் அமைந்துள்ளது. இவ்வூரில் நாச்சியார் மேடு என்றழைக்கப்படும் மண்மேடு ஒன்றுள்ளது. அதில் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும், முதுமக்கட் டாழிகளின் பகுதிகளும் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு சங்ககாலத்திலேயே இவ்வூர் சிறப்புற்றிருந்தது என்று அறிய முடிகின்றது.

இவ்வூரில் பழமையான சிலன்கோயில் ஒன்றிருந்ததைக் கல்வெட்டொன்றின்வழி அறியமுடிகின்றது. இவ்வூர்ப் பாறை ஒன்றில் பராந்தக வீர நாராயணன் என்ற பாண்டிய மன்னனின்

அம்மன்னனின் 6-ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்தது. 'வெண்பைக் குடி நாட்டு வெண்கலக்குடியைச் சேர்ந்த கடாத்திருக்கைக் காவிதி ஆன மனோமயன் மாறன்' என்பவன் சிவன் கோயிலுக்கு விளக்கெரிக்க 15 தங்க நாணயங்களை அளித்ததாகத் தெரிவிக் கின்றது. மனோமயன் மாறன் என்பவன் பாண்டிய கன்னர்களிடம் அதிகாரியாகப் பணி செய்தவன் என்பதைக் கல்வெட்டுகள்வழி அறியமுடிகின்றது. நெல்லை மாவட்டத்து விஜய நாராயணத்தில் 'மனோன்மணீசுவரம்' என்று இவ்வதிகாரியின் பெயரில் கோயில் அமைந்தது என்பதை அறியலாம்.

இவ்வூரிலுள்ள திருவேங்கடமுடையார் கோயில் தென்காசிப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயில் நிலை யிலுள்ள கல்வெட்டொன்று; நாட்டார்கள் இப்பகுதியின் வளர்ச்சிக்காக செய்த பணிகளைக் குறிப்பிடுகின்றது.

கி.பி. 1896-ஆம் ஆண்டைச் சார்ந்த செப்பேடு ஒன்று அதிவீரராம பாண்டியன் காலத்தைச் சார்ந்தது. இச்செப்பேடு இங்கு பிரம்மதேயம் ஒன்று ஏற்படுத்திய செய்தியினைத் தெரிவிக் கின்றது. இராம கிருஷ்ணப்ப நாயக்கரின் வேண்டுகோளுக்கிணங்க இப்பிரம்மதேயம் உருவாக்கப்பட்டது. இப்பிரம்மதேயம் தென் காசிப் பாண்டியன் பெயராலேயே அதிவீரராமபுரம் என்றழைக்கப் பட்டது. இப்பிரம்மதேய நிலங்கள் 43 பகுதிகளாகப் பிரிக்கப் பட்டு 43 அந்தணர்களுக்குத் தானமாக வழங்கப்பட்ட செய்தியை அச்செப்பேடு தருகின்றது.

## நத்தத்துப்பட்டி

இவ்வூர் கோட்டூர் இருக்கண்குடிச் சாலையில் அமைந் துள்ளது. இவ்வூரின் பழமையை இங்கு கிடைத்துள்ள முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டால் அறிய முடிகின்றது. இருக்கண்குடிச் சபையார் எடுத்த தீர்மானத்தைப்

## நத்தம்பட்டி

இவ்வூர் திருவில்லிபுத்தூர் மதுரைச் சாலையில் திருவில்லி புத்தூர் வட்டத்து நத்தம்பட்டி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்பது ரோமானியத் தங்க நாணயங்கள் இவ்வூரின் பழமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

கி. பி. 4, 5 ஆம் நூற்றாண்டுகளிலேயே இவ்வூர் ரோமானிய நாட்டவர்களுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை அறியமுடிகின்றது. இவற்றுள் 5 காசுகள் இரண்டாம் தியோடியஸிஸ் என்ற ரோம் நாட்டு மன்னன் காலத்தில் வெளியிடப் பட்டன. மூன்று காசுகள் 'முதலாம் லியோ' காலத்திலும்' ஒரு காசு முதலாம் ஜெனோ' காலத்திலும் அச்சிடப்பட்டவை யாகும். ஒவ்வொரு காசும் மூன்று கிராம் எடையும் 2 செ. மீ. விட்டமுமுடையதாகும். ஒவ்வொன்றிலும் நாணயச் சாலையின் குறியீடாக 'CONOB' என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை 'கான்ஸ்டான்டி நோபிள்' என்பதைக் குறிக்கும் வார்த்தைகள் என நாணயவியலார் கருதுகின்றனர்.

கீழைக் கடற்கரையோரத்துக் காயல் பட்டினத்தில் ரோமானியப் பானை ஓடுகள் நிரம்பக் கிடைக்கின்றன. அத்துடன் பழையகாயல், சோனகன் விளை, விந்தன் கோட்டை, மாங்குடி, கரிவலம் வந்த நல்லூர், சோழபுரம், நத்தம்பட்டி திருமங்கலம் போன்ற பகுதிகளில் கிடைத்த பானை ஓடுகளும், நாணயங்களும் பெருவணிகச் சாலை இருந்ததை உறுதிப்படுத்து கின்றன. காயல்பட்டினக் கடற்கரையில் இறங்கி இவ்வழியே வடக்கு நோக்கிச் சென்றிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

மேலும் நத்தம்பட்டியில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் உருவம் ஒன்று காணப்படுகின்றது. இது நாற் கரங்களுடன் கிரீடமகுடம் அணிந்து இடை முதல் கணுக்கால் வரை கனமான ஆடையுடன் காணப்படுகின்றது. மேலிரு

கரங்கள் சங்கு சக்கரம் தாங்கி உள்ளன. சக்கரம் பிரயோகச் சக்கரமாகவும், முன்னிரு கரங்களில் வலக்கரம் வரதமுத்திரை யுடனும் இடக்கரம் ஊருவ ஹஸ்தமாகவும் காட்டப்பட்டுள்ளன. கனமான முப்பிரிநூல் வலக்கரம் ஏறிச் செல்கிறது. இச்சிலையின் மூலம் இவ்வூரில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலேயே புகழ் பெற்ற பெருமாள் கோயில் இருந்ததை அறியலாம்.

மற்றொரு பழமையான சிலை சமணத் தீர்த்தங்கரர் சிலை யாகும். இச்சிலையில் முக்குடைக்கீழ் அரை பத்மாசன நிலையில் அமர்ந்துள்ள தீர்த்தங்கரர் உருவம் காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டினது எனலாம். அக்காலகட்டத்தில் இங்கு ஒரு சமணப்பள்ளி இருந்திருக்க வேண்டும் என்றும், அதில் இருந்தது இச்சிலை என்றும் ஒருவாறு யூகிக்கமுடிகின்றது.

## நரிக்குடி

இவ்வூர் அருப்புக்கோட்டைக்கு மேற்கில் 29 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. முன்னர் இவ்வூர்ப் பகுதி காடுகளாக இருந்த தாகவும், அதில் நரிகள் அதிகம் இருந்ததாகவும் அதனால் இவ்வூருக்கு நரிக்குடி எனப் பெயர் ஏற்பட்டதாகவும் கூறுகின்றனர். வடமொழியில் இவ்வூரைச் 'சம்புகபுரம்' (நரிப்புரம்) என்று அழைப்பர்.

இவ்வூர் நாயக்கர் காலத்தில் புகழ்பெற்ற ஊராகத் திகழ்ந் திருக்கின்றது. 'கிருதிமால்' ஆற்றங்கரையில் அமைந்துள்ள சிவன் கோயில் இவ்வூரின் பழமையை எடுத்துக் கூறுவதாயுள்ளது. இறைவன் பெயர் 'விருப்பாக்ஷிநாதசுவாமி' என்பதாகும். 'விருப்பாக்ஷி' என்ற இறைவன் விஜயநகர மன்னனுக்குரிய தலையாய வழிபாட்டுத் தெய்வமாகும். அவர்கள் காலத்திலேயே இவ்வூர் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். இதனோடு இணைந்த அம்மன் கோயில் 'நாகவல்லி அம்மன்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

இவ்வூரில், 'அழகம்மன் கோயில்', குப்புசாமி கோயில், அய்யனார் கோயில் போன்ற சிறு தெய்வக் கோயில்கள் உள்ளன.

இதுமட்டுமல்லாது இங்கு புகழ்பெற்ற சத்திரம் ஒன்றுள்ளது. இச்சத்திரம் ம்ங்கம்மாள் காலத்தில் கட்டப்பட்டதாகக் கூறுவர். இச்சத்திரத்திற்காக ஆதித்தனேந்தல் என்ற கிராமத்தில் பாதியும், மாணிக்கனேந்தல் என்ற கிராமமும் தானமாக விடப்பட்டுள்ளன.

நரிக்குடியைச் சேர்ந்த சேஷாசல சாஸ்திரிகள் என்பவர் சத்திரத்தின் பாதுகாவலராய் (HUGKDAR) இருந்துள்ளார். இச்சத்திரம் சிவகங்கை ஜமீனின் பிரதானியாக இருந்த மருது பாண்டியன் சேர்வை என்பவரால் வாங்கப்பட்டதாக ஒரு செவி வழிச்செய்தி உள்ளது.

மருது பாண்டியன் சேர்வை வேட்டையாடுவதன் பொருட்டு நரிக்குடிக் காட்டிற்கு வந்து காட்டில் வழி தெரியாமல் திண்டாடினார் என்றும், அப்போது நரிக்குடி மக்கள் அவருக்கு உணவு கொடுத்து வழிப்படுத்தினர் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு உதவி புரிந்த இவ்வூர் மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக ஒரு சத்திரம் கட்டிக் கொடுக்க எண்ணினார். ஏற்கனவே இவ்வூரில் சத்திரம் ஒன்று இருப்பதை அறிந்து அதன் பொறுப்பாளர் சேஷாசல சாஸ்திரிகள் மகன் அகிலாண்டம் அய்யரிடமிருந்து விலைக்கு வாங்கினார். அத்தோடு மட்டுமல்லாது இச்சத்திரத்திற்கு ஆதித்தனேத்தல், முக்குளம், வீராக்குடி, கருமானேந்தல், ஆதிகுளம் முக்கால் பங்கு, நல்லூர், மேலப்பசலை, நடுக்கச்சை அரை பங்கு, ஆலங்குளம் அரை பங்கு, நரிக்குடி அய்ந்து பங்கு ஆகிய ஊர்கள் தானமாக வழங்கப்பட்டன.

பின்பு இச்சத்திரம், சமீன்தார் முத்து விஜயரகுநாதப் பெரிய உடைய தேவர் அவர்களால் கி. பி. 1785-இல் அகிலாண்டம் அய்யரிடமே பொறுப்பாக ஒப்படைக்கப்பட்டது. அவ்வாறு பாதுகாத்து வரும்போது சத்திரத்தின் வருவாயிலிருந்து முத்தனேந்தலில் கி.பி. 1837-இல் மற்றொரு சத்திரம் கட்டப்பட்டது. அதற்காக ஆதித்தனேந்தல் அரை பங்கு, ஆதிகுளம் கால் பங்கு, தருமம் அரைப் பங்கு, ஆலங்குளம் ஒரு பங்கு ஆகிய பகுதிகள் விலை கொடுத்து வாங்கப்பட்டன. சத்திரம் பொறுப்பாளரால் முறையற்ற நிருவாகத்திற்கு உள்ளாகியது. இதன் பின்னர் பல்வேறு நிலைக்கு ஆளாகிக் கைமாறிற்று. நாளடைவில்

இச்சத்திரத்தில் தங்கவரும் ஆட்கள் குறைந்தமையால், தற்போது பல அலுவலகங்களுக்கும், தனியார் அலுவலகங்களுக்கும் வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

இச்சத்திரத்தின் அருகிலேயே சத்திரத்தை வாங்கி நரிக்குடி ஊருக்கு அர்ப்பணித்த மருது பாண்டிய சேர்வையின் சிலையும், அவரின் மனைவியர் சிலையும் உள்ளன. உள்ளூர் மக்கள் இவர்களைத் தெய்வமாக இன்று வழிபட்டு வருகின்றனர். இவரைப் பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டிற்கு ஒரு முறை விழா எடுக்கப்படுகின்றது. இதனை விளக்கும் வகையில் ஒரு கல்வெட்டும் பொறித்து வைக்கப்பட்டுள்ளது. இச்சத்திரத்தின் அருகிலேயே மருது பாண்டிய சேர்வையின் தண்ணீர் தருமமாக ஒரு அழகிய கிணறு ஒன்றை தோண்டியும், ஊருணி ஒன்றை வெட்டியும் சிறப்புச் செய்தார் என்பது வரலாறு.

## நாங்கூர்

இவ்வூர் திருபுவனம் நரிக்குடி சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள் சோழபுரம் கோயிலில் காணப்படுகின்றன. நாங்கூரைச் சேர்ந்த பலர் சோழபுரம் சிவன் கோயில் திருமண மண்டபத்துக் கல்தூண்களைத் தானமாக வழங்கிய செய்தியைத் தருகின்றன. மேலும் நாங்கூர் குளத்தின் கரையிலுள்ள மூதேவி, திருமால், ஸ்ரீதேவி மற்றும் தாய்மார் எழுவர் சிலைகளும்; இவ்வூரில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சைவ வைணவக் கோயில்கள் இருந்தன என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும் இதே நூற்றாண்டைச் சார்ந்த விநாயகர் சிலை ஒன்று தற்போது வழிபாட்டிலுள்ளது குறிப்பிடத்தக்கது. இதனைக் கொண்டும் இவ்வூர் ஆயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பே பெரும் வளத்துடன் விளங்கியது என்பது விளக்குகின்றது.

## நாலூர்

இவ்வூர் திருச்சுழி வட்டத்து முக்குளம் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இன்று சிறிய ஊராய்க் காட்சி தருகின்ற போதிலும் இது ஒரு காலத்தில் பெருஞ்சிறப்புடைய ஊராய் இருந்தது என்பதை இங்கு கிடைத்துள்ள தொல்லியல் சான்று களால் அறியலாம்.

இங்கு கிடைக்கின்ற முதுமக்கள் தாழிகளின் உடைந்த பகுதி களும் கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகளும், சங்ககாலத்திற்கு முன்னரே இவ்வூரில் மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்கின்றன.

மேலும் இங்குள்ள செட்டியாருரணி என்ற நீர்நிலை பெய ரானது இங்கு வணிகர்கள் வாழ்ந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இக்குளத்தின் கரையில் முற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த விஷ்ணு சிலை ஒன்றும், தேவியின் சிலை ஒன்றும் காணப்படுகின்றன. இவை முற்கால பாண்டியர் காலத்தில் இங்கு ஒரு பெருமாள் கோயில் இருந்ததைத் தெளிவுபடுத்து கின்றது.

'குமரிகுட்டித் திடல்' என அழைக்கப்படும் மேட்டுப் பகுதியில் முற்காலப்பாண்டியர் காலத்திய தாய்மார் எழுவர் சிலைகளும், சிவன், நான்முகன் ஆகியோரின் தெய்வத் திருவுருவங்களும் காணப்படுகின்றன. இவற்றால் முற்காலப் பாண்டியர் காலத்தில் இங்கொரு சிவன் கோயில் இருந்ததையும் உறுதி செய்யலாம்.

இதே காலத்தில் செய்யப்பட்ட துர்க்கையின் கற்சிலை ஒன்று 'கரிசல் ஊரணி' என்ற குளத்தருகே கிழக்குக் கரையில் காணப் படுகின்றது. பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட சுப்பிரமணியர் கோயிலில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சண்டிகேசுவரர் மற்றும் நந்தியின் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. ஆதிவல்லி அம்மன் கோயிலில் எண் கரங்களுடன் கூடிய அழகிய காளியின்

சிலை ஒன்று காணப்படுகின்றது. இவையெல்லாம் இவ்வூரின் பழமையைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் சமயங்களின் வரலாற்றையும் தெளிவுபடுத்துகின்றன.

இப்பழைய சான்றுகளுடன் 'ஔவையார்க் கல்' என அழைக்கப் படும் கல்லொன்றில் காணப்படுகின்ற கல்வெட்டு இருபிரிவினரி டையே ஏற்பட்ட உயரிய ஒப்பந்தத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. 'அம்பலக் கூத்தன் சூரிய தேவனான சேதிராயர்' என்ற பாண்டிய அதிகாரிக்கும், கங்கை கொண்டான் ராசேந்திர சோழ னான சோழவிச்சாதிரையப் பேரரையன் என்ற அதிகாரிக்கும் இடையே நடந்த இவ்வொப்பந்தச் செய்தியைத் தெரிவிக்கின்றது. அவ்வெரின் உரிமையில் மற்றவர்கள் தடைசொல்லவோ, தலை யிடவோ கூடாது என இவ்வொப்பந்தத்தால் உறுதிசெய்யப் பட்டுள்ளது.

## நெடுங்கரைப்பட்டி

பந்தல்குடியின் அருகிலுள்ள மேட்டுப்பட்டி என்ற ஊரின் கிழக்கில் இவ்வூர் அமைந்துள்ளது. முற்காலப் பாண்டியர் காலத்தில் மேட்டுப்பட்டி. நெடுங்கரைப்பட்டி ஆகிய இரண்டுமே சேர்ந்து 'வெண்பு நாட்டு நாகூர்' என அழைக்கப்பட்டதாக ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

இவ்வூரிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு முன்னுள்ள தீர்த்தங்கரர் சிலை தொல்லியல் சிறப்புடையதாகும். இத்தீர்த் தங்கரர் சிலை அசோக மரத்தினடியில் அமர்ந்திருப்பது போன்று வடிக்கப்பட்டுள்ளது. இதன் பீடத்தில் முதலாம் இராசராசனின் 22-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகின்றது. இது இச்சிலைக்கே உரிய சிறப்பாகும். இவ்வாண்டில் புகழ்ச் சடையன் என்பவன் தன்னுடைய பாட்டனார் 'முத்தப்பன் வெல்லவலி சாத்தன்' நினைவாகவும், தனது பாட்டி 'முத்தம்மை நற்சாக்கி' நினைவாகவும் இத்தீர்த்தங்கரர் சிலையை வடித்து ஆவிச்சேரி சமணப்பள்ளி மடத்திறகுத் தானமாக வழங்கினான் என்று அக்கல்வெட்டுக் கூறுகின்றது.

இராசராசன் காலத்தில் ஆவிச்சேரியில் சமணப் பெரும்பள்ளி ஒன்றிருந்தது என்பதை இக்கல்வெட்டு உறுதி செய்கின்றது எனலாம்.

## நென்மேனி

இவ்வூர் சாத்தூர் வட்டத்து நென்மேனி உள்வட்டத்தில் சாத்தூரிலிருந்து 10 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நெல்மலி என்பதே நாளடைவில் நென்மேனி ஆகியிருக்க வேண்டும். இவ்வூரைச் சுற்றி நெல்வயல்கள் சூழப்பட்டிருப்பதாலும், நெல் நிறைந்து காணப்படுவதாலும், இப்பெயர் பெற்றிருக்க வேண்டும்.

இவ்வூரில் கல்வெட்டுகளைக் கொண்டு விளங்கும் பழமையான சிவன் கோயில் சிதைந்து காணப்படுகின்றது. வெங்கடாசலபதி கோயிலும், விநாயகர் கோயிலும் நல்ல நிலையில் அமைந்துள்ளன.

நாயக்க மன்னனுடைய சிற்றரசன் ஒருவன் இங்கு வாழ்ந்ததாகத் தெரிகின்றது. அவன் வாழ்ந்த அரண்மனையின் இடிந்த பகுதி இன்றளவும் இங்கு காணப்படுகின்றது. குளத்தின் நான்காவது மடையிலுள்ள கல்வெட்டு, இப்பகுதியை ஆண்ட மன்னனுடைய செய்தியைத் தருகின்றது. இக்குளம் பல வெளி நாட்டுப் பறவைகளையும், சம்புக்களையும் கொண்டு விளங்குகின்றன.

இக்குளத்தைப் பற்றி இருக்கண்குடிக் கல்வெட்டில்:

"நென்மலி மாநகர் தன்னில்
கொல்மலி சீரம்பலமும் பெருங்குளக்கரை
இழித்தெரிய நெருங்கு புணர் கிழவனேரியும்
மற்றதன் கண்மடையும் ....."

அமைத்ததாய்க் கூறப்படுகின்றது. இதன் வழி இருப்பைக்குடிக் கிழவன் கி.பி. 823இல் இவ்வூரில் கல்மண்டபமும், குளமும் சீரமைத்தான் என்பது விளங்குகின்றது.

மன்னார் கோயில் கல்வெட்டில்;

'நென்மலி நாட்டு உத்தமச் சோழ நல்லூர் உடையான் இராசேந்திர சோழ இருக்கு வேளான் . . . .'' என்று வரக் காணலாம். Vol. XIV Ins. 145-3 சேரன் மாதேவி, சுந்தரசோழ பாண்டியன் கல்வெட்டில்; நென்மலி நாட்டு மீனவன் நல்லூருடை யான் புறம்பியன் பள்ளி கொண்டான் அழகிய பாண்டிய மூவேந்த வேளான்' (Vol. XIV 157-6) என்று குறிப்பிடப்படு கின்றது.

திருவாலீசுவரம் கல்வெட்டில்; 'நென்மலி நாட்டு மீனவ நல்லூருடையான் புறம்பியன் பள்ளி கொண்டானான அழகிய பாண்டிய மூவேந்த வேளாரும் . . . .' (Vol XIV 160-84) என்றும், 'தச்சன் நென்மலியுடையான் கணியன் சோலை எழுத்து' (Vol. XIV 161-84) என்றும் வரக்காணலாம். இச்சான்றுகள் மூலம், நென்மேனி பற்றிய குறிப்பு பிற ஊர்க் கல்வெட்டில் வருகின் றமையை அறிய முடிகின்றது.

இங்குள்ள பிரசன்ன வெங்கடாசலபதி கோயில் நாயக்கர் காலத்தைச் சார்ந்ததாகும். இக்கோயில் தொடர்பான கல்வெட்டு தனியே காணப்படுகின்றது. இது கி.பி. 1665-ஆம் ஆண்டைச் சார்ந்தது. சொக்கநாத நாயக்கன் மேன்மைக்காக கோயிலுக்குத் தானமாக நிலம் வழங்கப்பட்ட செய்தியினைத் தெரிவிக்கின்றது. அனந்த ராஜ சுவாமி கோயில் பலகைக் கல் ஒன்றில் கல்வெட்டு காணப்படுகின்றது. அது கி.பி. 1661-ஆம் ஆண்டினது. விசுவநாத நாயக்கன், சொக்கநாத நாயக்கன், மற்றும் வடமலை யப்ப பிள்ளையின் மேன்மைக்காக தாமரைக்குளம் ஒன்றினைத் தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

## பந்தல்குடி

இவ்வூர் அருப்புக் கோட்டை வட்டத்துப் பந்தவ்குடி உள் வட்டத்தில் அருப்புக்கோட்டை எட்டையபுரம் சாலையில் அருப்புக் கோட்டையிலிருந்து 9 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. பந்தல்

என்பது உயரமான தூண்களைக் கொண்ட கல் மண்டபத்தைக் குறிப்பதாக அமையும். இத்தகைய மண்டபம் பழங்காலத்தில் கோயில் திருவிழாக்களில், இறைவன் எழுந்தருளுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. நாளடைவில் இங்கு குடியிருப்பு தோன்றியதால் இஃது பந்தல்குடி ஆயிற்று எனலாம்.

மேலும் பாண்டிய மன்னர்கள் தங்கள் ஆட்சியை மீண்டும் பெறப் போராடிக் கொண்டிருந்த சமயம் பல குறுநில மன்னர்கள் சிற்றூர்கள் பலவற்றை அழித்தார்கள். அச்சிற்றூர்களில் இதுவும் ஒன்று. அவர்கள் அழிவு ஏற்படுத்திய பின்பு அமைதி ஏற்பட்டது. அவ்வமைதிக்குப் பின்னர் கோயில் மண்டபத்தைச் சுற்றி தற்போதைய கிராமம் ஏற்பட்ட காரணத்தால் இப்பெயர் ஏற்பட்டது என்றும் செவிவழிக் கதை ஒன்று கூறுகின்றது.

இவ்வூர் ஒரு பாளையத்திலுடைய சிறு பிரிவாக விளங்கியுள்ளது. இராமநாதபுரம் சேதுபதியின் ஆளுகையின் கீழிருந்தது. நத்தத்தைச் சேர்ந்த 'துபாஷ் காதர் சாகிப்' என்பவர் இராமநாதபுரம் மன்னரிடமிருந்து ஒரு லட்சத்து எழுபத்தைந்தாயிரம் கொடுத்து இவ்வூர் ஜமீன் பகுதியை 1905-இல் வாங்கினார். அதிலிருந்து அவர் பந்தல்குடி ஜமீன்தார் என்று அழைக்கப்பட்டார். இந்த ஊரில் ஒரு சிறப்பான அமைப்பு காணப்படுகிறது. ஒவ்வொரு தெருவும் ஒவ்வொரு ஊரின் பெயரைக்கொண்டு விளங்குகின்றது. சான்றாக; அழகாபுரி, வெள்ளையாபுரம், மேட்டுப்பட்டி, நெடுங்கரைப்பட்டி, ரெட்டியபட்டி எனத் தெருப் பெயர்கள் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவ்வூரில் தற்போது நான்கு கோயில்கள் காணப்படுகின்றன. ஊரின் பல பகுதிகளில் பழைய கிராமத்தினுடைய எச்சங்களும், கோயிலின் எச்சங்களும் உள்ளன. ஒரு கோட்டையும் இங்குள்ளது. தற்போதுள்ள பெருமாள் கோயிலில் பழைய கோயிலின் ஐம்பொன் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. இதனைக்கொண்டு இவ்வூரின் பழமையைக் கணிக்க இயலும். கோயில் மணி ஒன்றில் காணப்படும் கல்வெட்டொன்று நாயக்கர் ஆட்சி இப்பகுதியில் விளங்கியதைக் காட்டுகின்றது. பழைய சிவன் கோயில் இறைவன் பெயர் 'பாதாள ஈசுவரர்' என்பதாகும்.

இவ்வூரில் சமணச்சிலை ஒன்றும் காணப்படுகின்றது. இது இங்கு ஒரு சமணப்பள்ளி இருந்ததற்கு ஆதாரமாகிறது. எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே இவ்வூரில் சமண மதம் இருந்தது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

## பள்ளிமடம்

திருச்சுழி வட்டத்து திருச்சுழி உள்வட்டத்து குண்டாற்றின் நதிக்கரையில் இவ்வூர் அமைந்துள்ளது. பள்ளிமடம் என்பது பள்ளிப்படையாக எடுக்கப்பட்ட கோயிலை அடியொற்றி உருவாகிய பெயராய் இருக்கலாம் என்பர்.

ஆனால் திருக்காட்டாம்பள்ளி கல்வெட்டுகள், பள்ளிமடம் கோயிலில் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகள் சிவன் கோயில் பற்றிய செய்தியினைத் தருவதைவிட சமண சமயத்தைப் பற்றிய செய்தியையே அதிகம் தருகின்றன. சமணக் குரவர்கள் தங்கியிருந்த இடம் பள்ளிகள் என அழைக்கப்பட்டன. அவர்கள் தங்கியிருந்ததை அடிப்படையாகக் கொண்டு பள்ளிமடம் எனப் பெயர் வந்திருக்க வாய்ப்புண்டு.

சோழன் தலை கொண்ட வீரபாண்டியனின் அண்ணன் சுந்தர பாண்டியன் இவ்வூருக்கு வந்தபோது இறந்துவிடுகின்றான். அவ்வாறு இறந்துபட்ட சுந்தரபாண்டியனுக்குப் பள்ளிப்படைக் கோயில் ஒன்றை வீரபாண்டியன் எழுப்புகின்றான். அப்பள்ளிப் படைக் கோயில் 'சுந்தரபாண்டிய ஈசுவரமுடையார்' என அழைக்கப் பட்டது. இக்கோயில் இறைவன் இன்று 'காலநாத சுவாமி' என்றழைக்கப்படுகின்றார்.

இக்கோயிலில் பல வட்டெழுத்துக் கல்வெட்டுகள் காணப் படுகின்றன. அவை சோழன் தலை கொண்ட வீரபாண்டியன் காலத்தவை. பள்ளிமடத்துச் சடையன் மாறன் கல்வெட்டு, சுந்தரபாண்டிய ஈசுவரதேவர்க்கு ஆடுகள் தானமாக வழங்கப் பட்டதைத் தெரிவிக்கின்றது. சோழன் தலை கொண்ட வீர பாண்டியனின் 7ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு; இக்கோயிலில்

இறைவன் பெயர் முதல் முதலாக 'பள்ளிப்படை சுந்தரபாண்டீசு வரத்துப் படாரர்' என குறிப்பிடப்படுகின்றது.

மேலும் படைத்தலைவன் சாத்தன் தேவன், பொலியூர் நாட்டுப் பொலியூர் சோழாந்தகப் பல்லவரையன் போன்ற அதிகாரிகள் இக்கோயிலில் தானம் வழங்குவதிலும், அத்தானத்தைக் காப்பதிலும் ஈடுபட்டனர். இச்செய்கை மன்னன் இக்கோயிலுக்கு வழங்கிய மரியாதையை வெளிபடுத்துவதாகத் தெரியவருகின்றது.

இங்குள்ள கல்வெட்டுகளின் வழி, 'காவிதிகணை பெற்றாள், நந்தி சடையப் படாரி, காவிதி நிதி பெற்றாள், காவிதி தாங்கி போன்ற தேவரடியார்கள் இக்கோயில் பணிமேற் கொண்டதை அறியமுடிகின்றது. இக்கோயில் வளாகத்தில் மகாவிரதிகளுக்கென்று மடம் கட்டப்பட்டிருந்தது. இம்மடத்தைப் பற்றியச் செய்தியை வீரபாண்டியனுடைய 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. அக்கல்வெட்டின் வழி 'சோழிய நாழி' என்ற பெயரை கொண்ட ஒரு அளவு கருவி வழக்கிலிருந்து பின்னர் அது 'சோழாந்தக நாழி' எனப் பெயர் மாற்றம் பெற்றதை அறிய முடிகின்றது.

இக்கோயில் முகமண்டப வட்டெழுத்துக் கல்வெட்டுகள் திருக்காட்டம்பள்ளி சமணப்பள்ளி பற்றியும், அதற்கு வழங்கப்பட்ட தானம் பற்றியும் குறிப்பிடுகின்றன.

## பனையடிப்பட்டி

இவ்வூர் சிவகாசி வட்டத்துக் கல்வார்ப்பட்டி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள பாறை ஒன்றில் மதுரை நாயக்க மன்னன் சொக்கநாத நாயக்கன் கல்வெட்டு ஒன்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டு, பனையடிப் பட்டியிலிருந்த சில நிலங்கள் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குத் தானமாக வழங்கப்பட்ட

செய்தியைத் தெரிவிக்கின்றது. மதுரை கோயிலிலுள்ள விசுவநாத சுவாமி பூசைக்காக இத்தானத்தை மன்னன் வழங்கியுள்ளான் என்பது தெரிகிறது.

## பாலவநத்தம்

இவ்வூர் அருப்புக்கோட்டை விருதுநகர் சாலையில் அருப்புக் கோட்டை வட்டத்துப் பாளையம்பட்டி உள்வட்டத்தில் அமைந் துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர்; 'புங்க நாட்டுக் காஞ்சி' என்றும், புங்கநாட்டுச் சென்னெல் குடி' என்றும், 'சென்னல் குடியான சிவபாதசேகர நல்லூர்' என்றும் குறிப்பிடப்படுகின்றது. 'சிவபாத சேகரன்' என்பது இராசராசனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும். இராசராசன் காலத்தில்தான் நென்மேனி என்ற மைந்த ஊர்ப்பெயர் 'சிவபாத சேகர நல்லூர்' என்று மாற்றப் படுகின்றது.

இவ்வூரிலுள்ள கைலாசநாதர் கோயிலும், செல்லியம்மன் கோயிலும் இவ்வூரின் பழஞ் சிறப்பை எடுத்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. கைலாசநாதர் கோயில் இருக்கும் இடம் 'காஞ்சி' எனக் குறிப்பிடப்படுகின்றது. இதில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், குலசேகரன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டுகள், 'இக்கோயிலுக்கு நிலத் தானம் வழங்கியதைத் தெரிவிக்கின்றன. நாயக்கர்கள் காலத்தில் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் முன்மண்டபம் ஆகியவை புதுப்பிக்கப்பட்டதால் கல்வெட்டுகள் மூலம் முழுச் செய்திகளையும் அறிய முடியவில்லை.

செல்லியம்மன் கோயிலில் மாறவர்மன் சுந்தரபாண்டியன், விக்கிரம பாண்டியன் காலக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. சுந்தர பாண்டியனின் 17-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு 'புரவரீசு வரமுடைய நாயனார் கோயிலுக்குச் சுந்தரனான சேரவினியான்' என்பவன் வழங்கிய தானத்தைக் குறிப்பிடுகின்றது. விக்கிரம பாண்டியனின் கல்வெட்டு 'சென்னெல் குடியான சிவபாத

சேகர நல்லூரைச் சேர்ந்த ஊரார்' புரவரீசுவரமுடைய நாயனார்க்கு ஊரிலிருந்து வரும் வருவாயைத் தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டின் வாயிலாக இராசராசன் காலத்திற்கு முன்பே இவ்வூர் செழிப்புற்று விளங்கியது என்றும், கைலாசநாத முடையார் புரவரீசுவரமுடைய நாயனார், இருஞ்சோ நாராயணத்தேவர் போன்ற பெயர்களில் தெய்வ உருக்களைக் கொண்ட கோயில்கள் இருந்தன என்றும் அறிய முடிகின்றது. மேலும் இவ்வூரின் வட பகுதியில் சமணக்குடியிருப்பு ஒன்றிருந்ததையும் அறிய முடிகின்றது. இப்போது அங்கு தீர்த்தங்கரர்களின் சிலை மேடை ஒன்றில் வைக்கப்பட்டு வழிபடப் பட்டு வருகின்றது. அசோக மரத்தடியில் முக்குடைக்கீழ் தீர்த்தங்கரர் அமர்ந்திருப்பது போன்றும் அவருக் கருகில் வெண்சவரி தாங்கிய இயக்கர்களின் உருவங்களுடனும் இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

## பாவாலி

இவ்வூர் விருதுநகர் செங்குன்றாபுரம் சாலையில் விருதுநகர் வட்டத்து இதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரிலுள்ள சிவன் கோயிலும், பாளையக்காரர்களுடைய அரண்மனையும் இவ்வூரின் பழமையை எடுத்துக் கூறுகின்றன.

இங்குள்ள சுப்பிரமணிய சுவாமி கோயிலில் காணப்படும் பலிபீடத்தில் கல்வெட்டொன்று உள்ளது. அது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிவன் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானத்தைத் தெரிவிக்கின்றது. இப்பலிபீடத்தை உடைய சிவாலயம் தற்போது இல்லை.

நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட சுப்பிரமணிய சுவாமி கோயில் மட்டும் தற்போது இவ்வூரிலுள்ளது. விசுவநாத நாயக்கன் மதுரையில் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற போது தனதாட்சிக்குட்பட்ட பகுதியை 72 பாளையங்களாகப் பிரித்தார்.

ஒவ்வோர் பாளையத்தின் ஆட்சிப் பொறுப்பையும் பாளையக் காரர் ஒவ்வொருவர் பொறுப்பில் விட்டார். அவ்வெழுபத்திரண்டு பாளையங்களில் பாவாலி பாளையமும் ஒன்றாகும். இப்பாளையப் பட்டு அரண்மனை இன்றும் சிதைவுற்ற நிலையில் காட்சியளிக் கின்றது.

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கில் ஏற்றப்பட்ட பின்னர் (16-10-1799) அவனுக்கு ஆதரவாயிருந்த நாகலாபுரம், கோலவார் பட்டி, ஏழாயிரம் பண்ணை, கடலக்குடி, குளத்தூர் ஆகிய பாளையப்பட்டுக்களின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. மேஜர் பானர்மேன் செப்பேட்டு ஆணை ஒன்றை கி.பி. 1799-இல் அக்டோபர் 21-ஆம்தேதி வெளியிட்டான். அச்செப்பேட்டின் நகல் களைத் தொடர்புடைய பாளையப்பட்டுக்களின் அரண்மனையில் பொருத்தி வைக்க ஆணையிட்டான். அந்த ஆணையானது பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்ப்போருக்கு கட்டபொம்மனுக்கு ஏற்பட்ட கதிதான் நேரும் என எச்சரித்துள்ள பாங்கில் அமைந்துள்ளது.

மேலும் பாளையக்காரர்கள் கோட்டைகள் கட்டிக் கொள் வதற்கும், பீரங்கிகள், துப்பாக்கிகள் ஈட்டிகள், வல்லயங்கள் போன்ற ஆயுதங்களை வைத்துக்கிகாள்ள அவ்வாணை மூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்று அதிகாரிகளும், வேலைக் காரர்களும், மக்களும் ஆயுதங்கள் வைத்துக்கொள்ளக்கூடாது என்றும் அவ்வாணை கூறுகின்றது. அத்துடன் பாளையக்காரர் களுக்குட்பட்ட பகுதிகளில் ஏற்படும் குழப்பங்களுக்கு அவ்வப் பாளையக்காரர்களே பொறுப்பேற்க வேண்டும் என அச்செப் பேட்டுச் செய்தி குறிப்பிடுகின்றது. இவ்வாணை பொறிக்கப்பட்ட செப்பேடு பாவாலி அரண்மனைத் தூண் ஒன்றில் பதிக்கப் பட்டுள்ளது.

## பாளையம்பட்டி

இவ்வூர் அருப்புக்கோட்டை தூத்துக்குடி சாலையில் அருப்புக் கோட்டை வட்டத்து பாளையம்பட்டி உள்வட்டத்தில், அருப்புக் கோட்டையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. ஒரு

பாளையத்திற்கே தலைமையிடமாக இது விளங்கியதால் இவ்வூர் பாளையம்பட்டி எனப் பெயர் பெற்றது. இங்கு வேணுகோபால சுவாமி கோயில், சிவன் கோயில், மாரியம்மன் கோயில் போன்ற கோயில்கள் உள்ளன.

கி.பி. 1802-ஆம் ஆண்டில் இராமநாதபுரம் சமஸ்தானத்து இராணி பர்வத வர்த்தினி நாச்சியார்க்கு வாரிசு இன்மையால் புதுமடத்தைச் சேர்ந்த தனது சகோதரியின் இரு புதல்வர்களை தத்து எடுத்து வளர்த்து வந்தார். அவர்களுள் ஒருவரை இராம நாதபுரம் அரசுக்கு மன்னராக முடிசூட்டி வைத்தார். மற்றொரு வரான பொன்னுச்சாமி தேவரை பாளையம்பட்டிக்கு சமீன்தாராக நியமித்தார். பதினெட்டு கிராமங்கள் இப்பாளையம்பட்டி சமீனுக்கு உட்பட்டிருந்தது.

கி. பி. 1840-ல் பாளையம்பட்டி சமீனாகப் பொன்னுசாமித் தேவர் பதவி ஏற்றார். பதவி ஏற்றவுடன் இராமநாதபுரத்தில் கவுரிவிலாசம் என்ற அரண்மனையைக் கட்டினார். இவர் இயல் இசை இரண்டிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் காலத்தில் கலைஞர்களும், புலவர்களும் ஆதரவு பெற்றனர். தஞ்சை மராட்டிய மன்னன் சரபோஜிக்கு நெருங்கிய நண்பராக இருந்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவிய பாண்டித்துரைத்தேவர் இவரது மகனாவார். மதுரையில் தனது சொந்த மாளிகையில் சங்கம் நிறுவினார். இவர் வ.உ.சி.யின் நெருங்கிய நண்பர். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர். வ.உ.சி.க்கு நிறைய பொருளுதவி செய்து கப்பல் போக்குவரத்து தொடங்க உதவியாய் இருந்தார். 'உ.வே.சா'வுடன் நெருங்கிய தொடர்பு உடையவர். மதுரை வடக்கு வெளிவீதியிலுள்ள தனது அரண்மனையைச் சேதுபதி உயர்நிலைப்பள்ளிக்குத் தானமாக வழங்கியுள்ளார். இவருக்கு வாரிசில்லாமல் போனதால் பாளையம்பட்டி சமீனாக இவரது சகோதரர் பொறுப்பேற்றார். இவர் காலத்தில்தான் மதுரை வைகையாற்றின் மேல் பாலம் கட்டப்பட்டது.

பாளையம்பட்டி அரண்மனை கோட்டைத் தேவர் மகன் இராமச்சந்திர தேவரால் கட்டப்பட்டது. அனைத்து விளையாட்டு மைதான வசதிகளுடன் இது கட்டப்பட்டது. இங்குள்ள வசந்த மண்டபம் குறிப்பிடத்தக்க கலையம்சத்துடன் காணப்படுகிறது.

கும்பினியார்கள் இங்கு தங்கி பொழுது போக்குவதற்கு விரும்பும் வகையில் இவ்வரண்மனை அனைத்து வசதிகளுடன் அமைக்கப் பட்டுள்ளது. இவர் காலத்தில்தான் புலியூரானில் சித்தநாதசுவாமி கோயில் கட்டப்பட்டது. இத்தெய்வமே இவர்களது குல தெய்வமாகும்.

## பாறைக்குளம்

இவ்வூர் திருச்சுழிக்கருகில் காணப்படுகின்றது. இங்கு 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட குடைவரைக் கோயில் ஒன்று காணப் படுகின்றது. இக்குடைவரைக் கோயிலின் சுவர்ப்பகுதிகள் நன்கு வழவழப்பாகத் தேய்த்து மெருகேற்றப்பட்டுள்ளது. இதன் கருவறை சதுரவடிவமானது. கருவறையின் நடுவில் சதுரவடிவ ஆவுடையாரும் சிறிய வடிவிலான இலிங்கமும் பாறையிலேயே செதுக்கப்பட்டுள்ளன. இலிங்க உருவமும் நன்கு தேய்க்கப் பட்டு மெருகேற்றப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டை

இவ்வூர் சிவகாசி எரிச்ச நத்தம் சாலையில் சிவகாசி வட்டத்து மங்கலம் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரில் கிடைத்த தென்காசிப் பாண்டிய மன்னனின் செப்பேடுகள் இவ்வூரின் பழமைக்குச் சான்றாகத் திகழ்கின்றன. கி.பி. 1583-ஆம் ஆண்டில் இச்செப்பேட்டு ஆணை பொறிக்கப்பட்டுள்ளது.

இச்செப்பேடு எட்டு ஏடுகளைக் கொண்டது. ஒவ்வொரு ஏடும் 12 அங்.நீளமும், 9 அங். அகலமும் கொண்டு விளங்கு கின்றது. ஏட்டின் இருபுறமும் வடமொழியிலும், கிரந்த எழுத்திலும் எழுதப்பட்டுள்ளது. மொத்தம் 411 வரிகளைக் கொண்டு விளங்கும் இச்செப்பேட்டின் ஏழாவது ஏட்டின்

பின்புறமும், எட்டாம் ஏட்டின் முன்புறமும் லக்ஷ்மி நாராயணர் உருவம் வரையப்பட்டுள்ளது. இறைவனின் இருபுறமும் வெண் சாமரம் காட்டப்பட்டுள்ளது. பீடத்தின் இருபுறத்தில்; ஒருபுறம் விளக்கும் மறுபுறத்தில் பாண்டியரின் சின்னமாகிய செண்டும் இரட்டை மீன்களும் வரையப்பட்டுள்ளன. இறை உருவத்தின் கீழே 'துல்யம்' என்று கிரந்த மொழியிலும் கொடுமளூருடையான் எழுத்து எனத் தமிழ் மொழியிலும் பொறிக்கப்பட்டுள்ளன. எட்டாவது செப்பேட்டில் இறை பீடத்தின் கீழ் பாண்டியர் அரச முத்திரையும் சூரிய சந்திரர்களின் உருவமும் வரையப் பட்டுள்ளன.

இச்செப்பேடு மன்னன் ஸ்ரீவல்லபன் ஆன வரதுங்கராம பாண்டியன் காலத்தில் வெளியிடப்பட்டது. புதுக்கோட்டை, இலுப்பைப்பட்டி, வலங்கைமான், சிவகாமியக் குறிச்சி ஆகிய நான்கு ஊர்களும் ஒன்றிணைக்கப்பட்டு 'திம்மபுரம்' என்றழைக்கப் பட்டது. பின்னர் இது $41\frac{1}{2}$ பங்குகளாகப் பிரித்து 76 பிராமணர்களுக்குத் தானமாக வழங்கினான் மன்னன். தானமாக வழங்கப்பட்ட ஊர்களில் ஒன்றாக புதுக்கோட்டையும் இருந்த தால், இவ்வூரில் இச்செப்பேடு பாதுகாக்கப்பட்டிருந்தது என்று அறியமுடிகின்றது.

## புதுப்பட்டி (எம்)

இவ்வூர் திருத்தங்கல் எரிச்ச நத்தம் செல்லும் சாலையில் அர்ச்சுனா நதிக்கரையில் அமைந்துள்ளது. இங்கு குடைவரைக் கோயில் ஒன்று காணப்படுகின்றது. இதுவே இவ்வூரின் பழமைக்குச் சான்றாய் அமைந்துள்ளது எனலாம்.

இக்குடைவரைக் கோயில் கருவறை, முன்மண்டபத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. கருவறையைச் சுற்றி வருவதற்கு ஏற்ப பாதை குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இக்குடைவரைக் கோயிலில் சிலைகள் ஏதும் காணப்படவில்லை. ஆனால் சிலைகள் வைப்பதற்கு ஏற்ப கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மற்ற குடைவரைக் கோயிலைப் போன்றில்லாமல் இக்குடைவரைக் கோயில் சுண்ணாம்புப் பாறையில் உருவாக்கியிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்குடைவரைக் கோயிலின் முன்பகுதியில் பிற்காலத்தில் செங்கல்லும், சுண்ணாம்பும் கொண்டு சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இச்சுவர் குடைவரைக் கோயிலின் தோற்றத்தை மறைத்து நிற்கின்றது. குடைவரைக் கோயில் தொடர்பாகக் கல்வெட்டுகள் ஏதும் கிடைக்கவில்லை. இதன் அமைப்பைக் கொண்டு பார்க்கையில்; இக்குடைவரைக் கோயில் கி.பி. ஒ-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பட்டிருக்கலாம் என்று கருத இடமுண்டு.

## புதுப்பாளையம்

இராச பாளையத்திற்குத் தெற்கில் இராசபாளையத்தின் ஒரு பகுதியாக இவ்வூர் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இப்பகுதி 'வெண்பைக்குடி நாட்டுக் கருங்குளமான சதவாசக நல்லூர்' என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள சிவன் கோயில் இப்பகுதியின் பழமையை விளக்குவதாக அமைந்துள்ளது.

தற்போது இக்கோயில் பறவை வண்ணங் காத்தார் கோயில் என்றழைக்கப்படுகின்றது. கல்வெட்டுகளில்; 'பிராணன் காத்தருளிய சுவாமி கோயில்' எனக் குறிப்பிடப்படுகின்றது. முதலாம் சடையவர்மன் ஸ்ரீவல்லபன், இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் ஆகியோரின் கல்வெட்டுகள் இங்கு காணப்படுகின்றன. தற்போது இக்கோயிலில் திருப்பணிகள் நடைபெறுவதால் கல்வெட்டுகளின் அமைப்புகள் மாறிக் காணப்படுகின்றன.

ஸ்ரீவல்லபன் கல்வெட்டு; இக்கோயிலுக்கு நொந்தா விளக்கெரிப்பதற்காகத் தானம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. மேலும் அந்த ஆணை நுந்தா விளக்கு சரிவர ஏற்றப்பெறாவிட்டால் அதன் பொறுப்பாளர்களாக இருக்கும் அந்தணர்கள் தண்டமாக ஒரு பணம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டு; 'இராசவல்லி புரத்தைச் சார்ந்த ஒருவாறு உணர்ந்தான் எனக்கு நல்ல பெருமாள்' எனவும் அழைக்கப்பட்டது. இவனுடைய 11-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு, மன்னன் கருங்குளத்தினுடைய மேற்குப் பகுதியை இம்மடத்திற்கு வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது. கோளகி மடத்தினுடைய தலைவர் ஈசான தேவர் என்பவருக்கும் அவரது சீடர்களுக்கும் உணவுத் தேவைக்காக இந்நிலம் வழங்கப்பட்டது.

இக்கோயிலின் நிலைப்பகுதியிலுள்ள கல்வெட்டு 'அந்நிலைப் பகுதி வாழவல்ல பாண்டிய தேவனால் வழங்கப்பட்டது என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது.

## புலியூரான்

அருப்புக்கோட்டை திருச்சுழி சாலையில் அருப்புக்கோட்டை வட்டத்துப் பாளையம்பட்டி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரில் பழைய சிவன் கோயில் ஒன்றுள்ளது. இது முற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டிருந்த போதிலும் பிற்காலத் திருப்பணிக்காட்பட்டு தன் பொலிவை இழந்து காணப்படுகின்றது. இருப்பினும் முற்காலப் பாண்டியர் கோயில்தான் இஃதென்பதற்குச் சான்றாக இங்குள்ள முருகன், நந்தி சிலைகளைக் காட்டலாம். இவை முற்காலப் பாண்டியர் காலக் கலைப்பாணியோடு விளங்குகின்றன.

## மங்கலம்

அக்காலகட்டத்தில் இப்பகுதியில் சமணப்பள்ளி ஒன்றிருந்ததற்கு ஆதாரமாக 'அர்த்த பத்மாசனத்து, அமர்ந்திருக்கும் சமண

தீர்த்தங்கரர் சிலையைக் காட்டலாம். இத்தீர்த்தங்கரர் மகராசனத்தில் அமர்ந்த கோலத்தில் தியான நிலையில் காணப்படுகின்றார். தலையைச் சுற்றி மகர பிரபை காட்டப்பட்டுள்ளது. பிரபைக்கு மேல் அழகிய முக்குடையும், அதனருகே அசோக மரக்கிளையும் காட்டப்பட்டுள்ளன. தீர்த்தங்கரரின் இருபுறமும் வெண்கவரி வீசும் இரு இயக்கர்கள் காட்டப்பட்டுள்ளனர். தற்போது இச்சிலை தொல்லியல் துறையின் மதுரை நாயக்கர் அரண்மனையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## மகாராசபுரம்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வத்திராயிருப்பு செல்லும் சாலையில் திருவில்லிபுத்தூர் வட்டத்து கோட்டையூர் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இங்கு கிடைக்கின்ற தொல்பொருட்களைக் கூறலாம். இவ்வூரின் நத்தப் பகுதியில் பெருமளவில் கருப்புச் சிவப்பு வண்ண பானை ஓடுகளும், முதுமக்கள் தாழிகளின் ஓடுகளும் இன்றளவும் கிடைத்து வருகின்றன. இவ்வூரில் கிணறு தோண்டும் போது பல அடுக்குகளில் முதுமக்கள் தாழிகள் கிடைத்ததாகத் தெரிகின்றது.

பெருங்கற்காலப் பண்பாடு இங்கு நிலவியதற்கு இச் சான்றுகள் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. மேலும் வெவ்வேறு அடுக்கு நிலையில் முதுமக்கள் தாழிகள் கிடைத் திருப்பது சங்ககாலத்திற்கு முன்னரே இங்கு மக்கள் வாழ்ந் துள்ளனர் என்று தெரிகிறது.

இவ்வூர் கிருஷ்ணன் கோயில் சிவகாசிச் சாலையில், சிவகாசி வட்டத்து மங்கலம் உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் வடபகுதியில் உள்ள மண்மேட்டில் கருப்புச் சிவப்பு பானை ஓடுகள் கிடைக்கின்றன. மேலும் இங்கு கிடைத்துள்ள முதுமக்கள் தாழிகளில் இரும்பு ஆயுதங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாட்டோடு இரும்புக் காலப் பண்பாடும் இணைந்திருந்தமைக்குச் சான்றாக இது அமைந் துள்ளது. இத்தொல் பொருட்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பே

இப்பகுதியில் மக்கள் வாழத் தொடங்கிவிட்டனர் என்பதை வெளிப்படுத்துகின்றன.

இவற்றைத் தவிர இவ்வூரின் பழமையை எடுத்துக் காட்டும் வகையில் சிவன்கோயில் ஒன்றும், பெருமாள் கோயில் ஒன்றுமாக இரண்டு பழங்கோயில்கள் உள்ளன. சிவன்கோயில் கல்வெட்டுகளின் வாயிலாக அக்கோயில் முதலாம் சடாவர்மன் குலசேகரன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று அறியமுடிகின்றது. இக்கோயில் இறைவன் 'கைலாசநாதர்' என்று அழைக்கப் படுகின்றார்.

இக்கோயில் கருவறை, அரைமண்டபம் மாமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. கருங்கற்கள் கொண்டு கட்டப்பட்டுள்ள இக்கோயிலுக்கு எதிரே நந்தி மண்டபம் காணப்படுகின்றது. அதில் கி. பி. 17-ஆம் நூற்றாண்டு நந்தி இடம்பெற்றுள்ளது. நந்திமண்டபத் தூண்களில் பாளையக்காரர்களின் உருவங்கள் புடைப்புச் சிற்பமாக உருவாக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுகள் வாயிலாக, ஆயிரத்து எண்மர் ஈசுவரமுடைய நாயனார் என்று இக்கோயில் இறைவன் அழைக்கப்பட்டார் என்று அறியமுடிகின்றது. இப்பெயர் கொண்டு இக்கோயில் வணிகக்குழு ஒன்றால் உருவாக்கப்பட்டது என்றும் இவ்வூர் வணிக நகராக இருந்தது என்றும் அறிய முடிகின்றது.

மற்றொரு கல்வெட்டின் வழி; குலசேகரச் சதுர்வேதிமங்கலத்து வணிகர்கள் இக்கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளைத் தூய்மைப் படுத்தி இப்பகுதியில் கோயில் மடைப்பள்ளி கட்டித் தானமாக வழங்கினர் என்று அறியமுடிகின்றது. குலசேகரச் சதுர்வேதி மங்கலம்' என்று இருந்த பெயரே நாளடைவில் சுருங்கி 'மங்கலம்' என்று வழங்கி வருகின்றது.

வேறு ஒரு கல்வெட்டு; பிரம்மதேய மகாசபையினர் ஸ்ரீவல்லப விண்ணகர் ஆழ்வார் கோயில் முற்றத்தில் கூடியிருந்து ஆயிரத்து எண்மர் ஈசுவரமுடைய நாயனார் கோயிலுக்கு நிலம் தானமாக வழங்கிய செய்தியைத் தெரிவிக்கின்றது.

லெட்சுமி நாராயணப் பெருமாள் என்றழைக்கப்படும் பெருமாள் கோயில் இவ்வூரில் மற்றொரு வரலாற்றுச் சின்னமாக விளங்கி வருகின்றது. இக்கோயில் கல்வெட்டு வாயிலாக இங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் ஸ்ரீவல்லப விண்ணகர் ஆழ்வார் என மன்னன் பெயரைப் பெற்று வழங்கி வருகின்றார் என்றறிய முடிகின்றது.

இக்கோயிலிலுள்ள கல்வெட்டு தொடர்ந்து நடைபெற்ற திருப்பணியின் பலனாக இடம் மாறிக் காணப்படுகின்றது. கண்டியதேவர் என்பவர் கோயிற் செலவிற்காக நில தானம் வழங்கிய செய்தியைக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு; 'கருநிலக்குடி நாட்டுப் பரிநிறை கொண்டான் என்ற ஊரில் 'வீரபண்டித விண்ணகர் எம்பெருமான்' என்ற கோயில் எழுப்பப்பட்ட செய்தியைத் தருகின்றது.

திருவில்லிபுத்தூர் கல்வெட்டொன்றின் மூலமாக இவ்வூரிலுள்ள சில நிலங்கள் திருவில்லிபுத்தூர் கோயிலுக்குத் தானமாக வழங்கியதைத் தெரிவிக்கின்றது.

## மடவார் வளாகம்

திருவில்லிபுத்தூரின் ஒரு பகுதியாக விளங்குகின்றது மடவார் வளாகம் என்னும் பகுதியாகும். இது திருவில்லிபுத்தூர் இராசபாளையம் சாலையில் அமைந்துள்ளது. இங்கு புகழ்பெற்ற சிவன் கோயில் ஒன்றுள்ளது. இக்கோயில் இறைவன் 'வைத்திய நாத சுவாமி' என்றும் 'படிக்காசு வைத்தருளிய நாயனார்' என்றும் அழைக்கப்படுகின்றார்.

இக்கோயில் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற முறையான அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது. வாயிலில் பதினொரு நிலைக்கோபுரம் அழகு செய்கின்றது. இக்கோயில்

தென்காசிப் பாண்டியர் காலத்தில் முற்றிலுமாகப் புதுப்பிக்கப் பட்டது. அம்மன் கோயில் கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் கட்டடக் கலைப்பாணியுடன் திகழ்கின்றது.

இங்குள்ள கல்வெட்டுகள்; கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்களைப் பற்றி குறிப்பிடுகின்றன, சடாவர்மன் பராக்கிரம பாண்டியன் ஆட்சிக் காலத்தில் 'வெண்பைக்குடி நாட்டிலுள்ள வித்யாதர நல்லூர்' என்னும் ஊர் பராக்கிரம பாண்டியன் சந்தி எனும் பூசை நடைபெறுவதற்காக தானமாக வழங்கப்பட்ட பின்னர் இச்சிற்றூரின் பெயர் 'படிக்காசு வைத்த நல்லூர்' எனப் பெயர் மாற்றம் செய்யப்புட்டது.

புதுகைத் தலபுராணம் ஒரு காலகட்டத்தில் கொடுமையான பஞ்சத்தின் போது; சிவபெருமான் நாகநப்பி என்பவனுக்கு உதவி செய்யும் பொருட்டு நாளொன்றினுக்கு ஒரு தங்கக் காசினைச் சிவன் கோயில் படியில் வைத்துள்ளார். அதனால் இவ்விறை வனுக்குப் படிக்காசு வைத்தருளிய நாயனார் எனப் பெயர் ஏற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இவ்வூர் ஒரு மிகமுக்கியமான வணிக வழியாக விளங்கிற்று. இவ்வழியே செல்லும் வணிகர்கள் தாம் பெறும் இலாபத்தில் ஒரு பகுதியைக் கோயிலுக்குச் செலுத்த வேண்டும் என்ற ஒப்பந்தம் உள்ளது. ஒரு மிளகு வணிகன் இவ்வழியே செல்லும் போது இம்மூட்டை மிளகு மூட்டையல்ல உளுந்துமூட்டை' என்று பொய் கூறினான். அவ்வாறே சந்தைக்குச் சென்று மூட்டையைப் பிரித்த போது உளுந்தாக இருந்தது. வருந்திய அவ்வணிகன் இக்கோயி லுக்கு வந்து மன்னிப்பு வேண்ட அதன் பின்னர் உளுந்து மூட்டையாயிற்று என்று கூறப்படுகின்றது.

சடாவர்மன் ஸ்ரீவல்லபன் என்ற தென்காசிப் பாண்டியன் தன் பெயரில் சந்திபூசை நிகழ்த்தக் கருங்குளம் என்ற சிற்றூரைத் தானமாக வழங்கினான். கொற்றமங்கலம் என்ற சிற்றூர் கோயில் பூசைக்காகத் தானமாக வழங்கப்பட்டது. வீரபாண்டியன் எனும் மன்னன் அப்பெயரில் வீரபாண்டியன் சந்தி பூசை நடை பெறுவதற்காகப் பத்து மா நிலத்தைத் தந்துள்ளான். 'செங்குடிப் பற்று' எனும் சிற்றூர் இக்கோயில் அர்த்தசாமப் பூசைக்குத் தானமாக குலசேகரன் ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்டது.

நாயக்கர் காலத்தில் பழக்காசு வைத்த நாயனார் கோயில் நிருவாகத்தாருக்கும் ஆண்டாள் கோயில் நிருவாகத்தார்க்கும் நிலம் தொடர்பான சர்ச்சை வருகின்றது. இதனை வீரய்ய நாயக்கன் என்ற மன்னனும் அவனது மந்திரி தளவாய் அரியநாத முதலியாரும் தீர்த்து வைக்கின்றனர். அதன்படி இரட்டைக் 'கரிசல்குளம்' என்ற ஊர் ஆண்டாள் கோயிலுக்கும், மாலை யிட்டான் குளம் படிக்காசு வைத்தருளிய நாயனாருக்கும் தானமாக வழங்கித் தீர்த்து வைக்கப்பட்டது.

## மல்லி

இவ்வூர் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் மல்லி உள்வட்டத்தில், திருவில்லிபுத்தூர் சிவகாசி நெடுஞ்சாலையில் 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. உள்வட்டத்தின் தலைமையிடமாக அமைந்துள்ள இவ்வூர் கல்வெட்டுகளில் 'மல்லி நாடு' என அழைக்கப்பட்டுள்ளது, பல ஊர்களுக்கு பாதுகாப்பு தருகின்ற அளவிற்கு வலிமை பொருந்திய ஊராக விளங்கியதைக் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

இவ்வூரில் 'வீரபண்டித ஈசுவரமுடையார்' என்ற சிவன் கோயில் இருந்ததையும் அக்கல்வெட்டு தெரிவிக்கின்றது. மேலும் மல்லி நாட்டைச் சேர்ந்த 'மல்லிக்கிழான் காரிபாதி' என்ற புலவர் 'விருந்தினரை நன்கு உபசரிக்கும் குணத்தினன்' என்று மன்னனைப் பாராட்டுகின்றார். இம்மன்னன் மலைநாட்டைச் சேர்ந்தவன் என்று சிலர் குறிப்பிடுவர்.

## மன்னார்கோட்டை

இவ்வூர் விருது நகரின் தெற்கில் துலுக்கப் பட்டிக்கு அருகில் அமைந்துள்ளது. இவ்வூரின் தொன்மைக்குச் சான்றாய் இங்கு

கிடைக்கின்ற பழம் பானை ஓடுகளும், சிவன் கோயிலும் விளங்குகின்றன. கருப்புச் சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் காணப்படுவதால் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை உறுதி செய்ய முடியும். 2000 ஆண்டுகளுக்கு முன்பே இப்பகுதியில் மக்கள் வாழத் தொடங்கிவிட்டனர் என்பதையும் இது எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வூரிலுள்ள தியாகராச சுவாமி கோயில் பிற்கால பாண்டியர் காலத்தில் உருவாக்கப்பட்டதாகும். இது கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற கலை அமைப்புடன் விளங்குகின்றது. இக்கோயில் வளாகத்தில் உள்ள சில தூண்களில் பாளையக்காரர்களின் முழு உருவச்சிலைகள் காணப்படுகின்றன. மிகவும் சிதைந்த நிலையிலுள்ள அம்மன் கோயில் சிவன் கோயிலின் தென் பகுதியில் அமைந்துள்ளது.

சிவன் கோயில் அருகிலுள்ள மற்றொரு கல்வெட்டு நவகண்ட சிலை பற்றிய செய்தி ஒன்றைத் தருகின்றது. 'கயமூர்க்கிழவன் ஸ்ரீவேலன் சிவப்புகலள் 'என்பவன்' சூரங்குடி நாட்டு ஆதனூரைச் சார்ந்தவன் ஆவான். இவன் 'கலியுகத்தந்தாதி' தன்மச் செட்டியின் நலத்திற்காகத் தன் தலையைக் காளிக்குக் காணிக்கையாக்கியதைக் கூறுகின்றது.

## மாறனேரி

இவ்வூர் சிவகாசியிலிருந்து அச்சந்தவிழ்த்தான் செல்லும் சாலையில் சிவகாசி வட்டத்து அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர், 'கருநிலக்குடி நாட்டு மாறமங்கலத்து சுந்தரபாண்டிய நல்லூர் எனக் குறிப்பிடப்படுகின்றது. இங்குள்ள சிவன் கோயில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்டதாகும். கல்வெட்டுகளில் இறைவன் சுந்தரபாண்டிய ஈசுவரமுடைய நாயனார் எனக் குறிப்பிடப்படுகின்றார்.

சிவன்கோயில் கருவறை, அரைமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. முதலாம் சடாவர்மன் வீரபாண்டியன் கல்வெட்டு: இம்மன்னன் மூன்று மா நிலத்தினை நந்தவனம் அமைப்பதற்காக வழங்கியதைத் தெரிவிக் கின்றது. மேலும் திருமடை விளாகமாக முப்பது மா நிலத்தினை வழங்கி மடம் செயல்படுவதற்கு பள்ளியறை நாச்சியார்க்கும் பூசை நடைபெறுவதற்கும் வழிவகை செய்துள்ளான்.

இவ்வூரிலுள்ள கிணற்றுத் துலாக்கல்லில் கி. பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று காணப்படுகின்றது. அக்கல்வெட்டு 'மாறமங்கலத்தைச் சேர்ந்த கொல்லன் 'ஐயூரன் கொற்றன்' என்பவன் அக்கிணற்றிற்குச் சொந்தக்காரன் என்று கூறப்படு கின்றது. இக்கிணற்றிற்கருகில் உள்ள மண்மேட்டில் சோழர், பாண்டியர், நாயக்கர் காலத்தைச் சேர்ந்த காசுகள் சேகரிக்கப் படுள்ளன என்பதும் காணத்தக்கது.

## மானகச் சேரி (த)

இவ்வூர் திருவில்லிபுத்தூர் சிவகாசிச் சாலையில்; திருவில்லி புத்தூர் வட்டத்து மல்லி உள்வட்டத்தில் சுமார் 12 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இது 'தடங்கண்ணி மானகச்சேரி' என்று அழைக்கப்படுகின்றது. இதனைச் சுருக்கமாகக் கூறும் வகையில் 'த' மானகச்சேரி என்றழைப்பர். 'தடங்கண்ணிச் சிற்றூர்' என்பது ஈஞ்சாறு என்னும் சிற்றூரைக் குறிக்கும் பெயராகும். ஈஞ்சாற்றின் துணைக் கிராமமாக இது இருந்தமை யால் இவ்வூர் இப்பெயர் பெற்றது.

இங்குள்ள கிணற்றின் அருகில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று உள்ளது. அது அக்காலகட்டத்தில் இவ்வூர் சிறப்புற்றிருந்ததை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் குலசேகரபுரம் என்ற பெயரில் ஒரு வணிக நகரம் இருந்ததையும் இக்கல்வெட்டு தெரிவிக்கின்றது.

குலசேகரபுரம்; வெண்பில்நாடு, கருநிலக்குடிநாடு, இருஞ்சோ நாடு, ஆதி நாடு, வெண்பைக்குடி நாடு, திருமல்லி நாடு ஆகிய நாடுகளும், நகரமும் இணைந்து வீரபண்டித ஈசுவரமுடையார் கோயிலுக்குத் தேவதானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக் கின்றது. இத்தேவதானத்தில் வணிகர்களும், விவசாயிகளும் வாழ்ந்துள்ளனர் என்பதைக் கல்வெட்டு தெரிவிக்கின்றது. இக்கல் வெட்டின் கீழே ஆறு வகையான தொழிற்கருவிகள் புடைப்புச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் மேற்படி நகரத் தார்க்கும், நாட்டார்க்கும் உரிய மங்கலச் சின்னங்களாக இருந்திருக்கவேண்டும் என அறிய முடிகின்றது.

## மாஞ்சார்

இவ்வூர் திருச்சுழி வட்டத்து நரிக்குடி உள்வட்டத்தில் நரிக் குடிக்கருகில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில் இவ்வூர் 'கங்கனை இருக்கை நாட்டு மனையூர்' என்றழைக்கப்படுகின்றது. 'மனையூர்' என்பதே காலப்போக்கில் 'மாஞ்சார்' ஆயிற்று எனலாம். இப் பகுதியில் கிடைக்கும் துண்டுக் கல்வெட்டுகளைக் கொண்டு மனை யூரில் கி.பி. 13-ஆம் நூற்றாண்டுச் சிவன்கோயில் ஒன்றும், விஷ்ணு கோயில் ஒன்றும் இருந்ததை அறியமுடிகின்றது. சிவன் கோயில் இறைவன் 'அனுகூலேசுவரன்' என்றும், விஷ்ணு கோயில் இறைவன் 'விக்கிரம பாண்டிய விண்ணகர் ஆழ்வார்' என்ற பெயருடன் விளங்கினர் என்றறிய முடிகின்றது. இவ்விஷ்ணு கோயில் உத்தரமந்திரி ஒருவனால் கட்டப்பட்டது என்பதை கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது.

இதேபோன்று உத்தர மந்திரி பதவியில் இருந்தவர்கள் அறப்பணியிலும், சமுதாயப் பணியிலும் ஈடுபட்டதை முற்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவ்வூரைச் சேர்ந்த 'வேலாயுதசாமி' என்பவர் இவ்வூர் சுப்பிரமணியர் கோயிலை கட்டியதாகத் தெரிகிறது.

கி. பி. 1750 - ஆம் ஆண்டைச் சேர்ந்த செப்பேடு ஒன்று கம்மாளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும், பள்ளர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் ஆண்டொன்றுக்கு ஒரு பணம் வழங்க வேண்டும்

எனக் குறிப்பிடப்படுகின்றது. இத்தானத்தின் வாயிலாக இக் கோயில் பூசைகள் தடையறாது நடைபெற வேண்டும் என்று அச்செப்பேடு கூறுகின்றது.

## முடுக்கண்குளம்

இவ்வூர் காரியாபட்டி வட்டத்து முடுக்கன்குளம் உள் வட்டத்தில்; காரியாப்பட்டிக்கு அருகில் அமைந்துள்ளது. உள்வட்டத்தின் தலைமை இடமாக விளங்குகின்ற இவ்வூர் 'சிவபுரம்' என்றும் அழைக்கப்படுகின்றது. பிற்காலப் பாண்டியர் காலத்தைச் சேர்ந்த சிவன் கோயிலொன்று இங்குள்ளது. பல கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்பட்ட போதிலும் அவை திருப்பணியின் போது மாற்றியமைக்கப்பட்டதால் கல்வெட்டுச் செய்திகளை முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை. 'அருளாளப் பெருமாள்' என்ற பெயர் கல்வெட்டொன்றில் காணப்படுகின்றது. இதன் மூலம் இவ்வூரில் ஒரு பெருமாள் கோயிலும் இருந்திருக்கலாம் என்றறிய முடிகின்றது. இக்கோயில் கல்வெட்டுகளை வைத்துக் கொண்டு இவ்வூரின் பழமையைக் கி. பி. 13-ஆம் நூற்றாண்டு என்று கூறலாம்.

## முதுகுடி

இவ்வூர் இராசபாளையம் சோழபுரம் சாலையில்; இராச பாளையத்திலிருந்து 6 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரின் நடுவில் காணப்படுகின்ற நடுகல் கல்வெட்டொன்று. முதலாம் மாறவர்மன் குலசேகரனின் 34-ஆவது ஆட்சியாண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது. அக்கால கட்டத்தில் இவ்வூரின் மேற்கிலுள்ள கருங்குளத்தில் உடைப்பு ஏற்படுகின்றது. குடும்பர் இனத்தைச் சேர்ந்த 'பெரிய தேவப் பள்ளன்' என்பவன்

அக்குளத்தின் காவல் பொறுப்பை ஏற்றிருந்தான். அவ்வுடைப்பைத் தடுத்து; ஊரவர்களைக் காக்க முற்பட்டு இறந்து விடுகின்றான். ஊரார் அவனது வீரத்தைப் பாராட்டி நடுகல் எடுக்கின்றனர். அவனது மகளுக்கு 'உதிரப்பட்டி' நிலமாக அரை மா அளவுள்ள ($16\frac{1}{2}$ செண்ட்) நிலத்தினைக் கொடுத்துள்ளனர் என்ற செய்தியைத் தெரிவிக்கின்றது.

## மூவரை வென்றான்

இவ்வூர் திருவில்லிபுத்தூர் மதுரை சாலையில் திருவில்லி புத்தூரிலிருந்து 25 கி.மீ தொலைவில் நத்தம்பட்டி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூரின் பழமைக்குச் சான்றாக இங்கு கிடைத்துள்ள தொல்பொருட்கள் விளங்குகின்றன.

இவ்வூரின் அருகில் ஆற்றங்கரையில் நுண்கற்கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இவை மத்திய கற்கால மனிதன் வாழ்ந்த தற்கான சான்றுகளாகும். மேலும் இவ்வூரில் முதுமக்கட்டாழிகள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை பெருங்கற்கால மனிதன் இங்கு வாழ்த்தான் என்பதைத் தெரிவிக்கின்றன.

இவ்வூரில் மொட்டைப்பாறை என்ற ஒரு மலை உள்ளது. இம்மலையில்தான் குடைவரைக் கோயில் உள்ளது. அது மலைக் கொழுந்தீசுவரர் கோயில் என்றழைக்கப்படுகின்றது. இக்கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கருவறையும், முன்மண்டபத்தையும் கொண்டு விளங்குகின்றது. இம்மண்டபத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நடராசர் புடைப்புச் சிற்பங்கள் காணப் படுகின்றன.

இக்கோயிலின் முன்னால் மற்றொரு சிவன் கோயிலும், மரகதவல்லியம்மன் கோயிலும் காணப்படுகின்றன. இவை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவையாகும். மலைக்கொழுந்தீசு வரர்க்குச் செல்லும் படிக்கட்டில் முதலாம் சுந்தரபாண்டியன் கல்வெட்டு காணப்படுகின்றது. அது மாறவர்மன் சுந்தரபாண்டியன்

முடிசூட்டிக் கொண்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இம்மன்ன னுடைய முடிசூட்டு நிகழ்ச்சியைக் கல்வெட்டு கூறுவதால் இவன் மூன்று மன்னர்களை வென்றதன் நினைவாகவே இந்த ஊருக்கு மூவரை வென்றான் என்று பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும் எனக் கூறலாம்.

இங்குள்ள மற்றொரு கல்வெட்டு; குலசேகர பாண்டியன் காலத்தில் பத்து நபர்களுக்குக் காராண்மைக் காணியாக நிலம் வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கின்றது. இராணி மங்கம்மாள் ஆட்சிக்காலத்தில் வீரமல்லன் என்பவனுக்கு அவனது வீரத்தையும், வலிமையையும் பாராட்டி இனாமாக இந்த ஊர் வழங்கப்பட்ட தாக மற்றொரு கல்வெட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.

இந்த ஊர் ஜமீன்தார்களின் பொறுப்பில் இல்லாமல் நாட்டாண்மையின் பொறுப்பில் இருந்ததாகத் தெரியவருகின்றது. கன்னிமலை ஆறு இப்பகுதியை வளம் பெறச் செய்து கொண் டிருந்தது. வீரமல்லனுக்கு இந்த ஊர் வழங்கப்படுவதற்கு முன்னர்; இவ்வாற்று நீர் அனைத்தையும் நத்தம்பட்டி ஜமீன்தார் வீரமுத்துத் தேவர் பயன்படுத்திக் கொண்டிருந்தார். வீரமல்லன் இவ்வாற்று நீரைத் தம் ஊரில் தேக்கி வைக்கும் பொருட்டு ஒரு குளம் ஒன்றை உருவாக்கி ஆற்று நீரை அக்குளத்தை நோக்கித் திருப்பிவிட்டான். குளம் நிரம்பிய பின்னரே நத்தம்பட்டி கிராமத்திற்கு ஆற்று நீர் செல்வது போன்று நிலையை இது உருவாக்கியிருந்தது. இது வீரமல்லனுக்கும் நத்தம்பட்டி ஜமீனுக்குமிடையே தகராறை ஏற்படுத்தியது. நத்தம்பட்டி ஜமீன்தார் ஒரு குறிப்பிட்ட தினத்திற்குள் அந்த ஊரைப் பிடிப்பதற்காக வீரமல்லனிடம் சவால் விட்டார்.

நத்தம்பட்டி ஜமீன்தாருக்குத் துணையாக சாத்தூர் ஜமீன், தேவதானம் ஜமீன்தார்கள் வந்தனர். வீரமல்லன்; அந்த குறிப்பிட்ட தினத்தில் வெற்றி பெற்று விட்டால் அக்கிராமத்தைக் கொடுத்து விட்டு சன்யாசியாகப் போவதாக மறு சவால் விட்டான்.

முன்னேற்பாடாக இந்த ஊர்க் குளக்கரையின் கிழக்குக்கரைப் பகுதிகளில் காய்ந்த செடி கொடிகளைப் போட்டு; குறிப்பிட்ட தினத்தில் குளத்தின் கரைகளை உடைத்து விட்டான். இதனால்

மூன்று புறமும் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. காய்ந்த சருகுகளைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டான். இதனால் ஜமீன்தார் களால் இவ்வூரை நெருங்கமுடியாது போயிற்று. இம்மூன்று சமீன்தாரை வென்றதால் இவ்வூர் மூவரை வென்றான் என்றழைக்கப் பட்டது. நத்தம்பட்டி ஜமீன் தன் தோல்வியை ஒத்துக்கொண்டு தன் ஜமீனை வீரமல்லனிடம் ஒப்படைத்து என்று கூறப்படு கின்றது.

## மேட்டுப்பட்டி (ப)

இவ்வூர் பந்தல்குடியின் அருகில் அமைந்துள்ளது. இப்பகுதியில் பிற்காலப் பாண்டியர் காலத்து விஷ்ணு கோயில் ஒன்றுள்ளது. கல்வெட்டுகளில் இப்பகுதி 'வெண்பு நாட்டு நாகூர்' என்று அழைக்கப்படுகின்றது. இக்கோயில் இறைவன் 'கரியமால் அழகர்' என அழைக்கப்படுகின்றார்.

கருவறை, அரைமண்டபம், மாமண்டபம், முன்மண்டபம் என்றவமைப்புடன் கூடிய இக்கோயில் சடாவர்மன் குலசேகரன் காலத்தில் உருவாக்கப்பட்டது. கல்வெட்டில் இவ்விறைவன் மன்னன் பெயரில் 'குலசேகர விண்ணகர் ஆழ்வார்' என்று அழைக்கப்படுகின்றார்.

இங்குள்ள கல்வெட்டு; 'பாண்டிய குலபதி மூவேந்த வேளான்' என்பவன் நந்தவனப்புறமாக நில தானம் வழங்கியதைத் தெரிவிக் கின்றது. மற்றொரு கல்வெட்டு, ஊர்ச்சபையார் கூடிக் கோயில் நிலத்திற்கு வரிவிலக்கு அளித்ததைக் கூறுகின்றது. குலசேகர பாண்டியன் காலத்துத் திருமால், பூதேவி சிலைகள் உடைந்து விட்டதால் நாயக்கர் காலத்தில் உருவாக்கப்பட்ட திருமேனிகள் கருவறையில் இடம் பெற்றன. மேலும் இக்கோயில் வளாகத் திலும், குளக்கரையிலும் முருகன், வள்ளி, தெய்வயானை சிலைகள் காணப்படுகின்றன. இச்சிலைகள் இங்கு ஒரு முருகன் இருந்ததற்கான ஆதாரமாகத் திகழ்கின்றன.

## மேட்டுப்பட்டி (இரு)

இவ்வூர் இருக்கண்குடி அருகிலுள்ள மேட்டுப்பட்டியாகும். கல்த்தூண் ஒன்றில் காணப்படும் கல்வெட்டு இவ்வூரின் பழமைக்குச் சான்றாய்த் திகழ்கின்றது. அக்கல்வெட்டு முதலாம் மாறவர்மன் குலசேகரன் காலத்தில் வெட்டப்பட்டதாகும். இருக்கண்குடிக்கருகில் கிணறு ஒன்று தோண்டப்பட்டு ஊர் மக்களுக்குத் தானமாக வழங்கப்பட்டது என்று தெரிவிக்கின்றது.

சித்தநாதசுவாமி கோயிலுக்கருகில் உள்ள பாறையில் ஒரு கல்வெட்டு காணப்படுகின்றது. அக்கல்வெட்டு; விஜயரங்க சொக்கநாத நாயக்கன், வடமலையப்ப பிள்ளை ஆகியோர் நன்மைக்காக ஒரு கிராமம் தானமாக வழங்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது. இக்கல்வெட்டின் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டாகும். கல்வெட்டின் அருகில் தானம் பெறுபவர் உருவம் புடைப்புச் சிற்பமாகப் பொறிக்கப்பட்டுள்ளது.

## ரெட்டியார்பட்டி (எம்)

அருப்புக்கோட்டை முதுகுளத்தூர் சாலையில் இரண்டு கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். அருப்புக் கோட்டை வட்டம் மண்டபசாலை உள்வட்டத்தில் காணப்படும் இவ்வூர் மண்டபசாலைக்கு அருகில் உள்ளதால் எம். ரெட்டியார் பட்டி என்றழைக்கப்படுகிறது. 'எம்' என்பது மண்டபசாலை என்ற பெயரைக் குறிக்கும். திருமங்கலத்திலிருந்து ரெட்டியார்கள் அதிகம் வந்து இங்கு தங்கியதால் இப்பெயர் பெற்றது.

இங்கு பழமையான விஷ்ணு கோயில் இருந்து தற்போது முற்றிலுமாகத் திருப்பணி செய்யப்பட்டுவிட்டது. இத்துடன் காளியம்மன், மாரியம்மன், கருப்பசாமி கோயில்களும் உள்ளன

இவ்வூரில் பல இடங்களில் கல் செக்குகள் அதிகம் காணப்படுகின்றன. எண்ணெய் வணிகர்கள் பலர் இங்கு வாழ்ந்து வந்தனர் என்பதும் தெரிகின்றது.

## வத்திராயிருப்பு

இவ்வூர் திருவில்லிபுத்தூர் மதுரைச் சாலையில் கிருஷ்ணன் கோயிலிலிருந்து மேற்கில் 10 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவில்லிபுத்தூர் வட்டத்து வத்திராயிருப்பு உள்வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் மேற்குத் தொடர்ச்சி மலையின் பள்ளத்தாக்கில் காணப்படுகின்றது.

இதன் பழமைக்கு எடுத்துக்காட்டாய் காசிவிசுவநாதர் கோயில், சேது நாராயணப் பெருமாள் கோயில், முத்து மாலையம்மன் கோயில், நல்லதங்காள் கோயில், அனுமார் கோயில் ஆகியன விளங்குகின்றன. மேலும் இப்பகுதியில் கிடைக்கக்கூடிய தொல்பொருட்களும் இதனை உறுதி செய்கின்றன.

இவ்வூரை முதன் முதலில் 'வத்திரய்யர்', என்பவர் உருவாக்கியதால் 'வத்திரய்யர் இருப்பு என்றழைக்கப்பட்டு நாளடைவில் மருவி வத்திராயிருப்பு என்றாயிற்று என்று கூறுவர். மேலும் இவ்வூரின் அருகில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து ஓடிவரும் காட்டாற்று வெள்ளத்தைப் 'பிளவக்கல் அணை'யில் சேர்த்து வைத்து; என்றும் வற்றாத இருப்பாக நீர் நிறைந்திருந்தமையால் 'வற்றாத இருப்பே' நாளடைவில் 'வத்திராயிருப்பு' ஆயிற்று என்றும் கூறிவருகின்றனர்.

இங்குள்ள நல்லதங்காள் கோயில் புகழ் பெற்று விளங்குகின்றது. நல்லதங்காள் தன் ஏழு குழந்தைகளுடன் மூழ்கியதாகக் கூறப்படும் கிணறு இங்குள்ளது. இதனருகிலேயே நல்லதங்காளுக்கெனக் கோயில் எடுக்கப்பட்டுள்ளது. இக்கோயிலைச் சுற்றித் தொல்லியல் தடையங்கள் நிரம்பக் கிடைத்துள்ளன. கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் முதுமக்கள் தாழிகளின்

உடைந்த பகுதிகள், சங்ககாலச் செங்கற்கள் முதலியன இவ்வூரின் வரலாற்றைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு எடுத்துச் செல்வ தாக அமைகின்றன. இத்துடன் இரும்பு உருக்கும் கழிவுகளும் காணப்படுகின்றன.

இங்கு காணப்படும் காசிவிசுவநாதர் கோயில் பிற்காலப் பாண்டியர்களின் கட்டடக் கலைப்பாணியுடன் திகழ்கின்றது. தென்காசிப் பாண்டியர் காலத்திய திருப்பணியும் இதற்குப் புகழ் சேர்க்கின்றது. இங்குள்ள இரண்டு கல்வெட்டுகள் தென் காசிப் பாண்டிய மன்னன் காலத்தியவை. இங்குள்ள கல்வெட்டுகள் இக்கோயிலுக்கு வழங்கப்பட்ட நிலதானத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மேலும் 'மச்சாழ்வி' என்ற உறவு முறைப் பெயர் வழக்கும் இதில் காணப்படுகின்றது. தென்காசிக் 'கோயிலில் அண்ணாள்வி' என்று வருவது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. மேலும் கே. எஸ். கிருஷ்ணன் என்ற அறிவியல் அறிஞரைப் பெற்ற பெருமைமிக்கது இவ்வூர்.

## வரலொட்டி

இவ்வூர் விருதுநகர் காரியாப்பட்டி சாலையில் காரியாபட்டி வட்டத்து மல்லாங்கிணறு உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு கல்வெட்டு ஒன்றைத் தவிர வேறு தொன்மையான சான்றுகள் ஏதுமில்லை. மேற்படிக் கல்வெட்டு இவ்வூரிலுள்ள முனீசுவரன் கோயில் அருகிலுள்ளது. அக்கல்வெட்டு கிணறு ஒன்று வெட்டி வைக்கப்பட்ட செய்தியைத் தருகின்றது. இதே போன்று கிணறு வெட்டி வைக்கப்பட்ட செய்தியை மலையடிக்குறிச்சி கிணற்றி னருகில் உள்ள கல்வெட்டிலும் காண முடிகின்றது. அக்கிணறு அகப்பைக் கிணறு என்றழைக்கப்படுகின்றது. கடுங்கோடை யுள்ளும் வற்றாது தண்ணீர் தருகின்றது.

வரலொட்டி கிணற்றைத் தோற்றுவித்தவன் 'முநீர் கிழவன் சொக்கன் எனக்கு நல்ல பெருமாள்' என்பவன் ஆவான். இவன் இவ்வரலொட்டியில் கிணறு வெட்டி இவ்வூரிலிருந்த வரட்சியை

ஓட்டியதால் இதற்கு 'வரல் ஓட்டி' எனப் பெயர் வழங்கப்பட்டது. அப்பெயரே காலப்போக்கில் வரலொட்டி ஆயிற்று என்பர். 'எனக்கு நல்ல பெருமாள்' என்று கூறப்படும் இவன் திருநெல்வேலி மாவட்டத்துச் சிங்கிகுளம் ஜினகிரிமலைக் கல்வெட்டில் குறிப்பிடப் படுகின்றான்.

## வாகைக்குளம் (ப)

அருப்புக்கோட்டை சாயல்குடிச் சாலையில்; அருப்புக்கோட்டை வட்டத்து பரளச்சி உள்வட்டத்தில் அமைந்துள்ளது இவ்வூர். கல்வெட்டுகளில் இவ்வூர் 'அளற்றூர் நாட்டுப் பல்லெரிச்சிலான பல்லவகுலாந்தக நல்லூர்' எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வூரிலுள்ள கிணறு ஒன்று; விஷ்ணு கோயிலைச் சேர்ந்த கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. அக்கற்களில் துண்டுக் கல்வெட்டுகள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று, 'பல்லவ குலாந்தகத் திருமேற் கோயில்' என்று ஒரு பெருமாள் கோயில் பெயர் காணப்படுகின்றது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டுகளும் இக்கிணற்றுக் கற்களில் காணப்படுகின்றன. இந்நூற்றாண்டில் இப்பகுதியில் 'பல்லவ குலாந்தகத் திருமேற் கோயில்' என்ற பெயரில் ஒரு விஷ்ணு கோயில் இருந்ததை இக்கல்வெட்டு உறுதி செய்கின்றது.

இங்குள்ள விளை நிலம் ஒன்றின் அருகில் மூதேவி சிலை ஒன்று காணப்படுகின்றது. இச்சிலையின் இருபுறமும் மாந்தன், மாந்தி உருவங்களும், காக்கைக் கொடியும் காணப்படுகின்றன. இது அம்பை வட்டத்து ஊர்க்காடு மூதேவி சிலையுடன் ஒத்துக் காணப் படுகின்றது.

பரளச்சிப் பெருங்குளத்திலுள்ள மதகுத் தூண்கள் அழகிய பூவேலைப்பாட்டுடன் வடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு தூணில் கல்வெட்டு காணப்படுகின்றது. அக்கல்வெட்டு கி. பி. 15-ஆம் நூற்றாண்டினது. அதில் இரட்டை மீன் உருவங்களும்,

மகரங்களின் உருவங்களும் புடைப்புச் சிற்பங்களாக அழகுடன் செதுக்கப்பட்டுள்ளன. இக்கல்மதகானது 'ஆளுதிச்சப் பிள்ளை' என்பவரால் செய்து வைக்கப்பட்டது என்று தெரிகிறது.

இவ்வூரின் சிவன்கோயில் மற்றொரு தொன்மைச் சின்னமாகத் திகழ்கின்றது. இறைவன் பாதாள ஈசுவரர் என்றழைக்கப் படுகின்றார். கருவறை, அரைமண்டபமும் எஞ்சியுள்ளன. சிகரப் பகுதி முற்றிலுமாகக் காணப்படவில்லை. மாறவர்மன் சுந்தர பாண்டியன், முதலாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன் ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் சுவர்ப்பகுதியில் காணப்படுகின்றன. அவை இக்கோயிலுக்குத் தானம் வழங்கிய செய்தியைத் தருகின்றன.

அம்மனுக்கென்று இக்கோயில் வளாகத்திலேயே தனிக்கோயில் அமைக்கப்பட்டுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கலையம்சத்துடன் கூடிய விநாயகர், சண்டிகேசுவரர், சிலைகள் இக்கோயில் வளாகத்தில் தொன்மைத் தடையங்களாகக் காணப் படுகின்றன.

## விருதுநகர்

இவ்வூர் விருதுநகர் வட்டத்து அதே உள்வட்டத்தில் மதுரை திருநெல்வேலி நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் இவ்வூர் பல வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டது. பழங்காலந்தொட்டு 20-ஆம் நூற்றாண்டு வரையான வரலாற்றுச் செய்திகளையும் தருகின்றது.

இவ்வூர் தொடக்க காலத்தில் விருதுக்கால்பட்டி என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு அழைக்கப்பட்டதற்கான கதை ஒன்று மக்களிடையே நிலவி வருகின்றது. பல வருடங்களுக்கு முன் பல விருதுக் கொடிகளைப் பெற்ற மாவீரன் ஒருவன் இவ்வூர் மக்களிடம் வந்து தன்னை வெல்வார் உண்டோ என்று

சவால் விட்டான். இவ்வூர் மக்கள் அவன் சவாலை ஏற்றுக் கொண்டு அவனோடு போரிட்டு அழித்து அவனது விருதுக் கொடிகளைக் கைப்பற்றினர். அதனால் இவ்வூர் 'விருதுக்கால் பட்டி' என்றழைக்கப்பட்டு நாளடைவில் 'விருதுப்பட்டி' என்ற வழங்கலாயிற்று.

இவ்வூரின் பழமையைப் பெருங்கற்காலத் தடையங்களைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகின்றது. முதுமக்கள் தாழிகள் பல இவ்வூரில் தோண்டி எடுக்கப்பட்டுள்ளன. இதனால் இங்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மக்கள் வாழ்ந்திருந்தனர் என்பது தெரிகிறது.

மேலும் இந்த ஊர் சிவன் கோயிலும் பழமைத் தொடர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு ஒன்று, சண்டிகேசுவரர் எழுந்தருளியிருக்கும் தனிக்கோயிலின் சுவர்ப் பகுதியில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டு, அரசு அதிகாரிகளான; புங்கநாட்டு விழுப்பதரையன், மல்லி நாட்டுச் 'சோரன் உய்ய நின்றாடுவானான குருகுலத்தரையன்' ஆகியோர் செய்த பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. சிவன் கோயில் முற்றிலுமாகத் திருப்பணி செய்யப்பட்டு விட்டதால் கல்வெட்டுகள் காணப்படவில்லை. அதனால் கல்வெட்டுகள் மூலம் இந்த ஊர் எவ்வாறு அழைக்கப் பட்டது என்பதை அறியமுடியாது போயிற்று.

விருதுப்பட்டி என்றழைக்கப்பட்ட இந்த ஊர் 1923-ஆம் ஆண்டில் தான் 'விருதுநகர்' என பெயர் மாற்றம் பெற்றது எனலாம். இந்த ஊரிலுள்ள மாரியம்மன் கோயில் புகழ் பெற்றதாகும். பங்குனி மாதத்தில் நடைபெறும் இக்கோயில், திருவிழாவில் 'அலகு குத்துதல்' 'பூக்குழி இறங்குதல்' (தீ மிதித்தல்) போன்ற திருவிழாச் சடங்குகள் புகழ்பெற்றன. வெயில் உகந்த அம்மன் கோயிலும் இத்தகு சிறப்பைக் கொண்ட ஒரு கோயிலாகும்.

## விழுப்பனூர்

இவ்வூர் திருவில்லிபுத்தூரிலிருந்து பூவானி வழியாக சிவகாசி செல்லும் சாலையில் உள்ளது. இது திருவில்லிபுத்தூர் வட்டத்து மல்லி உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டுகளில குறிக்கப் படும், 'மல்லி நாட்டு தென்னவன் பொன்பற்றி 'விழுப்பராய நல்லூர்' என்ற பெயரே நாளடைவில விழுப்பனூர் ஆயிற்று.

இங்குள்ள பெருமாள் கோயில் இந்த ஊரின் பழமைக்குச் சான்றாய் விளங்கி நிற்கின்றது. கோயில் இறைவன் சுந்தரத தோள் விண்ணகர் ஆழ்வார்' என்று அழைக்கப்பட்டார் என்று தெரிகிறது.

இப்பெருமாள் கோயில் கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற முறையான அமைப்புடன் காணப்படுகின்றது. இங்குள்ள கல்வெட்டுகளில் பழமையானது இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டாகும். எனவே இம்மன்னன் காலத் திலேயே இக்கோயில் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனலாம்.

'தச்சனூரைச் சேர்ந்த அருளாள சேவுக தேவனான அம்மன் வாணாதிராயன்' என்பவன் அழகப் பெருமாளுக்கும், பிராட்டி யார்க்கும், சிங்கப் பெருமாளுக்கும் சிறப்பு வழிபாடுகள் தொடங்கி வைத்து அதற்கான தானங்களையும் தந்துள்வான் என்பதை ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது. 'விளத்தூர் அழகன்' என்பவன் தேவியின் செப்புத் திருமேனியைக் கோயிலுக்கு வழங்கிக் கோயில் திருவிழாக்களின் செலவிற்காகப் பூவாணி என்ற சிற்றாரில், நிலம் தானமாக வழங்கியுள்ளான். இதே கால கட்டத்தில் 'அழகப் பெருமாள்' எனும் இவ்விறைவனுடைய செப்புத் திருமேனி மற்றொருவனால் எழுந்தருளிவிக்கப்பட்டது என்ற செய்தியையும் அறியமுடிகின்றது.

இங்குள்ள கிணற்றின் துலாக்கல்லில் சுந்தர பாண்டியனின் 13-ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு காணப்படுகின்றது. மலை

மண்டலத்தைதச் சேர்ந்த ஒருவன் இக்கிணைற்றினை உருவாக்கி யுள்ளான். அவனே இக்கிணற்றுக்குத் தேவையான துலாக்கல், படிக்கட்டுகள், தொட்டி முதலியவற்றை உருவாக்கி வழங்கி யுள்ளான்.

## வீரசோழம்

இவ்வூர் திருச்சுழி வட்டத்து வீரசோழம் உள்வட்டத்து; அருப்புக்கோட்டை மானாமதுரை சாலையில் அமைந்துள்ளது. இவ்வூரின் அருகில் நரிக்குடி என்ற ஊர் உள்ளது. சோழ மன்னன் முதலாம் இராசராசன் இந்த ஊரில் வீரத்துடன் போரிட்டு பாண்டியர்களைத் தோற்கடித்ததால் இவ்வூருக்கு 'வீரசோழம்' என பெயர் ஏற்பட்டது என்று கூறப்படுகின்றது.

சோழமன்னர்களுடைய அரண்மனை இங்கிருந்ததாகக் கூறப் படுகின்றது. அதனடிப்படையில் அரண்மனை மேட்டுப்பகுதியில் ஆய்வு செய்தபோது எச்சங்கள் காணப்படுகின்றன. சோழனுடைய தங்குமிடங்களில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இங்கு அதிகமான தொல்பொருள் தடையங்கள் காணப்படுகின்றன.

இவ்வூரில் 'கைலாசநாதர்' என்றழைக்கப்படுகின்ற சிவன் கோயில் ஒன்றும், பழைய விஷ்ணு கோயில் ஒன்றுமாக இரண்டு கோயில்கள் உள்ளன. சிவன் கோயில் கௌதம ரிஷி என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது என்றும், விக்கிரம பாண்டிய மன்னனால் பராமரிக்கப்பட்டது, என்றும் ஊரவர் கூறி வருகின்றனர். திருப்பணிக்காட்பட்ட இக்கோயில் கல்வெட்டுகளை அறிந்து கொள்ள இயலவில்லை. விஷ்ணு கோயிலில் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்வூரில் வேம்பத்தூரைச் சார்ந்த கவிராஜ பண்டிதர் என்ற பெரும் புலவர் வாழ்ந்ததாகவும் கூறப்படுகின்றது.

## வெங்கா நல்லூர்

இவ்வூர் இராசபாளையம் வட்டத்து சோழபுரம் உள்வட்டத்து, இராசபாளையம் - தென்காசி நெடுஞ்சாலையில் சுமார் 6 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தற்போது வெங்காநல்லூர் என்றழைக்கப்படுகின்ற இவ்வூர் கல்வெட்டுகளில் 'சேர நாராயண மங்கலம்' என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள சிவன் கோயில் இந்த ஊரின் பழமையை எடுத்துக்காட்டுகின்றது.

கருவறை, அரைமண்டபம், மாமண்டபம் என்ற முறையான கட்டடக்கலை அமைப்புடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இதில் இடைக்காலப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளும், தென்காசிப் பாண்டியர் காலக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் கல்வெட்டொன்று, வெள்ளாண்வகை நிலத்தை பிரம்மதேய நிலமாக மாற்றிக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது. அந்நிலத்திற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட செய்தியினையும் மற்றொரு கல்வெட்டு வெளிப் படுத்துகின்றது, சண்டிகேசுவரர் கோயில் கல்வெட்டு; 'ஸ்ரீ இராம பட்டன்' என்பவன் தன் தந்தை பெயரில் 'சேர நாராயண விண்ணகரம்' என்ற கோயிலை எழுப்பினான். இக்கோயில் வழிபாட்டிற்காகவும் தளிக்காகவும் நிலங்கள் தானமாக வழங்கப் பட்டது.

இக்கல்வெட்டுகளில் 'வீரபாண்டியன் நாழி' 'சுந்தரபாண்டியன் கோல்' என்ற அளவைக் கருவிகள் குறிப்பிடப்படுகின்றன. இதன் மூலம் அக்கால கட்டத்தில் நிலவிய மன்னர்களின் ஆட்சியில் வழக்கிலிருந்த அளவு கருவிகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

திருநெல்வேலிப் பெருமாள் கல்வெட்டொன்று சிவன்கோயில் அருகில் காணப்படுகின்றது. அது சின்ன சேவுகப் பெருமாள் பிராட்டிக்கு அபிஷேகம் நடத்துவதற்காக நிலத்தானம் வழங்கப் பட்ட செய்தியினைத் தெரிவிக்கின்றது.

## வெம்பக் கோட்டை

இவ்வூர் சிவகாசியிலிருந்து 18 கி. மீ. தொலைவில் வைப்பாற்றின் வடகரையில் அமைந்துள்ளது. சிவகாசி வட்டத்து, சல்வார்பட்டி உள்வட்டத்திலுள்ள இவ்வூரின் பெயர்க் காரணம் பற்றி பல கதைகள் உள்ளன, அவை;

இவ்வூரை ஆண்ட மன்னன் தனக்கு ஒரு கோட்டை கட்ட எண்ணினான். அப்போது வெண்புள் (வெண்மை நிறப் பறவை) ஒன்று பறந்து வந்து ஒரு இடத்தில் வட்டமடித்துக் காட்டியதாம். அதன்படி அங்கு கோட்டை கட்டினான் மன்னன். வெண்புள் கோட்டை என்றழைக்கப்பட்டு அதுவே நாளடைவில் வெம்பக் கோட்டையாயிற்று என்று கூறுகின்றனர் மக்கள்.

மேலும் இங்கு ஆட்சி செய்த மன்னர்களைக்கண்டு நாயக்க மன்னன் ஒருவன் வெகுண்டு போர் செய்து இங்குள்ள கோட்டையை அழித்ததால் 'வெம்பக் கோட்டை' என்று பெயர் வந்தது என்றும் மக்கள் செவிவழிச் செய்தியாகக் கூறிவருகின்றனர்.

கல்வெட்டில் 'வெண்பைக்குடி' என்றிருந்து பின்னர் வெண்பைக் கோட்டை என்று மாறிப் பின்னர் வெம்பைக் கோட்டை ஆயிற்று என்றறிய முடிகின்றது. இது பிற்காலப் பாண்டியர் காலத்தில் ஒரு நாட்டின் தலைமை இடமாக இருந்துள்ளது என்பதை கல்வெட்டுகளின்மூலம் அறியலாம்.

இவ்வூரின் பழமை 10,000 ஆண்டுக்கு முந்தையது என்பதை இங்கு கிடைத்துள்ள நுண்கற்கருவிகளைக் கொண்டு கணிக்கலாம். மேலும் இவ்வூரிலுள்ள மேட்டுப் பகுதியில் முதுமக்கட்டாழிகள் காணப்படுகின்றன. கருப்பு சிவப்பு வண்ணப் பானை ஓடுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் கல்லாக மாறிய யானையின் கடைவாய்ப் பல் ஒன்று கண்டறியப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

இங்குள்ள சிவன் கோயில் சொக்கநாத சுவாமி கோயில் என்றழைக்கப்படுகின்றது. கல்வெட்டுகளில் இக்கோயில்; விக்கிரம பாண்டீசுவரர் கோயில் என்றழைக்கப்படுகின்றது. பிற்காலப் பாண்டியர் காலத்தில் கட்டப்பட்ட இக்கோயில் நாயக்கர் காலத்தில் முழுத் திருப்பணி செய்யப்பட்டது.

இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டுச் செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. அது கம்பளத்து நாயக்க இனத்தவர்கள் எடுத்த தீர்மானத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. ஆச்சிரமக் கவுண்டர் என்பவர் அவ்வினத்திற்குத் தலைவனாக மதுரை வீரப்ப நாயக்கர், மற்றும் நெல்லை அதிவீரராம பாண்டியன் ஆகியோரின் மறைமுக ஆதரவுடன் தலைவனாகப் பொறுப்பேற்றவுடன் கவுண்டர் சமூகத்தாரிடம் வரிவசூலிக்கின்றான். அவ்வாறு வரி வசூலித்து வருகின்றபோது வெம்பக்கோட்டை புல்லக் கவுண்டர் என்பவர் அவரைத் தடுத்து நிறுத்தி நீ இங்கு வரி வசூலிக்கக்கூடாது என்று கூறி அவன் வழிச் செலவிற்காக 1500 தங்க நாணயங்கள் கொடுத்துத் திருப்பி விடுகின்றார். அச்சமூகத்து மக்கள்; தங்கள் இனத்திற்காக புல்லுக்கவுண்டருக்கு ஏற்பட்ட நட்டத்தை ஈடு கட்டுவது என்று தீர்மானித்துத் தம் இனத்தவரிடம் நன்கொடை வசூலிக்கத் தொடங்கினர்' என்ற செய்தியைக் கூறுகின்றது.

## வெள்ளூர்

இவ்வூர் சிவகாசி - விருதுநகர் சாலையில்; ஆமாத்தூர் மேற்கில், விருதுநகர் வட்டத்து அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. கல்வெட்டில் இவ்வூர் 'கருநிலக்குடி நாட்டு வெள்ளூர்' எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வூரில் காணப்படும் கல்வெட்டுகள் இதன் பழமையை எடுத்துக்காட்டுவதாய் அமைகின்றன. குளக் கரையில் உள்ள கல்வெட்டு ஒன்று; திருச்சிற்றம்பலமுடையான் என்பவன் சிவன் கோயில் அபிஷேகத்திற்காகக் கிணறு ஒன்றை உருவாக்கிக் கொடுத்ததைத் தெரிவிக்கின்றது.

அக்கிணற்றுக் கல்வெட்டு; 'திருமஞ்சனக்கிணறு' எனக் குறிப்பிடுகின்றது. இக்கல்வெட்டின் வாயிலாக பிற்காலப் பாண்டியர் காலத்தில் சிவன் கோயிலொன்று இங்கிருந்ததாகத் தெரிகின்றது. மற்றொரு கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தியது. அக்கல்வெட்டு பசுக்கள் நீரருந்து வதற்காகக் கிணறு ஒன்று வெட்டிக்கொடுத்த செய்தியைத் தெரிவிக்கின்றது. அக்கல்வெட்டு 'ஆ மண்ணும் கிணறு' என்று குறிப்பிடுகின்றது.

கருநிலக்குடிக் கிழவன் 'சாந்தன் கொற்றன்' என்பவன் இக்கிணறுகளை உருவாக்கிக் கொடுத்ததாகத் தெரிகிறது. இக்கிணறுகள் 'செங்குடி நாட்டு முனை கலக்கிகள்' என்பவர்களின் நல்வாழ்விற்காக வெட்டுவிக்கப் பட்டதாகக் கல்வெட்டு தெரிவிக் கின்றது. இந்த ஊரில் 'ஆதிண்டுக்குற்றி' என்றழைக்கப்படும் 'தொறுக்கல்' ஒன்றுள்ளது. இது மிருகங்கள், குறிப்பாக மேய்ச்சலுக்குச் செல்லும் ஆநிரைகள் தங்கள் உடலில் ஏற்படும் தினவைத் தீர்க்க நடப்பட்ட கற்களாகும். இதுபோன்ற கற்கள் பாண்டிய நாட்டின் பல பகுதிகளில் காணப்படுகின்றன.

## வேப்பிலைப்பட்டி

இந்த ஊர் சாத்தூர் வட்டத்து அதே உள்வட்டத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள கங்கையம்மன் கோயிலுக்கருகிலுள்ள கல்வெட்டு இந்த ஊரின் பழமையையும் சமுதாயப்பணி பற்றியும் தெரிவிக்கின்றது.

இக்கல்வெட்டு ஸ்ரீவல்லப பாண்டியனின் மூன்றாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டாகும். இதில் இருஞ்சோ நாட்டு ஊருணி அரையன் மதுராந்தகன் என்பவன் கட்டிய அணையைப்பற்றித் தெரிவிக்கின்றது. மேலும் இவன் பெயர் ஊருணி அரையன் என்று இருப்பதால் இவன் நீர் நிலைகளைப் பார்வையிடும் உயர் அதிகாரி யாக இருந்தவன் என்று அறியமுடிகிறது. இதேபோன்று இவனது முன்னோர்களும் இருந்து வந்தனர் என்பதும் இக்கல்வெட்டின்மூலம் அறிந்துகொள்ள ஏதுவாகவுள்ளது.

# பிற்சேர்க்கை

| வரிசை எண் (1) | தற்போது ஊர்ப் பெயர்கள் (2) | கல்வெட்டில் ஊர்ப் பெயர்கள் (3) | கல்வெட்டில் நாட்டுப் பிரிவுகள் (4) |
|---|---|---|---|
| 1 | அர்ச்சுணாபுரம் | சேந்தனேரி | — |
| 2 | அருப்புக்கோட்டை | திருநல்லூர்<br>செங்காட்டிருக்கை இடத்து வழி | வெண்புநாடு |
| 3 | ஆவியூர் | ஆவியூர் | வயலூர் நாடு |
| 4 | இருக்கண்குடி | இருப்பைக்குடி, இலுப்பைக்குடி | இருஞ்சோ நாடு |
| 5 | ஈஞ்சார் | தடங்கண்ணிச் சிற்றூர் | மல்லிநாடு |
| 6 | எதிர்க்கோட்டை | கூத்தன்குடி<br>கூத்தன்குடியான உணைய மார்த்தாண்டபுரம் | வெண்புக்குடி நாடு |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 7 | கல்லுமடை | திருப்பழையூர், பூலாங்குளம் | — |
| 8 | குண்டலக்குத்தூர் | கூடர்குடி, கூடர்குடி நகர் | இராசராசப் பாண்டி நாட்டு, முடிகொண்ட சோழ வள நாட்டு, இருஞ்சோழ நாட்டு கூடர்குடி |
| 9 | குறண்டி | குறண்டி | வெண்புநாடு |
| 10 | கொல்லங்கொண்டான் | சிவகாம சுந்தரிச் சதுர்வேதி மங்கலம் | — |
| 11 | கோலவார்பட்டி | கூடார்குடியான கோலவார்பட்டி | இருஞ்சோ நாடு |
| 12 | கோவிலாங்குளம் | கும்பனூர் | — |
| 13 | சாத்தூர் | சாத்தனூர் | இருஞ்சோ நாடு |
| 14 | சிவகாசி | சிவன் காட்சி | — |
| 15 | சிறுகுளம் | ஆலங்குடி | — |
| 16 | செங்குன்றாபுரம் | செங்குடி, சங்கநாதபுரம், செங்கண் மாநகரம், அபிமான மேரு புரம் | — |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 17 | செட்டிக்குறிச்சி | நல்லூர், தென்துவழிபதி, நாகப்பட்டினம் | — |
| 18 | சேத்தூர் | செம்மறமான குலசேகரபுரம் | — |
| 19 | சோழபுரம் | உத்தமச்சோழ சதுர்வேதிமங்கலம் | ஆண்மர் நாடு |
| 20 | திருச்சுழி | திருச்சுழியல் | பருத்திக்குடி நாடு |
| 21 | திருத்தங்கல் | திருத்தங்கால், திருத்தங்கல் | — |
| 22 | திருவில்லிபுத்தூர் | திருவில்லிபுத்தூர் | மல்லிநாடு |
| 23 | தொப்பலாக்கரை | குளத்தூர், ஜனநாதநல்லூர் | அளற்றூர் நாடு |
| 24 | நக்கனேரி | ஸ்ரீதேவியம்மா சதுர்வேதிமங்கலம் | ஆண்மர் நாடு |
| 25 | நெடுங்கரைப்பட்டி | நாகூர், நென்மேனி, நெல்மலி மாநகர், நென்மலிநாடு | வெண்புநாடு நென்மலி நாடு |
| 26 | பாலவநத்தம் | காஞ்சி, சென்னெல்குடி, சென்னெல்குடியான சிவபாதசேகர நல்லூர் | புங்கநாடு |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 27 | புதுப்பாளையம் | கருங்குளமான சதவாசகநல்லூர் | வெண்பைக்குடிநாடு |
| 28 | மங்கலம் | குலசேகரச் சதுர்வேதிமங்கலம் | மல்லிநாடு |
| 29 | மல்லி | மல்லி | திருமல்லிநாடு |
| 30 | மாறனேரி | மாறமங்கலத்துச் சுந்தரபாண்டிய நல்லூர் | கருநிலக்குடி நாடு |
| 31 | மானூர் | மனையூர் | கங்கனை இருக்கை நாடு |
| 32 | மேட்டுப்பட்டி | நாகூர் | வெண்பு நாடு |
| 33 | வாகைக் குளம் (ப) | பள்ளெரிச்சிலான பல்லவ குலாந்தக நல்லூர் | அளற்றூர் நாடு |
| 34 | விழுப்பனூர் | தென்னவன் பொன்பற்றி விழுப்பறைய நல்லூர் | மல்லி நாடு |
| 35 | வெங்கா நல்லூர் | சேர நாராயண மங்கலம் | — |
| 36 | வெம்பக்கோட்டை | வெம்பக் கோட்டை | வெண்பைக்குடி நாடு |
| 37 | வெள்ளூர் | வெள்ளூர் | கருநிலக்குடி நாடு |

# பானர்மேன் செப்பேடு

1. சூளாகலிக வுல அட்டோபர் மீ உலெ சகாத்தம் சூளாஉலிக க்கு மேல் செல்லா நின்ற சித்தார்த்தி வுல அற்பசி மீ

2) எஎ திருநெல்வேலிச் சீமையுனே சேர்ந்த பாளை யப்பட்டுச் சீமைகளிலே யிருக்கப்பட்ட பாளையக் காரர் சகலவித குடியா

3) ன பேர்களுக்கும் தெரியும்படிக்கு விளம்பரம் பண்ணி விக்கிறது யென்ன வென்றால் மேசர் பேனர்மேன் துரையவர்கள் கு

4) ம்பினியாரிடத்திலே பெற்ற உத்தரவினாலே தற்காலத்திலே கும்பினியாரவர்கள் திருநெல்வேலிச் சீமைகளிலே பாளையஞ்சேகரிக்

5) க அதத்தியம் உண்டானதும் பாஞ்சாலங்குறிச்சி யா னேழாயிரம் பண்ணையான் நாகலாபுரத்தான் கோலார் பட்டியான் காடல்குடி குளத்தூரானி வர்க ளனவரும்

6) அங்கு தப்பி துர்மார்க்க நடத்தைகளாக நடந்ததி னாலே இவர்களுடைய பாளையப்பட்டு

7) க்களைக் கட்டிக் கொள்ள நிமித்தியம் உண்டானதும் பாஞ்சாலங்குறிச்சிக் கட்ட பொம்ம னாயக்கன் அவனுடைய தானாப

8) தி சிவசுப்பிரமணியப் பிள்ளை நாகலாபுரத்துப் பாளையக்காரனுக்குத் தமையனாகவும் காரியஸ்த னாகவுமிருந்த சவுந்தர பாண்

9) டிய னாயக்க னிவர்களையும் ஸிரச்சேதமாக ஆக்கினை செய்ததும் மேஸர் பானர்மேன் துரையவர்கள் நாகலாபுரம் யேமாயி

10) ரம் பண்ணைப் பாளையக்காரரையு மின்னஞ் சிறிது முக்கியமா யிருக்கப்பட்ட மனுடர்களையும் அவரவர் பாளையப்பட்டுகளை நீக்கி

11) விச்சுச் சென்னப் பட்டணத்துக்கு அனுப்பி விக்கும் படி நிமித்தியம் உண்டானதும் பாளையப்பட்டுக் களிலேயுள்ள கோட்டை

12) களை யெல்லாமிடித்து அதிலுள்ள சேர்வைக்காரர் சேவகர் குடியான பேர்கள் கையிலுள்ள ஆயுதங் களையும் வாங்கிக் கொ

13) ள்ள நிமித்தியம் உண்டானது மித்தியாதி காரியங்க ளெல்லாமிதற்கு முன்வகை விபரமாக விளம்பரமாக விளம்பரப்படுத்தி

14) ய விளம்பரங்களினாலே சகலமான பேர்களுக்கும் லோகப் பிரசித்தமாய்த் தெரியப்பட்டிருக்கு மே யின்னங்கீழே எழுதப்

15) பட்ட காரிய குணங்களை யெல்லாஞ் சகலமான பேர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டியது மேசர் பானர் மேன் துரையவர்க

16) ளுக்கு நிமித்தியமாய்த் தோணி விளம்பரம் பண்ணி விக்கிறது யென்ன மென்றால் யினிமேல்பட்டு யாதா மொரு பாளைய கா

17) ரன் மப்படி கோட்டை கொத்தள மூடையங்கள் போட்டாலும் பீரங்கி ரெக்குலாசர்கோபி மற்ற துகள் வைத்திருந்தாலு மி

18) த்யாதிகளை சம்பாதித்தாலுமவர்கள் கும்பினியாரு டைய ஆதரவுகளையு மிழந்து அவர்களுடைய பாளையப் பட்டுகளையும் கும்

19) பினியார் கட்டிக் கொண்டு அந்தப் பாளையக் காரனையும் கும்பினியாருக்குத் தோனின படி தெனடிப்பார்கள் பாளையப்பட்டு

20) களிலுள்ள சேர்வைக் காரர் சேவுகர் காவல்க் காரர் குடியான பேர்களிந்தவித மனுடர்களில் யாதா மொரு மனுடர்களா

21) னாலும் துப்பாக்கியாகிய கல்வெடி திரிவெடி யீட்டி வல்லமங்கள் பிடித்த பேர்களைக் கண்டாலு மிது களை யொளித்து

22) வைத்திருந்த பேர்களைக் கண்டாலு மவர்களையு ஸிரச் சேதம் பண்ணுவார்களந்தப் பாளையக்கா றவர்களுடைய பா

23) ளையப்பட்டுக் குடியான பேர்களுடைய நடத்தை களுக்கு அந்தந்த பாளையக் காரர் தாமே உத்தர வாதம் பண்ண வேணும்

24) அதல்லாமலும் யாதாமொரு பாளையக் காரனுடைய சனங்க ளாயுதபாணிகளாய் யெந்தச் சீமைகளிலே யாகிலு சவா

25) லியங்களும் பெல பந்தங்களும் செய்யிரதைக் கண்டா லந்தச் சனங்களுக்கு உயிர்ச் சேத மாகிய தெண்ட னையு ம

26) ளிக்கிறது மல்லாம லந்தச் சனங்களுடைய பாளையப் பட்டுப் பாளையக் காரனுடைய சீமை களையும் கட்டிக் கொண்டு அ

27) ந்தப் பாளையக் காரனைக் கும்பினி யாருக்குத் தோனின தெண்டனையும் நடப்பிவிப்பார்களின்ன மறிய வேண்டிய தென்

28) ன மென்றால் மேசர் பானர்மேன் துரையவர்கள் பெற்ற உத்தரவுக்காக நடத்திவிச்ச காரியங்களை யும் சீமைக்கு ச

28) வுக்கிய மாகும் படியாய் மேலெழுதி யிருக்கப் பட்ட சட்டங்களையும் சகலவித சனங்களுக்கு யிட்போ தைக்கு மினி

30) மே லென்றென்றைக்கும் அறிந்து மனத்திலே வைக்க
வேண்டியது மிகவும் யுத்தமாயும் அகத்தியமாயு
மிருக்கப்பட்ட

31) தானப் படியினாலே யிந்த விளம்பரத்தை யொரு
செம்புத் தகட்டிலே எழுதி அந்தந்த பாளையப்
பட்டுத் தலைக் கி

32) ராமங்களில்ப் பிறபல மாயிருக்கப்பட்ட யிடங்களிலே
அடிக்கும்படி யாய் உத்தராவுரச்சது* அது அறியவும்
இந்த

33) ப் படிக்கு மேசர் [*ே]பனர்மேன் துரையவர்கள்.

**T.A. Bannerman**
**Major**

---

* உத்தரவாச்சுது — என்று இருத்தல் வேண்டும்

# வெண்பக்கோட்டை செப்பேடு

## பக்கம் 1

1) பிறசோற்பதி வல ஆனி ய உநஉ வெண்பக்கோட்டைப்
புல்லக்கவுண்டருக்குச் சாதியார் அனைவரு

2) ங்கூடி ஒப்புமுறிப் பட்டையமெழுதிக் குடுத்தோம்
குண்டாத்துக்குத் தெக்கு இராமேசுரத்

3) துக்கு மே(ற்)குத் தாம்பிற வெனிக்கு வடக்குத்
தென்காசிக்குக் கிளக்கு யிந்த நாங்கெ

4) ல்லைக்குள்ப்பட்ட கம்பளத்துக் கவண்டர்களாவது
கூத்திப்பாறை சந்தையில

5) காண்ட சம்பக் கவண்டர் கேசனக்கொண்டப்பக்
கவண்டர் வடபட்டி மல்லப்பக் கவ

6) ண்டர் மாறனேரி திருமலைக் கவண்டரும் களுகு
மலை கோதண்டராமக் கவண்டர் குண்டா

7) த்தங்கரையிலுள்ள பட்டக் கவண்டர்களும் தென்
சீமைக்குறியக் கவண்டரும் கல்லா

8) த்தங்கரையிலுள்ப் பட்டக் கவண்டர்களும் இந்த
நாங்கெல்லைக்குள்ப்பட்ட பேரனைவ

9) ருங்கூடி ஒப்பிட்டுப் பட்டைய மெழுதிக் குடுத்த
படிக்கு சிறுபாலை அச்சராமக் கவண்டர் வீர

10) ப்பனாயக்கரையனைக் கண்டு குண்டாத்துக்குத்
தெக்குச் சாதியிலுள்ப் பட்ட கம்பள

11) த்தாரை யினவரி வாங்க வேணுமென்று னாயக்
கரையணிருபமும் வாங்கி யூளிய

12) க்காரரையுங் கட்டிக் கொண்டு அதிவீரராமராசா
வையன் பண்டாரத் திருமுன் வந்

13) து கரையேறின படியினாலே யிதுகாரியத்துக்கு
வெண்பக்கோட்டை புல்லக் கவுண்டர் ர

14) ாசாவையன் பண்டாரத் திருமுன்னே கரையேறி
இனவரிக்கு வந்த அச்சராமக் கவண்ட

15) ருடனே பேசியினவரி தட்டிவிச்சதே யுண்டானால்
புல்லக்கவண்டர் பண்டாரப் பா

16) கத்துக்குப் பரிதான

பக்கம் 2

17) ஆயிரம் பொன் அஞ்ஞூறு பொன் கைக்கூலி
குடுத்துச் சிலவிட்ட சம்பந்த மெல்லாமிந்த
நாங்கி

18) கல்கைக்குள்ப் பட்ட சாதியா ரெல்லாருங்கூடி
வில்லுக் கொரு பணம் வரிப் போட்டு புல்லக் கவ

19) ண்டருக்கு யிறுத்துக் குடுப்போமாகவும் இந்தப்
படிக்குல்ப்பிட்டு*க் கூடின கம்பளத்திலே யாதா

20) மொரு[த்]தன் அச்சராமக் கவண்டருடனே கூடினதே
உண்டானாலவனை மேலைக் கோட்டைவா

21) சலிலே குடுத்துக் கீளைக் கோட்டை வாசலிலே
யிளுத்துப் போடுவோமாகவும் அவன் வீட்டை
யுங் கொ

22) ள்ளையிட்டுப் போடுவோ மாகவும் அவனைச்
சாதிக்குப் பிரம்பு பண்ணி தீய்த்துரைத்
தண்ணீர்த்து

23) றையும் மாத்தியவன் வீட்டிலே மாட்டலும்புங்
கட்டி விப்போமாகவும் இந்த நாங் கெல்கைக்
குள்ப் ப

24) ட்ட சாதியாரெல்லாரும் கொண்டாடப்பட்ட குலத்
தம்பிரானானையே ராசாவையன் பண்டாரப் பா

25) தத்தானையே னாயக்கரையன் பாதத்தானையே
தப்பாது யிதுக்கு

26) யாதாமொருவராகிலும் கிறுத்தவம் பண்ணினால்க்
கெங்கை கரையில்க் காராம் பசுவைக் கெ

27) கான்ற தோசத்தில்ப் போவாராகவும் இந்தப்படிக்கு
வெண்பக்கோட்டைப் புல்லக் கவண்டரு

28) க்கு ஒப்பிட்டுப் பட்டைய மெளுதிக் குடுத்தோம்
குண்டாத்தங் கரைக்குக் கொண்டப்பக் கவண்

29) டர் கேசனக் கொண்டப்பக் கவண்டர் வடபட்டி
மல்லப்பக் கவண்டர் திருயலைக் கவண்டர் கோ

30) தண்டராமக் கவண்[ட]ர் மற்றுண்டான கம்பளத்துக்
கவண்டர்களுந் தென்சீமைக்குறி

31) யக் கவண்டரும் கல்லாத்தங்கரையில் சேந்த கம்பளத்
தாருயிப்படி இவர்கள் செ

32) ால்ல சாதியாருடைய ஒப்புப் பட்டைய மெளுதினேன்
கன்னாடக தேசம் திரும

33) லையன் எளுத்து உ—ா++வ+வெ+ா+ெ+ை+++
--+++—

---

* யிந்தப்படிக்குட்பட்டு - என்று இருத்தல் வேண்டும்.